TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS-28.
LIBRARY.
Acc No.
Date

# குடுமியான்மலை

ஆசிரியர்

சொ. சாந்தலிங்கம். எம், ஏ.,
அருங்காட்சியகக் காப்பாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியிட்டோர்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

1981.

முதற் பதிப்பு 1981.
த. நா. தொ. ஆய்வுத்துறை, வெளியீடு எண்: 77.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No.
Date
MADRAS-28.

© த. நா. தொ. ஆய்வுத்துறை.

ஆசிரியர்
சொ. சாந்தலிங்கம். எம். ஏ.

விலை. ரூ. 8-50

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால்
துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

# உள்ளடக்கம்


குடுமியான் மலை

ஊர் அமைவு 1
நாட்டுப் பிரிவுகளில் குடுமியான்மலை 3
வரலாற்றுப் பின்னணி 7

கோயில்கள்

குடைவரைக் கோயில் 19
சவுந்திர நாயகி அம்மன் கோயில் 33
குடுமிநாதர் கோயில் 37
அகிலாண்டேஸ்வரி அம்மன் ஆலயம் 63
முருகன் கோயில் 69
கலைச் செல்வங்கள் 71
சிற்பச் செல்வங்கள் 78

கல்வெட்டுச் செய்திகள்

கல்வெட்டுக்கள் 89
இசைக் கல்வெட்டு 90
அரசகுலம் 102
சிறப்புச் செய்திகள் 109
கல்வெட்டுப் பாடல்கள் 126

பிறசெய்திகள்

பூசைகள், விழாக்கள் 120
ஊரைச் சுற்றி 133
சிறு தெய்வங்கள் 136
பாமரர் பாடல்கள் 139

பிற்சேர்க்கை

கல்வெட்டுகள் 143
பாமரரின் பக்திப்பாடல்கள் 159

# பதிப்புரை

தமிழகக் கோயில்களைப் பற்றி ஏதுமே தெரியாது. கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றியும், அவற்றோடு பிணைந்து விளங்கும் ஊர் வாழ் மக்கள் பற்றியும் ஏதும் தெரியாது. அப்படியிருக்கும் மாணவரை ஒரே ஆண்டில் இதுபோல் ஒரு நூல் படைக்க உருவாக்குகிறது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை நடத்தும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் என்றால் அது பெருமைக்குரிய செய்திதானே! இதுபோலத் தமிழக ஊர்களைப் பற்றியும், கோயில்களைப் பற்றியும் எத்தனை நூல்கள் வர வேண்டும்! அவற்றை எழுத எத்தனை இளைஞர்களை உருவாக்க வேண்டும்! அந்தப் பணியில் ஈடுபட்டு உள்ளது இந்தக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம். இந்நூலை நல்ல நடையில், கருத்துக்களை மிகுந்த உணர்ச்சியோடு வெளியிடும் திரு. சொ. சாந்தலிங்கம் போன்ற இளைஞர்களின் ஆர்வத்தை நல்லாறு படுத்தி நடாத்திச் செல்வதில் பெருமை கொள்கிறது இத்துறை. இவர்களது ஆய்வுகளை நூலாக்குவதிலும் பெருமை அடைகிறோம்.

இரா. நாகசாமி

# ஊர் அமைவு

**ஊர் :**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர் குடுமியான் மலை. புதுக்கோட்டையிலிருந்து விராலிமலை வழியாகத் திருச்சிக்குச் செல்லும் சாலையில் 20-வது கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர். புதுக்கோட்டையிலிருந்து நகரப் பேருந்துகள் இவ்வூர் வழியாக அருகிலுள்ள பரம்பூர் செல்கின்றன. இவ்வூரின் மேற்கே 25 கி.மீ தொலைவில் உள்ளது தமிழ்க்கலை மணக்கும் கொடும்பாளூர். தமிழ் நாட்டின் ஓவியக்கலைக்குத் தனிப்பெருஞ் சான்றாய்த் துலங்கும் சித்தன்னவாசல் இவ்வூரின் கிழக்கே 10 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. தொன்று தொட்டு சோழ நாட்டிற்கும், பாண்டிய நாட்டிற்கும் எல்லையாய் விளங்கிய வெள்ளாறு இவ்வூரின் தெற்கே ஒரு கி. மீ. தொலைவில் அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. இங்குள்ள நெடி துயர்ந்த கடினமான பாறை (Granite) யால் ஆன ஓங்கிய மலையின் எதிராக (கிழக்கில்) அமைந்துள்ளது ஊர்.

மலையை ஒட்டி கிழக்கில் அமைந்துள்ளது குடுமிநாதர் கோயில். அதன் பழமையான கோபுரம் ஊருக்குத் தொலைவில் வரும்போதே நம் பார்வையில் படுகிறது. தம்பிக்கிணறு, அண்ணன் கிணறு, செங்கழுநீர் ஓடை என்ற சில குறிப்பிடத்தக்க நீர் நிலைகளும் இவ்வூரின் தெற்கு, வடக்குத் திசைகளில் அமைந்துள்ளன. இங்கு அமைந்துள்ள அண்ணா விதைப்பண்ணை தமிழக விவசாயிகள் மத்தியில் சிறப்புப் பெற்ற ஒரு பெரிய ஆய்வு அமைப்பாகும்.

**பெயர் :**

'குடுமியான்மலை' என்பதே தொன்றுதொட்டு வழங்கிய, பழம்பெயராக இருக்கவேண்டும்[1] "ஆயிரம் வேள்விகள் ஆக்கியோன்" எனசின்னமனூர்ச் செப்பேட்டாலும், கொல் யானை

1. கலைமகள், மே. 56 - கல் சொல்லும் கதை சா. கணேசன் பக். 588-89,

பலவோட்டிக் கூடா மன்னர் குழாந் தவிர்த்த பல்யாக முது குடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியாதிராசன்" என்று வேள்விக்குடிச் செப்பேட்டாலும் பாராட்டப்படும் பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியை நாம் அறிவோம். இவனது இயற் பெயர் குடுமி என்பது. அப்பெயர் காரணமாகவே இம்மலைக்கும், கோயிலுக்கும், இறைவனுக்கும் இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். "குன்றின் சிகரத்தைக் குடுமி என்னும் சொல் உணர்த்தும். எனவே அக்குன்றுடைய பெருமான் குடுமியான் எனப்பட்டார். நாளடைவில் பழம் பெயர் மறைந்து குடுமியான் மலை என்றே ஊரும் பெயர் பெற்றது"[2] என்ற கருத்தும் உண்டு. எனினும் கி. பி. 17 ஆம் நூற்றாண்டில்தான் குடுமியான்மலை என்ற பெயர் கல்வெட்டுகளில் இடம் பெற்றது.

2. ஊரும் பேரும். ரா. பி. சேதுப்பிள்ளை. பக். 174

# நாட்டுப் பிரிவுகளில் குடுமியான்மலை

## ஊர்ப்பெயர்

இன்று குடுமியான்மலை என்று பெயர்பெற்று விளங்கும் இவ்வூர் பண்டைக் காலத்தில் வேறுசில பெயர்களாலும் வழங்கி வந்துள்ளது. திருநிலக்குன்றம், திருநலக்குன்றம், சிகாநல்லூர், குடுமியான்மலை என்ற பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப் படுகின்றன. முற்காலப் பாண்டியர் காலத்தில் திருநலக் குன்றம் என்றும், திருநிலக்குன்றம் என்றும் பெயர் வழங்கி யுள்ளது. இது கி. பி. எட்டாம் நூற்றாண்டுப் பெயரா கும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் இராஜராஜன் காலத்தில்தான் முதன்முதலில் சிகாநல்லூர் என்ற பெயர் வழக்கில் வந்தது (பு. கோ. க. 136). ஆனால் தொடர்ந்து இப்பெயரே வழங்கப்படவில்லை. இடையிடையே திருநலக் குன்றம் என்ற பழைய பெயரும் இருந்து வந்தது. திருநலக் குன்றம் என்ற பெயர் இறுதியாகக் கிருட்டிணதேவராயர் காலம்வரை (கி. பி. 1527) வழங்கியுள்ளது (பு. கோ. க. - 741). சிகாநல்லூர் என்ற பெயர் இறுதியாக மல்லப்ப பல்லவராயர் காலத்தில் கி.பி. 1625 வரை வழக்கில் இருந்தது. ஏறக்குறைய இதே காலத்தில் இதே மல்லப்ப பல்லவராயர் காலத்தில்தான் இன்று நிலைத்துள்ள குடுமியான்மலை என்ற பெயர் வழக்கில் வரத்தொடங்கியது (பு. கோ. க. - 909).

## நாட்டுப்பிரிவு

முற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களிலும், முற்காலச் சோழர் கல்வெட்டுக்களிலும் இவ்வூர் குன்றியூர் நாட்டில் அடங்கியிருந்தது என்று அறியலாம் (பு. கோ. க. - 238,34,57). பிற்காலக் கல்வெட்டுக்களில் இவ்வூர் கோனாட்டில் அடங்கிய தாகக் கூறப்படுகிறது. கோனாடு என்பது சங்ககாலத்தி லேயே இருந்துள்ளது. புறநானூற்றில் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரன் என்னும் புலவர் குறிக்கப்படு கிறார். இக் கோனாடு என்பது புறநானூற்றில் பாடப்பெற்ற

இருங்கோவேளின்[1] பெயரால் இருங்கோனாடு என்று வழங்கியதன் சுருங்கிய வடிவமே என்பார் திரு. சுப்பாராயலு. ஆனால் இக் கோனாடு கி. பி. 988-இல் தான் முதன்முதலில் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. முதல் இராஜராஜன் தான் நிர்வாக எளிமைக்காக தன் நாட்டை பல பிரிவுகளாகப் பிரித்து வளநாடு என்றும், நாடு என்றும் பெயரிட்டான். அப்போது இக்கோனாடு கேரளாந்தக வளநாட்டின் ஒரு பிரிவாக இருந்தது. கி.பி. 1056க்குப் பிறகுதான் இது தனியே பிரிந்து இரட்டப்பாடி கொண்ட சோழவளநாடு என்று பெயர்பெற்றது. அதுவே பின்னர் கடலடையாதிலங்கை கொண்ட சோழ வளநாடு என்றும் அழைக்கப்பட்டது.[2] இக் கோனாடு பிற்காலத்தில் தென் கோனாடு, வட கோனாடு என்ற பிரிவுகளும் கொண்டது.

குடுமியான்மலை முதல் குலோத்துங்கன் காலத்தில் இரட்டப்பாடி கொண்ட சோழ வளநாட்டுள் அடங்கியிருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன (பு. கோ. க. - 124). மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரை இப்பெயரே இருந்து வந்தது. இரண்டாம் இராஜராஜன் காலத்தில் இதுவே கோனாடான இரட்டப்பாடி கொண்ட சோழ வளநாடு (பு.கோ.க. - 181,182,187,188)என்றும் பெயர் பெற்றது.

மூன்றாம் குலோத்துங்கனின் 34 ஆம் ஆட்சி யாண்டிலிருந்து இதுவே கோனாடாக கடலடையா திலங்கை கொண்ட சோழவளநாடு எனப்பெயர் மாற்றம் பெற்றது. இப்பெயரே பிற்காலப் பாண்டியர் காலத்திலும் வழங்கியது. முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இது தென்கோனாடு எனப்பட்டது (பு.கோ.க-249). கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை கடலடையா திலங்கை கொண்ட சோழ வளநாடு என்றும் தென்கோனாடு என்றும் வழங்கப்பட்டு வந்தது. (பு.கோ.க.-756).

## உட்பிரிவுகள்

முதல் குலோத்துங்கன் காலத்தில் உட்பிரிவுகள் ஏதும் இல்லை. இரண்டாம் இராஜ ராஜன் காலத்தில் குடுமியான்

1. புறநானூறு 54, 61, 167, 201, 202
2. Political geography of the Chola mandalam. P. 73.

மலை குன்றியூர் நாட்டில் (பு.கோ.க-135) அடங்கியது. இதுவே பல கல்வெட்டுகளில் குன்று சூழ்நாடு என்றும் பெயர் பெறுகிறது. பிற்காலப்பாண்டியர் காலத்திலும் (பு.கோ.க-249,367). குன்றுசூழ் நட்டில் அடங்கியிருந்தது. கி.பி. 1510-ல் இவ்வூர் உறத்தூர்க் கூற்றத்தின் ஒரு பகுதியானது. (பு.கோ.க-726) கி. பி. 1551-ல் மீண்டும் குன்றுசூழ் நாட்டிலேயே அடங்கியது. பின் கி. பி 1551-ல் உறத்தூர்க் கூற்றத்திலும், (பு.கோ.க-756) 1615-ல் எல்லையூர்க் கூற்றத்திலும் (பு.கோ.க-866) இவ்வூர் அடங்கியிருந்தது. பின்வந்த தொண்டைமான்கள் ஆட்சியில் நாயக்கர்களால் பிரிக்கப்பட்ட மருங்காபுரி[3] பாளையத்தில் கட்டுப்பட்டு இவ்வூர் இருந்தது. இந்திய விடுதலைக்குப் பின் திருச்சி மாவட்டத்தில் இருந்தது. 1973 ஆம் ஆண்டு புதுக்கோட்டை தனி மாவட்டமானபோது குளத்தூர் தாலுக்காவில் அடங்கிய ஒரு பகுதியானது இன்றைய குடுமியான்மலை.

3. A General History of the Pudukkottai State. P. 96.

# வரலாற்றுப் பின்னணி

குடுமியான்மலை பல நூற்றாண்டுகளாக கோனாட்டின் ஒரு பகுதியாக அமைந்திருப்பதால், கோனாட்டின் ஒட்டு மொத்தமான, பொதுவான வரலாற்றை அறிவது குடுமியான் மலையின் வரலாற்றை முழுமையாகவும், அதன் பின்புலத்தையும் அறிய துணை புரியும்.

## பெருங்கற்காலம்

வரலாற்றுக்கு முற்பட்டகாலம் என்று கருதப்படும் காலங்களிலும் இப்பகுதியில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பெருங்கற்காலச் சின்னங்களாகக் கருதப்படும் கல்பதுக்கை (Slab cist) போன்றவை இப்பகுதியில் காணப்படுகின்றன. குடுமியான்மலையிலோ அதை ஒட்டிய அண்மைப் பகுதியிலோ இச்சின்னங்கள் இல்லை என்றாலும் சித்தன்னவாசல் போன்ற சுமார் 10 கி. மீ. தொலைவில் உள்ளபகுதிகளில் இவை ஏராளமாக உள்ளன. மேலும் ஆரணிப்பட்டி, வைத்திகோயில், பெருங்குளூர், தென்னங்குடி, காரையூர், கீரனூர், மாஞ்சன் விடுதி, கலசமங்கலம் போன்ற ஊர்களிலும் பெருங்கற் சின்னங்கள் காணப்படுகின்றன.[1] இவை கொண்டு அக்காலத்திலேயே இப்பகுதியில் மக்கள் வாழ்துள்ளனர் என்று உறுதியாக நம்பலாம்.

## சமணர் உறைவிடம்

கோனாட்டின் பல பகுதிகளில் சமணர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் இங்கு நிரந்தர பள்ளிகளும், கோவில்களும் எடுத்துள்ளனர், வெள்ளனூர், திருப்பூர், அம்மாசத்திரம், கீழதணியம், தேனிமலை, நார்த்தாமலை, சித்தன்னவாசல், ஆளுருட்டிமலை, பள்ளிவயல், மலையக்கோயில் போன்ற இடங்களில் பல சமணச் சிற்பங்கள் காணக்கிடக்கின்றன. தேனிமலை, நார்த்தாமலை, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் சமணக் கோயில்களும், அதில் முக்குடை அருகர் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.[2] இன்றைய குளத்தூர் வட்டத்தில் அடங்கி

யுள்ள செட்டிபட்டி, ஆலங்குடிப் பட்டி ஆகிய ஊர்களில் புத்தர் சிலைகள் இருந்தமை அறியப்பட்டன.[3] சித்தன்னவாசலில் மலை உச்சியில் ஏழடிப் பட்டம் என்னுமிடத்தில் சமணர் படுக்கைகளும், அதில் தமிழிக் கல்வெட்டுகளும் உள்ளன. இக்கல்வெட்டின் காலம் கி. மு. 3ஆம் நூற்றுண்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சான்றுகள் அனைத்தையுங் கொண்டு கி. மு. 3, 2 ஆம் நூற்றாண்டுகளிலும் இங்கு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது பெறப்படும்.

## சங்க காலம்

சங்க காலத்தில் இப்பகுதியில் யார் ஆண்டனர் என்பதற்குத் தெளிவான சான்றுகள் இல்லை. ஆனால் புறநானூறு பாடிய புலவர்களில் ஒருவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரன் (புறம். 54, 61, 167)என்று குறிக்கப்படுகிறுர். மேலும் கபிலர், இருங்கோவேள் என்ற மன்னனிடம் பாரி மகளிரை மணக்கவேண்டிப் பாடிய பாடல்களைக் (புறம். 201,202) கொண்டு புறநானூற்றுக் காலத்தில் இப்பகுதியில் இருங்கோவேள் என்னும் மரபினர் ஆண்டனர் என்று கொள்ளலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் இளமைக் காலத்திலேயே சேர, சோழர்களுடன் ஐம்பெருவேளிரும் சேர்ந்து போரிட்டுத் தோற்றனர் என்று புறநானூறு கூறும் (புறம்76). இங்கு குறிப்பிடப்படும். ஐம்பெருவேளிருள் கோனாட்டை யாண்ட இருங்கோவேளிரையும் ஒருவராகக் கொள்வதில் தவறில்லை.

## முற்காலப் பான்டியர் காலம்

ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் களப்பிரர்களை வென்று கடுங்கோன் என்னும் பாண்டியன் பாண்டிய அரசுக்கு வழிகோலினான். அவனுக்குப் பின் வந்த அரசர்கள் தங்கள் ஆட்சி எல்லையை விரிவு படுத்தினர். அவர்கள் அளித்த கொடைகள்பற்றிய செய்திகளைக்கூறும் கல்வெட்டுகள் இப்பகுதியில் பல கோயில்களில் இருப்பதனால் அவர்களது ஆட்சி இங்கு பரவியிருந்தமை உணரப்படும். இச்சமகாலத்தில் முதலாம் மகேந்திரன் திருச்சியோடு புதுக்கோட்டைப் பகுதியையும் ஆண்டான்

1-3, A General History of the Pudukkottai State P. 48, P. 73,

என்பார் டாக்டர் மீனாட்சி.[4] ஆனால் இதற்கு சான்றுகள் எதையும்அவர் கொடுக்கவில்லை. இதுநாம் ஒத்துக்கொள்ளத் தக்கதாயில்லை. மேலும் குடுமியான்மலைக் குடைவரைக் கோயிலில் உள்ள சடையன் மாறன்,மாறஞ்சடையன் கல்வெட்டுகளும், சித்தன்ன வாசலில் உள்ள ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் கல்வெட்டும் இப்பகுதியில் முற்காலப் பாண்டியர்கள் ஆண்டனர் என்பதை வலியுறுத்தும். மேலும் பாண்டி நாடு வெள்ளாற்றின் வடகரை வரை பரவியிருந்தது என்றும், வெள்ளாறே அதன் வடஎல்லையாக இருந்தது என்றும் அறிகிறோம்.

"வெள்ளா றதுவடக்காம்; மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்-உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம்; ஐம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி"[5]

என்ற பாடல் இதனை உணர்த்தும்.

## முத்தரையர் காலம்

தமிழகத்தில் முத்தரையர் பற்றிய முதற்குறிப்பு "முத்தரைசர் நாடுபரவிய ஞான்று" என்று முதலாம் நரசிம்மனின் நடுகல்லில்தான் காணப்படுகிறது[6]. முத்தரையர் பற்றிய செந்தலைத் தூண் கல்வெட்டு அவர்களது பரம்பரையை ஓரளவு புரிந்து கொள்ள உதவுகிறது. அவர்களுள் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஒரு பிரிவினரும், வல்லத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு பிரிவினரும் ஆண்டுள்ளனர்.

இம் முத்தரையர்களில் ஒருவனான சுவரன் மாறன் கோனாட்டு மக்களுடன் கண்ணனூர், கொடும்பாளூர் ஆகிய இடங்களில் போரிட்டுள்ளான்.[7] இருக்கு வேளிர்களுடன் இவன் போரிட்டிருக்கலாம். கோனாட்டின் உள்ளடங்கிய மலையடிப் பட்டிக் குடைவரைக் கோயிலில் குவாவன் என்பவனின் கல் வெட்டு உள்ளது.[8] எனவே இப்பகுதியில் முத்தரையரின் ஆதிக்கம் இருந்தது என்பது உறுதிப்படுகிறது.

---

4. Administration and Social life Under the Pallavas-P. 246.
5. பாண்டிய மண்டலச் சதகம்.
6. செங்கம் நடுகற்கள் - பக், 22.
7. முத்தரையர் - பக். 56.
8. தமிழகம் - பக். 69.

சோழர்களின் எழுச்சிக்குப் பிறகு அவர்களுக்கு உட்பட்டே முத்தரையர்கள் ஆண்டுவந்துள்ளனர். சுந்தர சோழன் காலத்தில் இப்பகுதியில் ஆண்ட முத்தரையர்கள், செம்பியன் இருக்குவேளானுக்குப் பெண் கொடுத்து மண உறவு. வைத்துக் கொண்டனர் என்று குடுமியான் மலைக்கல்வெட்டு (பு.கோ.க. - 45) கூறுகிறது. ஓரளவுக்கு உரிமையுடன் ஆண்ட இவர்களால் சோழமன்னர்களுக்கு அடங்கி வாழ இயலவில்லை போலும். சிறுகச்சிறுக வெளியேறத் தலைப்பட்டனர். அவ்வாறு சென்றவர்களே கொங்கு நாட்டில் கொங்குச் சோழர்கள் என்ற பெயரில் சிற்றரசர்களாக அரசு செலுத்தினர்.[9]

## இருக்குவேளிர்

வேளிர்களைப் பற்றி சங்கத் தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் குறிப்புகள் காணலாம். "தொன்முது வேளிர்" (புறம்.24,அக.258) என்று அவர்கள் சில இடங்களில் அழைக்கப் பட்டுள்ளனர். கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று,

"நீயே வடபான் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங் கோவே"—(புறம் 201)

என்று இருங்கோவேள் பற்றிக் குறிப்பிடுகின்றது. வடநாட்டில் முனிவர் ஒருவரின் ஓமகுண்டத்தில் தோன்றி துவாரகையை ஆண்டு வந்த வேளிர்களின் நாற்பத்தொன்பது தலைமுறைக்குப் பின்வந்த இருங்கோவேள் என்று கூறுகிறது அப்பாடல். இவர்கள் துவாரகையின் கண்ணன் மரபினர் என்றும், யாதவர் என்றும் பேசப்படுவர். கொடும்பாளூர்க் கோயில் கல்வெட்டு (பு.கோ.க 14) ஒன்றின் மூலம் இவ்வேளிர்களின் எட்டுத் தலைமுறையினரை அறிந்து கொள்ள முடிகிறது. பரவீரஜித், வீரதுங்கன், அதிவீர அனுபமன், சங்ககிருதன், நிருபகேசரி, பரதுர்க்க மர்த்தனன், சமராபிராமன், பூதிவிக்ரமகேசரி என்ற பெயர்களே அவை. இருங்கோவேள் என்பதே நாளடைவில் இருக்குவேள் என ஆயிற்று என்பர்,

9. கோவை மாவட்ட வாலாற்றுக் கருத்தரங்கு மலர்.

இவ்விருக்குவேளிர் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு கோனாட்டை ஆண்டு வந்தனர். பல்லவரையும், பாண்டியரையும் போரில் வென்று காவிரியை இரத்த ஆறாக்கினர் என்று கொடும்பாளூர்க் கல்வெட்டு கூறும். தஞ்சையில் சோழ அரசர்களின் எழுச்சியில் முக்கிய பங்கு பெற்றவர்கள் இவர்கள். இருக்குவேளிரின் உதவியின்றிப் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த முத்தரையர்களை விஜயாலயன் வென்றிக்க முடியாது[10] என்பர் வரலாற்றறிஞர்". சமராபிராமன் என்னும் இருக்குவேளிர் மன்னனே விஜயாலயனுக்கு உதவியவன். அதற்குக் கைமாருக விஜயாலயன் இவனைக் கொடும்பாளூர்த் தலைவனாக்கி, குமராங்குசனின் வழி வந்த அனுபமா என்ற சோழ அரசியையும் மணமுடித்து வைத்தான். இருக்குவேளிர் முத்தரையர்களோடு மணவுறவு கொண்டனர். இவர்களின் கோயிற்பணிகளில் மிக முக்கியமானது கொடும்பாளூரில் பூதி விக்கிரம கேசரியால் எடுக்கப்பட்ட மூவர் கோயிலாகும். பல கோயில்களுக்கும் பல்வேறு கொடைகள் அளித்துள்ளனர் குடுமியான்மலைக் கல்வெட்டுகள் மூலமும் இவற்றை அறியலாம். இவர்கள் சோழர்களின் ஆட்சிக்காலத்தில் படைத்தலைவர்களாவும் முக்கிய அதிகாரிகளாகவும் விளங்கினர். செம்பியன் இருக்குவேளார், மகிமாலய இருக்குவேளார், வீரசோழ இளங்கோ வேளார் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

## சோழர்காலம்

விஜயாலயனால் உருவாக்கப்பட்ட சோழப் பேரரசு அவனுக்குப்பின் வந்தவர்களால் விரிவடைந்து வலிமை பெற்றது. முதல் ஆதித்தன் இப்பகுதிகளில் திறம்பட ஆட்சி நடத்தி முத்தரையர்களையெல்லாம் சிற்றரசர்களாகக் கொண்டு ஆண்டான் என்பதற்குக் குடுமியான்மலைக் குடைவரைக் கோயிலிலேயே கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[11] இவனுக்குப் பின் ஆண்ட அரசர்களில் கண்டராதித்தன் சுந்தர சோழன் காலம் வரையிலும் இங்கு கல்வெட்டுகள் உள்ளன. ஆனால் சோழப் பேரரசின் தனிப்பெரும் வேந்தனாகிய இராஜ ராஜன் காலத்தையும், அவன் மகன் இராசேந்தரன்,அவன் வழி

10. Historical Sketches of ancient Deccon. Vol. II. P, 200.
11. S. I. I. XIII, 213, 288.

யினர் காலத்தையும் சேர்ந்ததாக குடுமியான் மலையில் கல்வெட்டுச் சான்றுகள் ஏதும் இதுகாறும் கிடைக்கவில்லை.

முதல் குலோத்துங்கன் காலம்தொடங்கி மீண்டும் சோழர்கள் ஆட்சி இப்பகுதியில் நீடிந்தமைக்கு மிகப்பல சான்றுகள் உள்ளன. அவர்களில் பலர் அரிய பல கொடைகளை இங்குள்ள கோயில்களுக்கு விட்டுச் சென்றுள்ளனர். எனவே மூன்றும் இராசராசன் காலம் வரை சோழர் ஆட்சி இப்பகுதியில் சிறந்து விளங்கியது எனலாம். மூன்றாம் இராசராசனின் திறமைக் குறைவினால் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இப்பகுதியைக் கைப்பற்றி ஆளத்தலைப்பட்டான்.

## பிற்காலப் பாண்டியர் காலம்

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1218-ல் அரியணையேறினான். மறு ஆண்டே மூன்றாம் இராசராசனை வென்றான். இவனது மூன்றாம் ஆட்சியாண்டிலிருந்தே இவனது கல்வெட்டுகள் (248,249-பு.கோ.க) குடுமியான்மலைக் கோயிலில் காணப்படுகின்றன. இவன் காலத்தில் இக்கோயிலில் பல கட்டிடப்பகுதிகள் கட்டப்பட்டன. உயர்ந்த கோபுரமும் இவனால்தான் கட்டப்பட்டிருக்க வேண்டும். இவன் காலத்திற்குப்பின் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் குலசேகரபாண்டியன், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் போன்றவர்கள் இப்பகுதியில் ஆண்டார்கள் என்பதைக் கல்வெட்டுகள் கொண்டு அறியலாம். ஜடாவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1253) காலத்தில்தான் குடுமியான்மலையில் சவுந்தர நாயகியம்மன் கோயில் கட்டப்பட்டது.

(266-பு.கோ.க)

## வாணாதிராயர்

மூன்றாம் குலோத்துங்கனின் 34 ஆம் ஆண்டுக் கல்வெட்டு (166-பு.கோ.க) ஒன்றில் வாணாதிராயன் என்னும் ஒரு அதிகாரி குறிக்கப்படுகிறான். முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன்,

"செம்பியனைச் சினமிரியப் பொருதுசுரம் புகவோட்டிப்
பைம்பொன் முடிபறித்துப் பாணருக்குக் கொடுத்தருளி"

னான் என அவனது மெய்க் கீர்த்திகளின் மூலம் அறிகிறோம். எனவே பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக வாணாதிராயர்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டில் கோனாடு, கேரளசிங்க வளநாடு ஆகிய பகுதிகளில் ஆண்டனர். முதல் மாறவர்மன் குலசேகரபாண்டியன் காலத்தில் கோனாட்டுப் பகுதியைக் குலசேகர மாவலிவாணராயன்[12] என்பவன் ஆண்டான். திருமெய்யம் தாலுகா சேவலூர், நெக்கோணம் கல்வெட்டுகளைக் கொண்டு இப்பகுதியில் மாவலி வாணாதிராயர் ஆட்சியையும் அவர்தம் சிறப்புகளையும் அறியலாம். இக்கல்வெட்டுகள் சமர கோலாகலன், புவனேகவீரன், மாவலிவாணாதிராயன் திருமாலிருஞ்சோலைநின்றான், கருடகேதனன் போன்ற பலபட்டப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவன் பாண்டியர்களை வெற்றிகண்டவன். அழகர்மலைத் திருமால் மீது அளவில்லா பக்தி கொண்டவன் என்பதை இவன் பட்டப் பெயர்கள் மூலம் அறிகிறோம்.[13] சமரகோலாகலன், புவனேகவீரன் எனும் பெயர் கொண்ட காசுகளும் இவர்களால் வெளியிடப்பட்டன. இவர்கள் கருடக் கொடியினை உடையவர்கள் என்பது குடுமியான்மலைக் கல்வெட்டு (கோ. க.674-பு.) ஒன்றின் மூலம் பெறப்படும். இங்குள்ள பல பாடல்கள் மூலம் இப்பகுதியில் இவர்கள் செல்வாக்கோடு திகழ்ந்தார்கள். பாண்டியர்களை வென்று ஆண்டார்கள் என்று அறிய முடிகிறது. இவர்கள் தங்களை மாபலியின் வழிவந்தவர்கள் என்று கூறிக் கொள்வர். கி. பி. 15, 16 ஆம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை இவர்கள் ஆதிக்கம் பொன்னமராவதிப் பகுதியில் இருந்துள்ளது.[14]

## நாயக்கர் காலம்

விஜயநகர அரசர்கள் தமிழகம் நோக்கி வந்தபோது கோனாட்டுப் பகுதியும் அவர்கள் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இப்பகுதியில் வீரபிரதாபராயர், கிருஷ்ணதேவராயர், சதாசிவராயர் போன்ற விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுகள் அவர் ஆட்சியின் பரப்பை விளக்கி நிற்கின்றன. இவர்கள் காலத்தில்

12. பாண்டியர் வரலாறு - பக். 146.
13. கல்வெட்டு - காலாண்டிதழ் இராட்சச - ஆடி - பக். 2.
14. A General History of the Pudukkottai State P. 82, P. 97

தங்களின் பிரதிநிதிகளாக, தங்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றர சர்களாகப் பல்லவராயர்களை வைத்து ஆண்டனர்.

## பல்லவராயர்

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருகோகர்ணம், குடுமி யான்மலை, திருவரங்குளம் முதலிய ஊர்களில் பல்லவராயர் களின் கல்வெட்டுகள் அதிகமாக உள்ளன. கி. பி. 1378 ஆம் ஆண்டு விராச்சிலைக் கல்வெட்டு இவர்கள் 14-ஆம் நூற்றாண் டின் மத்தியிலேயே இங்கு வாழ்ந்தனர் என்று கூறும்.[15] இவர்கள் வழுத்தூர் பல்லவராயர், பெருங்குளூர் பல்லவ ராயர் எனப் பெயர் பெற்றனர். இதே காலத்தில் குளத்தூர் வட்டம் வைத்தூரிலும் வாழ்ந்துள்ளனர்.

பல்லவராயர்கள் தொண்டை மண்டலத்திலிருந்து பாண்டி மண்டலத்தில் புதிய குடியிருப்புகளை அமைத்து ஆண்டவர்கள் என அறிகிறோம். காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ள கல்வெட்டு (S. I. I. VI. 348) சகம் 1391ல் புவனேகவீரன்என்ப வன் பாண்டி நாட்டில் ஏகாம்பரநாதர், காமாட்சி அம்மைக்குக் கோயில் எடுத்ததையும், அவ்வூருக்குப் புவனேக நல்லூர் என்று பெயரிட்டதையும் குறிப்பிடுகின்றது. சிவந்தெழுந்த பல்லவ ராயன் உலா[16], சிவந்தெழுந்த பல்லவராயனை 'மல்லையர் கோன்', 'மன்லையான்' என்று பலவாறாகக் குறிக்கிறது. இதன் மூலம் 15 ஆம் நூற்றாண்டில் காஞ்சியிலிருந்து புதுக் கோட்டைப் பகுதிக்குக் குடிபெயர்வு ஏற்பட்டதையும் மல்லை, காஞ்சி என்ற பெயர்களில் புதிய ஊர்கள் அமைக்கப்பட்ட தையும் உணரலாம்.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் இவர்கள் உயர்ந்த நிலை யில் இருந்தனர் இப்பலலவராயர்கள் படிப்படியாகத் தங்கள் ஆட்சிப் பரப்பை விரிவு படுத்திக் கொண்டனர். ஆதனக் கோட்டையிலிருந்து புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள கவிநாடு வரை தென் எல்லையாகவும், புதுக்கோட்டைக்குக் கிழக்கே 16

15. Ibid p.p. 97
16. கல்வெட்டு. ராட்சச ஆடி. பக். 12.

கீ. மீ. யில் உள்ள குலவைப்பட்டியை கிழக்கெல்லையாகவும், மேற்கே 19 கி. மீ. யில் உள்ள குடுமியான்மலையை மேற்கு எல்லையாகவும் கொண்டு ஆண்டனர்.

இப்பல்லவராயர்கள் இப்பகுதியில் உள்ள பல கோயில்களுக்கும் செய்துள்ள கொடைகளை கூறும் கல்வெட்டுகளைக்[17] கொண்டு இவர்களது ஆட்சிப் பரப்பினையும், அவர்கள் இன்னார் என்பதனையும் அறிந்து கொள்ளவும் முடிகிறது. இவர்களின் வரிசையில் குறிப்பிடத் தகுந்த முதல் அரசன் சிவந்தெழுந்த திருமலைராஜ பல்லவராயன் என்பவன் ஆவான் (பு.கோ.க. 752). இவன் கி.பி. 1539-இல் ஆண்டவன். இவனுக்கு அடுத்து அச்சுதப் பல்லவராயனும், இவன் மகன் மல்லப்ப பல்லவராயனும் ஆண்டனர். அச்சுதப் பல்லவராயன் மதுரை திருமலை நாயக்கனின் சமகாலத்தவன். மல்லப்ப பல்லவராயனின் மகள் வழிப்பேரனே சிவந்தெழுந்த பல்லவராயன். இவன் பல்லவராயர் மரபில் இறுதியாக ஆண்ட சிறந்த மன்னன் ஆவான். இவன் காலத்தில் குடுமியான்மலைக் கோயிலில் பல திருப்பணிகள் செய்தான், மலர்வனங்கள் வைத்தான் என்றும் வரலாறு கூறும். இவன் பெயரில் உலாவும், பிள்ளைத் தமிழும் அக்காலத்தில் எழுந்தன. சிறந்த சிவபக்தனான இவனை இராமநாதபுரம் சேதுபதியான கிழவன் சேதுபதியின் மகன் காளையார்கோயிலுக்கு அருகில் கந்ததேவி என்னும் இடத்தில் எதிர்பாரத விதமாகத் தாக்கிக் கொன்றான்.

### தொண்டைமான்களின் காலம்

சிவந்தெழுந்த பல்லவராயன் மறைந்த பிறகு இதே பகுதியை தொண்டைமான்களுக்குக் கொடுத்து ஆள ஏற்பாடு செய்தார் கிழவன் சேதுபதி. இவர்களும் பல்லவராயர்களைப் போன்று தொண்டை மண்டலத்திலிருந்து வந்தவர்களே. யானை பிடிப்பதில் திறமை சாலியாக இருந்த இவர்கள் புதுக்கோட்டைப் பகுதியில் வந்து குடியேறினர். இவர்கள் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பர்.[18] முதன் முதலாக முதல்

---

17. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் 353, 354, 355, 424, 587, 711 713, 714, 726, 745, 752.

18. A General History of the Pudukkottai State PP 113, 114, & 119.

இராசேந்திரனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் (கி. பி. 1116) நார்த்தாமலைக் கல்வெட்டில் தொண்டைமான் என்பவன் குறிப்பிடப்படுகிறான்.[19] இவன் அப்போது அந்தப்பகுதியில் ஒரு குறுநிலத் தலைவனாக இருந்திருக்கவேண்டும். குடுமி யான்மலையிலுள்ள மூன்றாம் குலோத்துங்களின் 34 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் தொண்டைமான் என்பவன் ஒரு அதிகாரியாக இருந்துள்ளான் (பு.கோ.க.-166) என்பதை அறிய லாம். எனவே சோழர் காலத்திலிருந்து தொடர்ந்து இப்பகுதி யில் தொண்டைமான்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது கொள்ளப்படும். பின் விஜயநகர அரசன் ரங்கராயன் ராமேசு வரம் செல்லும்போது கரம்பக்குடி என்னும் இடத்தில் யானை மதங்கண்டது. அவ்யானையை ஆவடை ரகுநாததொண்டை மான் என்பவர் அடக்கி அதற்கெனப் பலபரிசுகளும் பெற்றார்[20] என்பர். இவருக்குப் பின் வந்த ரகுநாதராய தொண்டைமான் என்பவரே சிவந்தெழுந்த பல்லவராயனுக்குப் பிறகு இப்பகுதி யை ஆளும் உரிமையைப் பெற்றார். அவருக்குப் பின் ஆண்ட தொண்டைமான்களை வரிசைபடக் காணலாம்,

ரகுநாதராய தொண்டைமான் (1686 - 1730)
|
விஜயரகுநாதராய தொண்டைமான் (1730 - 1769)
|
ராயரகுநாத தொண்டைமான் (1769 - 1789)
|
விஜயரகுநாத தொண்டைமான் (1789 - 1807)
|
விஜயரகுநாத தொண்டைமான் (1807 - 1825)
|
ரகுநாத தொண்டைமான் (1825 - 1839)
|
ராமச்சந்திர தொண்டைமான் (1839 - 1886)
|
மார்த்தாண்ட பைரவத்தொண்டைமான் (1886 - 1894)

---

19-20. Ibid PP. 114, 119

தமிழகத்தில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் விரிந்த போதிலும் புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் தனி அந்தஸ்து பெற்றே வாழ்ந்துவந்தனர். இந்திய விடுதலைக்கு முன் வரையும் இது ஒரு தனி மாநிலம் (Pudukkottai State) என்ற தனித் தகுதியைப் பெற்றிருந்தது. விடுதலைக்குப் பிறகு இந்தியக்குடியரசினுள் அடங்கிய பகுதியாயிற்று.

# குடைவரைக் கோயில்

மலையின் கிழக்காக, கிழக்கு நோக்கிக் குடையப்பட்ட கோயில். இதுவே இவ்வூரின் காலத்தால் முற்பட்ட கோயிலாகும். இதற்குப் பின்னர் எழுந்ததுதான் குடுமிநாதர் கோயில். இன்று சிகாநாதர் கோயில் என்று அழைக்கப்படுவதாகும். இச்சிகாநாதர் கோயிலுக்கு மேற்குப்புறமாக இக் குடைவரை அமைந்துள்ளமையால் இதை மேலைக்கோயில் என்றழைத்துள்ளனர். இக்கோயில் யார் காலத்தது என்பது பற்றி அறிஞர்கள் பலர் கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ளனர். அது பின்னர் வேறொரு தலைப்பில் ஆராயப்படுகிறது.

இக்குடைவரையின் தெற்காக அமைந்துள்ள ஓர் உயரமான பாறையில்தான் உலகமே போற்றுகின்ற இசைக்கல்வெட்டு உள்ளது. இக்கோயிலின் தென்கிழக்காகச் சற்று தள்ளி சவுந்தரநாயகி அம்மனின் கற்கோயில் ஒன்றும் உள்ளது. குகையின் வடக்காக ஒரு சிறு விநாயகர் கோயிலும் பிற்காலத்தாரால் கட்டப்பட்டுள்ளது.

## கல்வெட்டில் கோயில் - இறைவன் பெயர்கள்

இன்று இக்குடைவரை பரவலாக மேலைக் கோயில் என்று வழங்கி வந்த போதிலும் தொன்மையான பெயரை நாம் கல்வெட்டால் அறியலாம். முற்காலத்தில் இக்கோயில் திருமூலட்டானம் என்றும், திருமேற்றளி என்றும் பெயர் பெற்றுள்ளது. இங்கு காணப்படும் கல்வெட்டுகளிலேயே காலத்தால் முற்பட்டதாகக் கருதத்தக்க முற்காலப் பாண்டியரின் கல்வெட்டு திருமூலட்டானம் (பு. கோ. க. - 238) என்றே குறிப்பதால், முன்னைய பெயர் அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்றும், அதாவது பிற்காலத்தில் - சோழர் காலத்தில் திருமேற்றளி (பு.கோ.க.-34)எனப்பட்டது என்றும் கருதலாம்.

இறைவன் பெயர் கல்வெட்டுக்களில் திருமூலட்டானத்துப் பெருமானடிகள் என்றும், திருமூலட்டானத்து மகாதேவர்,

திருமூலட்டானத்துப் பரமேஸ்வரன், (பு.கோ.க. - 70) திருமேற்றளிப் பெருமானடிகள், திருமேற்றளி மகாதேவர், குன்றிடங்கொண்ட நாயனார் (பு. கோ. க.-741) என்றும் பலவித பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளது.

## கோயில் அமைப்பு

ஒரு சதுரமான கருவறையும், அதன் முன்பாக ஒரு நீண்ட முன்மண்டபமே மலையில் குடையப்பட்டவை. இதனை ஒட்டிப் பிற்காலச் சோழர்கள் ஒரு முன்மண்டபத்தை எடுத்துள்ளனர். இதற்கும் அடுத்து ஒரு முகமண்டபமும், அதற்கும் அடுத்து வெளி மண்டபமும் பிற்காலத்தவரால் கட்டப்பட்டுள்ளன.

### கருவறை

கருவறையின் வாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கிழக்கு மேற்காக 12 அடி நீளமும், தெற்கு வடக்காக 13 அடி அகலமும் கொண்டது கருவறை.

கருவறையின் நான்கு உட்சுவர்களிலும் எத்தகைய சிற்பங்களும் இல்லை. மேல்தளம் நன்கு பொழிவு செய்து சமன் செய்யப்பட்டுள்ளது. மேற்குச் சுவரில் லிங்கத்திற்கும் பின்னால் ஒரு முக்கோண வடிவச் சிறிய குழி வெட்டப்பட்டுள்ளது. இது விளக்கு வைப்பதற்காக இருக்கலாம். லிங்கம் 5' × 5' சதுரமான பீடத்துடன், சுமார் 6 அடி உயரமானது. பட்டைகள் ஏதும் இன்றி சாதாரண உருண்டை அமைப்பில் உள்ளது. பிரணாளம் வலது பக்கத்தில் உள்ளது. பிரணாளத்தின் நீர் விழுவதற்கு அதற்குக் கீழே ஒரு சதுரமான சிறிய குழியும், அது வெளியேபோவதற்குக் குறுகிய வாய்க்கால் ஒன்றும் தளத்தில் வலப் புறமாக வெட்டப்பட்டுள்ளன.

கருவறையின் நுழைவாயிலில் மூன்றுபடிகள் இருக்கின்றன. அதில் தரையோடு இருக்கும் முதல் படி அர்த்தசந்திர வடிவத்தில் வெட்டப்பட்டுள்ளது. இதே போன்ற படியமைப்பை நாம் குன்றக்குடி குடைவரைக் கோயிலில் காணலாம். ஏனைய இரண்டு படிகள் சாதாரண அமைப்பைக் கொண்டவையே. வாயிலின் மேற் பகுதியில் நான்கு பூத கணங்கள் பறக்கும் நிலையில் வடிக்

கப்பட்டுள்ளன. தென்புற நிலைத்தூணில் விளக்கு வைப்பதற்கெனச் சிறிய முக்கோணப் பிறை ஒன்று வெட்டப்பட்டுள்ளது.

## முன் மண்டபம்

கருவறைக்கு முன்னதாக உள்ள குடைவரை மண்டபம் தென் வடலாக 23' நீளமும் கிழக்கு மேற்காக 8' அகலமும் கொண்டது. இம்மண்டபத்தை இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத் தூண்களும் தாங்குகின்றன. மண்டபத்தின் தென், வட சுவர்களில் இரண்டு பெரிய துவாரபாலகர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கர்ப்பகிரகத்தின் நுழைவாயிலுக்கு இடதுபுறமாக உள்ள கிழக்குச் சுவரில் தரைக்கும் சற்று உயரத்தில் வலம்புரி விநாயகர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. கிழக்குச் சுவரிலும், நான்கு தூண்களிலும் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

## தூண் அமைப்பு

தூண்கள், அதிகமான நுண்ணிய வேலைப்பாடுகள் ஏதும் இன்றி விளங்குகின்றன. தூணின் அடிப்பாகம் சற்று அகலமாயும், மேலே செல்லச் செல்ல கொஞ்சம் அகலம் குறைந்தும் காணப்படும். 4 பட்டை அமைப்பும் இதற்கும் மேலாகக் குடமும், உள்ளது. போதிகை அலைகள் அமைப்பில் உள்ளது. தூண்களில் உள்ள சில கல்வெட்டுக்கள் நன்கு கோடு போட்டு அழகாக எழுதப்பட்டுள்ளன.

## துவாரபாலகர்

முன் மண்டபத்தின் தென், வட சுவர்களில் அரை அடி ஆழத்திற்குப் பள்ளமாக வெட்டி அப்பள்ளத்தினுள்ளாக நிற்பது போல் துவாரபாலகர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. பள்ளத்தின் மேல்பகுதி அரைவட்டமாகவும் கீழ்ப்பகுதி அரை அடி உயரப் படி போன்றும் அமைந்துள்ளது.

தென்புறத் துவாரபாலகர் சிற்பம் அதிகமான அணிகலன்கள் ஏதும் இன்றி வலது காலை நேராக ஊன்றியும், இடது பாதத்தைக் குறுக்காக வைத்தும், வலது கையை இடுப்பில் வைத்தும் இடதுமுழங்கையைக் கதையில்ஊன்றியும் செம்மாந்து,

நிற்கின்ற கம்பீரமான தோற்றத்தில் உள்ளது. தலையில் உயரமான ஜடாமகுடம்; இரண்டு தோள்களிலும் சடைக் கற்றைகள் புரள்கின்றன. தலைக்குப் பின்புறத்தில் ஒளி வட்டம் காணப்படுகிறது. நெற்றியில் வட்டமான வீரத் திலகம் வடிந்து வீழ்காதில் முரட்டு ருத்ராட்ச குண்டலம். மார்பில் ருத்ராட்சங்களுடன் கூடிய யக்ஞோப வீதம். சதுர மாகவும், வட்டமாகவும் மணிகள் பதித்த உதரபந்தம். இரண்டு தோள்களிலும் இறுக்கிச் சுற்றப்பட்ட நான்கு சுற்றுக் காப்புகள். முன் கையில் கற்கள் பதித்த வளையும், காப்பும் உள்ளன. இடுப்பில் ஊன்றியிருக்கும் வலது கையின் முதல் இருவிரல்கள் சற்றே சிதைந்துள்ளன. இரண்டு சுண்டு விரல் களிலும் மோதிரங்கள் அணி செய்கின்றன. கோவணமாக இறுக்கிக் கட்டப்பட்ட இடைக்கச்சை. அதன் கொசுவங்கள் பட்டையாக முழங்கால்வரை தொங்குகின்றன. இடைக் கச்சைக்குமேல் மூன்று பட்டைகள் கொண்ட முகப்பில் மணி பதிக்கப்பட்ட ஒரு கடிபந்தம். இடது கையை ஊன்றியுள்ள கதை மிகப் பெரியது. மேல் பகுதி பட்டை யாகவும் கீழே உருண்டையாகவும், கதையில் ஒரு அரவம் சுற்றிக்கொண்டு படத்தைத் தூக்கிய வண்ணமும் உள்ளது. மொத்தத்தில் இவ்வெழில் கொஞ்சும் துவாரபாலகர் அரிய கலைச் செல்வங்களில் ஒன்று.

வடபுறத் துவாரபாலகர் தென் சுவரில் உள்ளதைப் போன்றே உள்ளது. சில சிறு வேறுபாடுகளை மட்டும் கொண் டுள்ளது. இடது காலை நேராக ஊன்றி வலது பாதத்தைக் குறுக்காக வைத்து இறுமாப்போடு நெஞ்சம் நிமிர்ந்து நிற்கும் தோற்றம். யக்ஞோபவீதம் இதில் இல்லை. இடது கையை இடது தொடையில் ஊன்றியும் வலது கையைக் கீழே சாய்த் துள்ள கதையின் மீதும் ஊன்றிப் பெருமிதத்தோடு நின்ற அமைப்பு.

**வலம்புரி விநாயகர்**

கிழக்குச் சுவரில், கருவறை நுழை வாயிலின் தெற்காகத் தரையிலிருந்து சற்று மேலாக அமைந்துள்ளது இச்சிற்பம். சுவரில் சுடர் போன்ற வடிவில் பள்ளமாகச் செதுக்கப்பட்டு இதனுள் சதுரமான பீடத்தில் அமர்ந்த நிலையில் விநாயகர் காட்டப்பட்டுள்ளார். வலப்பக்கமாக வளைந்த துதிக்கை

வயிறுவரை தொங்குகிறது. வலக்கொம்பு ஒடிந்துள்ளது. பெருத்த வயிறு, நான்கு கைகள், பின் வலதுகையில் கொம்பும், இடதுகைச் சுட்டுவிரலில் மாட்டிய உழுபடைக் கருவியும், முன் வலது கையில் மோதகமும், முன் இடது கையைத் தொடை மேலும் கொண்டு காட்சியளிக்கிறார்.

இவ்விநாயகர் உருவத்தின் மேலாக உள்ள சுவரில் நீண்ட சதுரமாக இரட்டைக் கோடுகள் போடப்பட்டு அதில் "பரிவாதிநி" என்று கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இசைக் கல்வெட்டோடு தொடர்பு உடையது. "பரிவாதிநி" என்னும் வீணையைக் குறிக்கிறது என்று கொள்ளப்படும். இதே போன்ற கல்வெட்டு இதே முறையில் திருமெய்யம் குடைவரைக்கோயிலிலும் இடம் பெற்றுள்ளது. கருவறை வாயிலின் வலதுபுறச் சுவரில் எவ்விதச் சிற்பமும் இல்லை.

## சிற்பங்கள்

முன் மண்டப வடக்குச் சுவரில் கி. பி. 9-10ஆம் நூற்றாண்டுச் சண்டிகேஸ்வரர், சோமாஸ்கந்தர் சிற்பங்கள் இரண்டு சாய்த்து வைக்கப்பட்டுள்ளன. சண்டிகேஸ்வரர் சுகாசனத்தில் வலது காலைத் தொங்க விட்டு, இடது காலை மடக்கி அமர்ந்துள்ளார். காதுகளில் பத்ர குண்டலம். கழுத்தில் மாலை. வலது கையில் மழுவைப் பற்றிக் கொண்டு இடது கையைத் தொடைமேல் வைத்து அமர்ந்துள்ளார். சோமாஸ்கந்தர் சற்றே சிதைந்துள்ளது. கிரீட மகுடம். பின் வல, இடக்கைகளில் முறையே மழு, மான் கொண்டும், இடது முன்கையைத் தொடை மேல் வைத்தும் இறைவன் அமர்ந்துள்ளார். வலது முன்கை சிதைந்துள்ளது. அன்னை அருகமர்ந்து இடதுகையை ஊன்றிய வண்ணம் காட்சி தருகிறாள். கந்தன் அன்னையின் மடியில் விளையாடிய நிலையில் காட்டப்பட்டுள்ளான்.

## அர்த்த மண்டபம்

குடைவரையின் முன் மண்டபத்தோடு ஒட்டி பிற்காலத்தரால் கட்டப்பட்ட மண்டபத்தை அர்த்த மண்டபம் எனலாம். இம்மண்டபத்தின் கிழக்கு வெளிச் சுவரில் காணப்படும்

முதல் குலோத்துங்கனின் 36 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டைக் (பு.கோ.க-125) கொண்டு இம்மண்டபம் அவனாலோ அல்லது அவன் காலத்திற்குச் சற்று முன்பாகவோ கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று அறியலாம். இம்மண்டபத்தின் நடுவில் நான்கு தூண்கள் நிற்கின்றன. இத்தூண்களின் குறுக்காக பெரும்பெரும் பலகைக் கற்களைப் போட்டு விதானம் அமைத்துள்ளனர். தளவரிசையும் பெருங்கற்களால் ஆனது. தூண்கள் மூன்று சதுர அமைப்புகளையும், அவற்றின் நடுவில் இரண்டு எண்பட்டை அமைப்புகளையும் பெற்றுள்ளன. சுவர்களிலோ, தூண்களிலோ எவ்விதக் கல்வெட்டும் மண்டபத்தின் உட்புறம் இல்லை. இம்மண்டபத்தின் தென்புறம் முன்பு ஒரு வாயில் இருந்திருக்கின்றது. இப்பொழுது மத்திய தொல்பொருள் துறையினரால் அது கதவு இட்டுப் பூட்டப்பட்டுள்ளது. இம் மண்டபத்தின் நுழைவாயில் சாதாரணமானது நிலைப்படிகளில் பத்மவரிகள் வெட்டப்பட்டுள்ளன. நிலைக்கு இரண்டு புறங்களிலும் இரண்டு அரைத்தூண்கள் உள்ளன

## முன்மண்டபம்

இம்மண்டபம் 27½ அடி நீளமும், 23 அடி அகலமும் கொண்டது. இம்மண்டபத்தின் நடுவில், ஒரு பெரிய கல்நந்தி கருவறையை நோக்கியவாறு வைக்கப்பட்டுள்ளது. படுத்த நிலையில் உள்ள இந்நந்தியின் கழுத்தில் இரட்டைக் கயிற்றில் மணி ஒன்றுகோர்த்துக் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் நான்கு தூண்கள் உள்ளன. ஒன்றில் விரிந்த தாமரையும், மற்றொன்றில் நரசிம்மமும் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களின் மேல் போதிகை ஏதும் இன்றி நீண்ட குறுக்குக் கற்கள் போட்டு அதன்மேல் பலவகைக் கற்களை வைத்து விதானம் அமைத்துள்ளனர். மண்டபத்தின் நிலைவாயிலின் இருபுறமும் பத்மவரி வெட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தை ஒட்டி வெளியில் எட்டு அடி உயரமுள்ள ஒரு கல் மேடை உள்ளது. இம்மேடையின் தென், வடபுறங்களில் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கல்மேடை ரகுநாதராய தொண்டைமானால் கட்டப்பட்டது என்று அங்குள்ள ஒரு சிறு கல்வெட்டால் அறிகிறோம் (பு.கோ.க-1089).

மண்டபத்தின் புறப்பகுதி, உபானம், ஜகதி, முப்படைக் குமுதம், கண்டம், பட்டிகை முதலியவை கொண்ட அதிட்டானத்தோடு கட்டப்பட்டுள்ளது. இது முன்பு இடிபட்டுக் கிடந்த ஒரு கோயிலின் கற்களைக்கொண்டு கட்டியிருக்க வேண்டும். சில துண்டுக் கல்வெட்டுக்களும், ஒரு கல்லில் உள்ள அழகான ஆடவல்லான் சிற்பமும், இரண்டு யானைகளுடன் ஒரு வீரன் நிற்பதாக உள்ள சிற்பந்தாங்கிய கல்லும் இவ்வுண்மையைக் கூறுகின்றன.

## குடவரையின் காலம்

இக்குடைவரைக் கோயில் மகேந்திரவர்ம பல்லவனின் காலத்தது என்று சில வரலாற்றறிஞர்கள் கருத்து கொண்டிருந்தனர். ஆனால் இன்னும் சிலர் இது பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட குடைவரை என்று தகுந்த ஆதாரங்களுடன் நிறுவியுள்ளனர். இசைக் கல்வெட்டை ஆராய்ந்த டாக்டர். மீனாட்சி அவர்கள், திருச்சி, புதுக்கோட்டை பகுதிகள் மகேந்திரனின் ஆட்சியின் கீழ் இருந்தன என்பதில் சந்தேகம் இல்லை[1] என்று கூறுகிறார். இக்கோயில் மகேந்திரவர்மன் ஆட்சியின் தொடக்க காலத்தில் அமைக்கப்பட்டது என்று வரலாற்று அறிஞர்கள் கருதுவதாகக் கே. ஆர். வெங்கட்ராம ஐயர் அவர்கள் கூறியுள்ளார்.[2]

**பல்லவர் குடைவரை அல்ல:** இங்குள்ள குடைவரை, பல்லவர் குடைவரை என்பதற்கு எந்தவிதமான சான்றுகளும் இல்லை. குடுமியான்மலை பல்லவர் ஆட்சி எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதியில்தான் அமைந்துள்ளது.[3] குடுமியான் மலையில் மகேந்திரன் காலம் என்று சொல்லத்தக்க சான்றுகள் ஏதும் இல்லை என்பார் துப்ரேய்ல்.[4] இக் குகைக்கோயிலை நுணுகி ஆராய்ந்த கே. ஆர். சீனிவாசன் அவர்கள் இது பல்லவ அரசனால் உருவாக்கப்பட்டதல்ல என்றும், பாண்டியர் காலத்ததே என்றும் திட்டமாகக் கூறியுள்ளார்.[5]

1. Admin'stration and Social life under the Pallavas. P. 246.
2. A Mannual of the Pudukottai State.
3. Kancheepuram in early South Indian History P. 74
4. Pallava Antiquities - P. 43
5. Ḍamiliça - P. 91

**பாண்டியர் கலைப்பணியே:** இக்குடைவரை அமைந்துள்ள இடத்தாலும், கட்டிட அமைதியாலும், சிற்ப அமைதியாலும், கல்வெட்டாலும் பாண்டியர் காலத்தையே காட்டுவதாக முடிவு செய்யும் பான்மையில் அமைந்துள்ளது.

**அமைந்துள்ள இடம்:** தொன்றுதொட்டுபாண்டியநாட்டின் ஒரு பகுதியாகவே குடுமியான்மலை அமைந்துள்ளது. முதலாம் மகேந்திரவர்மனின் ஆட்சி திருச்சிக்கு அப்பால் விரிந்ததற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. அப்படியே அவன் குடுமியான்மலை வரை ஆட்சி செய்தான் என்று வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும் அவனுக்குப் பின் அப்பகுதியில் பல்லவர்களின் நிலை என்ன என்பது கேள்விக்குறியே. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர்களின் கல்வெட்டு இக்குடைவரையில் காணப்படுகிறது. எனவே பல்லவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த இப்பகுதி எட்டாம் நூற்றாண்டில் பாண்டியர் ஆட்சிக்கு மாறியது எப்படி என்ற ஒரு பெரும் ஐயம் இயற்கையாகவே எழுகிறது.

**கட்டிட அமைப்பால்**

கட்டிட அமைதி கொண்டும் இது பாண்டியர் குடைவரையே எனலாம். இக்கோயிலின் லிங்க பீடத்தின் அமைப்பு சதுரமானது. பாறையிலேயே செதுக்கப்பட்டது. இது பாதாமியின் முற்காலச் சாளுக்கியர், வேங்கியின் கீழைச்சாளுக்கியர், தலைக்காட்டின் மேலைக் கங்கர், ஹேமாவதியின் நுளம்பர், பாண்டிய நாட்டின் தென் பகுதியில் உள்ள ஏனைய குகைக் கோயில்கள் போன்றவற்றின் அமைப்பை ஒத்ததாக உள்ளது. ஆனால் பல்லவர்களின் குகைகளில் பீடம் ராஷ்டிர கூடர்களின் பாணியில் வட்டமானதாக இருக்கும்.[6] தூண் அமைப்பிலும் மகேந்திரன் தூண்களினின்றும் முழுமையான வேறுபாடு உண்டு.

இங்குள்ள கல்வெட்டுகளில் பல்லவர் பெயர் குறிப்பிடும் கல்வெட்டெதுவும் இல்லை. இசைக்கல்வெட்டு தவிர இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியதாகக் கருதப்படும் கல்வெட்டு சடையன் மாறனின் நான்காம்

6. Ibid - P. 86

ஆட்சியாண்டுக் கல்வெட்டுதான் (பு. கோ. க.238). பாண்டிய மன்னர்கள் தங்களுக்குள் ஒருவர் பின் ஒருவராக சடையன் என்றும் மாறன் என்றும் பெயர் வைத்துக்கொண்டுள்ளனர். எனவே இக்கல்வெட்டில் குறிக்கப்படும் சடையன் மாறன், யார் என்பதில் ஐயம் எழுவது இயற்கை. கல்வெட்டின் எழுத்தமைதி காலத்துக்குச் சற்று முன் பின்னதாக ஆட்சி செய்த மாறன் என்ற பட்டமுடைய பாண்டிய மன்னர்கள் அரிகேசரி பராங்குச மாறவர்மன், மாறவர்மன் ராஜசிம்மன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆகியோராவார். ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் ஒன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஆண்டவன். இவன் காலம் பெரும்பகுதியும் போர்களில் கழிந்தது. இவன் காலத்தில்தான் மூன்றாம் நந்திவர்மன் படையெடுப்பு இப்பகுதியில் நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து பல்லவர்களின் ஆதிக்கம் இப்பகுதியில் நிலைபெற்றது. இதற்குச் சான்றுகளாகக் குன்னாண்டார் கோயில் போன்ற இடங்களில் கல்வெட்டுக்கள் (பு. கோ. க.151) உள்ளன. எனவே இக்காலத்தில் பாண்டிய மன்னர்கள் அமைதியாகக் கலைப்பணியில் ஈடுபட்டிருப்பார்கள் என்று கூறமுடியாது. மற்ற இரு மன்னர்களில் மாறவர்மன் ராஜசிம்மன் கொடும்பாளூரில் போரில் வென்றான் என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது. எனவே அவன் ஆதிக்கம் இப்பகுதியில் இருந்தமை பெறப்படும். எனவே இக்கல்வெட்டு மாறவர்மன் ராஜசிம்மன் காலத்தியது எனக்கொள்வதில் தவறில்லை. இக்கல்வெட்டில் ஆட்சியாண்டு சிதைந்துள்ள போதிலும் கல்வெட்டைப் படித்த அறிஞர்கள் நான்காம் ஆண்டாக இருக்கலாம் என யூகித்துள்ளனர். ராஜசிம்மனின் ஆட்சிக் காலம் கி. பி. 730-768 என்பர். எனவே இக்குடைவரையிலுள்ள முதற்கல்வெட்டை முதல் ராஜசிம்மன் தொடக்க காலக் கல்வெட்டாகக் கொண்டு, இக்குடைவரை அவன் தொடக்க காலத்திலோ அன்றி அதற்குச் சற்று முன்னதாகவோ சமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

### குடைவரைக் கல்வெட்டுக்களும், கொடைகளும்

இக்குடைவரையில் மொத்தம் 40 கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் இசைக் கல்வெட்டுக்கள் இரண்டு. மற்றவற்றுள் முற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள் இரண்டு, சோழர்

கல்வெட்டுக்கள் —34, தொண்டைமான் கல்வெட்டு —1, அரசன் பெயரற்ற கல்வெட்டு—1, ஆக 38.

பாண்டியர் கல்வெட்டுக்களில், சடையன் மாறன் கல் வெட்டு —1, மாறஞ்சடையன் கல்வெட்டு—1, ஆக 2. சோழர் காலக் கல்வெட்டுகளில் ராஜகேசரிக் கல்வெட்டுக்கள்—5, பர கேசரிக் கல்வெட்டுக்கள் 23, மதுரை கொண்ட கோப்பரகேசரி —3, முதல் குலோத்துங்கன் கல்வெட்டு —1, குலோத்துங்கன்? —1, 3- ஆம் ராஜராஜன் கல்வெட்டு — 1 ஆக 34 கல்வெட்டுகள்

இங்குள்ள கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கோயிலுக்கு நொந்தா விளக்கு எரிக்கப் பசு, ஆடு, பொன் கொடையளித்த செய்திகளையே கூறுகின்றன. விழாக்காலங்களில் அந்தணர்க்கு உணவளிக்க கொடுத்த கொடை, நிலக்கொடை போன்ற செய்திகளையும் கூறுகின்றன. ஊர்ச் சபையின் முடிவுபற்றி ஒரு கல்வெட்டு கூறுகிறது.

**நிலக்கொடை:** சோழன் பரகேசரிவர்மனின் 21-ஆம் ஆட்சி யாண்டில் மதுராந்தகன் இருக்குவேளாயின ஆதித்தன் விக்கிரமகேசரி இக்கோயிலில் பலவித பூசைகளுக்காக நிலம் கொடுத்தான். [பு.கோ.க.63,65] இதே செய்தியை இன் னொரு கல்வெட்டும் கூறுகிறது. குலோத்துங்க சோழனின் 45-ஆம் ஆட்சியாண்டில் இடையாற்றூர் வேளான் பொற்காம னான உத்தம சோழ மூவேந்தவேளான் நொந்தாவிளக்கு எரிப்பதற்கென 4 மா நிலம் கொடையளித்தான்(பு,கோ.க. 229).

**பசு,ஆடு கொடை:** இராஜகேசரியின் மூன்றாம் ஆட்சி யாண்டில் மகிமாலைய இருக்குவேளின் உறவினனான சந்தை யன் என்பவன் கோயில் வழிபாட்டிற்கென 31 பசுக்களைக் கொடையாகக் கொடுத்தான் (பு கோ.க 22). இரண்டாம் இராஜ ராஜனின் 5-ஆம் ஆட்சியாண்டில் நாற்றந் பெரியானான வீரம் அழகிய பல்லவரையன், நொந்தா விளக்கு எரிப்பதற்கு 96 ஆடு கொடுத்தான். 96 ஆடுகளுக்குப் பதிலாக 48 ஆடுகளும், மீதிக்கு 13 பசுக்களும் கொடுத்தான். எனவே அன்றைய நிலை யில் 13 பசுக்கள் 48 ஆடுகளுக்குச் சமம் எனக்கொள்ளப் பட்டிருக்கலாம். மேலும் இவனே தரா விளக்கு ஒன்றும்

கொடையளித்தான் ( பு. கோ. க.-181). முதலாம் குலோத்துங் கனின் 45-ஆம் ஆட்சியாண்டில் காரையூர் நாட்டு வேளான் பொன்னனான செம்பியன் கோனாட்டு வேளான் நொந்தா விளக்கு எரிக்க 96 வெள்ளாடு கொடையளித்தான் (பு.கோ. க.-229) என்பதையும் அறிகிறோம்.

**பொன் கொடைகள்:** இராஜகேசரியின் 11-ஆம் ஆட்சியாண் டில் குத்தக்குடி நண்பன் துணையன் ஏழரைக்கழஞ்சு துளைப் பொன் கொடுத்தான் (பு. கோ. க. - 29). எழுத்தமைதி கொண்டு இவன் முதலாம் ஆதித்தன் எனக்கருதுகின்றனர்[7] துளைப்பொன் என்று இக்கல்வெட்டில் குறிக்கப்படுவது தூய்மையான முத்திரைப் பொன் என்று பொருள்தரும். இதே அரசனின் இருபதாவது ஆட்சியாண்டில், முத்தரையர் நம்பி மானதொங்கலாரின் மகள் நங்கைவிக்கிரமகேசரியின் நினைவாக பெரும்பிடுகு முத்தரைசன் மனைவிநங்கையார் நங்கை தயாநிதி யார் நொந்தாவிளக்கெரிக்க $7\frac{1}{2}$ கழஞ்சு பொன் கொடுத்தாள்.[8]

இராஜகேசரியின் இருபதாவது ஆட்சியாண்டில் புள்ளங் குடி எட்டிக் குளவனான புள்ளங்குடி எட்டி ஏழு மா பொன் கொடையளித்தான் (பு.கோ க.-23). இராஜகேசரியின் இருபத்து இரண்டாவது ஆட்சியாண்டில் தேவகி கண்ணனைச் சார்த்தி திருவைகாடன் என்பவன் கழஞ்சு பொன் கொடுத்தான் (பு.கோ.க.-34). பரகேசரிவர்மனின் 4-ஆம் ஆட்சியாண்டில் கொடும்பாளூர் தாழி ஆரூரன் ஒருவிளக்குக்கு ஏழு மா பொன் கொடுத்தான் (பு.கோ.க.-43). பரகேசரியின் 7-ஆம் ஆட்சி யாண்டில் செம்பியன் இருக்குவேளின் மனைவியும், முத்த ரையரின் மகளுமான வரகுணனாட்டி பெருமாள் ஏழு மா பொன் கொடுத்தாள் (பு.கோ.க.-45). பரகேசரியின் 6-ஆம் ஆண்டில் சிரகநல்லூர்ச் சேந்தன் என்பவன் ஏழு மா பொன் கொடுத்தான். (பு.கோ.க.-46) பரகேசரியின் ஏழாம் ஆட்சியாண் டில் நக்கம் புல்லியாள் என்பவள் தன் மகன் கண்ணங் காடனைச் சாத்தி நான்கு கழஞ்சு பொன் கொடுத்தான் (பு.கோ.க -47). பரகேசரியின் பத்தாவது ஆண்டில், செம்பியன்

7. S.I I. vol. XIII. 213
8. Ibid. XIII 288

TAMIL NADU STATE ... DEPARTMENT LIBRARY Acc No.... Date ....

இருக்குவேளின் இன்னொரு மனைவி நங்கை நந்தேவியார் ஏழரை கழஞ்சு பொன்கொடுத்தாள் (பு.கோ.க.-52).

பரகேசரியின் 13-ஆவது ஆட்சியாண்டில் வேரியன்குடி ஏறகங்கன் ஏழு மா பொன் கொடையளித்தான் (பு.கோ.க.-55). 15-ஆவது ஆட்சியாண்டில் மலைநாட்டு சங்கரன் என்பவன் நிலைவிளக்கு ஒன்று செய்ய ஏழு மா பொன் கொடுத்தான் (பு.கோ.க.-58). பரகேசரியின் 20-ஆம் ஆட்சியாண்டில் அரங்கன் கள்வன் என்பவன் ஏழரை கழஞ்சு பொன் கொடுத்தான் (பு.கோ.க.-62). பரகேசரியின் 21-ஆம் ஆட்சியாண்டில் செருவிடை அறச்சிகை என்பவன் நிலை விளக்கு ஒன்றுக்கு 7 மா பொன் கொடுத்தான் (பு.கோ.க.-66). இதேயாண்டில் பரம்பையூர்வாசி ஒருவன் ஏழு மா பொன் கொடுத்துள்ளான் (பு.கோ.க.-66). பரகேசரியின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் வளவன் பொறையன் ஆயின அறஞ்சிறை பிடாரன் என்பவன் ஏழு மா பொன் கொடுத்துள்ளான் (பு.கோ.க.-68). இருபத்துமூன்றாம் ஆட்சியாண்டில் மன்னைக்குடி விழுப்பரையன் வேளான்புகழன் சார்பாக (சாத்தி) அவன் அன்னை உதையள் கவிமதி ஏழு மா பொன் கொடுத்தாள். ( பு.கோ.க. 69) பரகேசரியின் முப்பத்து இரண்டாம் ஆட்சியாண்டில் மயிலை திண்டனாயின அவந்திய கோவப் பல்லவரையன் ஏழு மா பொன் கொடுத்தான் (பு.போ.க.-70). முப்பத்து எட்டாம் ஆண்டில் கூடலூரர் நாட்டுப் பெருங்காடன் என்பவன் பொன் கொடுத்தான் (பு.போ.க.-74). பரகேசரியின் ஆட்சிக்காலத்திலேயே நக்கன் மாணிக்கம் என்பவனும், கவிசிய செட்டி ஸ்ரீ கண்டன் என்பவனும் ஆளுக்கு ஏழு மா பொன் கொடுத்தனர் (பு.போ.க.-76).

**அரண்மனை ஏவலர் கொடைகள்:** முதல் பராந்தகனின் 15-ஆம் ஆட்சியாண்டில், அவன் மகன் கோதண்டராமனின் மடைப்பள்ளியில் வேலை செய்த குடியன் காடுகாள் என்பவள் நொந்தா விளக்குக்கு ஏழரைகழஞ்சு பொன் கொடுத்தாள். மேலும் ஓலைவீரட்டள் என்பவள் பகல்விளக்கு ஒன்றுக்கு மூன்று பொன் கொடையளித்தாள் (பு.கோ.க.–78). இங்கு கோதண்டராமன் என்று குறிக்கப்படுபவன் பராந்தகனின் முதல் மகன் ராஜாதித்தன் என்பது குறிப்பிடத்தக்கது. இவன் தானே நேரடி

யாக இரண்டு நொந்தா விளக்கு எரிக்க 15 பொன் கொடையளித்துள்ளான் (பு.போ.க.-80). இக்கல்வெட்டில் அவன் தன்னை "மதிரை கொண்ட பரகேசரி பன்மரான சோழப் பெருமான் அடிகள் ஸ்ரீ பிராந்தகர் மகன் ஸ்ரீ கோதண்டராமன்" என்று கூறிக்கொள்கிறான்.

மதிரை கொண்ட பரகேசரியான முதற் பராந்தகனின் 15-ஆம் ஆண்டிலேயே அரிகுலாந்த வாரணப் பொற்புயந் என்பவனும், வன்னியூர் நக்கன் சங்கரன் என்பவனும் ஆளுக்கு ஏழு மா பொன் வீதம் கொடையளித்துள்ளனர் (பு.கோ.க-79).

**விழாக்களில் அன்னதானம்:** இக்கோயில் விழாக்களில் அந்தணர்க்கும் ஏனைய எளியவர்க்கும் அன்ன தானம் செய்ய சிலர் கொடைகள் அளித்துள்ளனர். பரகேசரிவர்மனின் 14-ஆம் ஆட்சியாண்டில்,பாம்பையூர் நம்பியின் சார்பில்(சாத்தி)சடையன்கலச்சி என்பவன் ஐங்கழஞ்சு பொன் கொடுத்தான். இதன் வட்டியைக் (பலிசை) கொண்டு இக்கோயில் மாசிமகத் திருவிழாவின் போது ஏழு நாட்களும் பதினைந்து அந்தணர்களுக்கு உணவு கொடுக்க ஏற்பாடு செய்தான் (பு.கோ.க-.57). இக்கல்வெட்டில் குறிக்கப்படும் பரகேசரி என்னும் மன்னன் உத்தமச்சோழனாக இருக்கலாம் என்பர்.[9]

பரகேசரியின் 22-ஆம் ஆட்சியாண்டில் செவலூர் பட்டம் பிடாரியான பாண்டியதிபரசி 10 கழஞ்சு பொன் கொடையளித்தாள். இதுகொண்டு பங்குனி உத்திர விழாவின் போது ஏழு நாளும் தினம் 20 அந்தணர்க்கு உணவு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. (பு.கோ.க-67).

இதுவரை கண்ட கொடைபற்றிய கல்வெட்டுகளைப் பார்க்கும்போது சில உண்மைகள் புலனாகின்றன. ஒரு விளக்கிற்கு $7\frac{1}{2}$ பொன் என்ற நியதி இருந்தது. மேலும் பொன் கொடையே நிலம், பசு போன்ற கொடையைக்காட்டிலும் அதிகமான அளவில் இருப்பதால் மக்கள் மத்தியில் பணப் புழக்கம் தாராளமாக இருந்தது என்றும் தோன்றுகிறது.

---

9. S. I. I. vol. XIX 334

# சவுந்திர நாயகி அம்மன் கோயில்

குடைவரைக் கோயிலின் தெற்காக மலையோடு எவ்வித தொடர்பும் இன்றித் தனியே எடுக்கப்பட்டுள்ள கற்கோயில் இது. சிற்பங்களோ, மண்டபங்களோ அதிகம் இல்லாமல் எளிமையாக எடுக்கப்பட்டுள்ள இக்கோயில் இன்று சவுந்திர நாயகி அம்மன் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

## தேவரடியார் எடுத்த திருக்கோயில்

மன்னர்களும், அரசியல் அதிகாரிகளுமே தமிழ்நாட்டில் கோயில் எடுத்துப் பெருமை சேர்த்துக் கொண்டனர் என்பதில்லை. இங்கு சடையவர்மன் வீரபாண்டியனின் ஆட்சிக் காலமான கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் இவ்வூர்த் தேவரடியார்களில் ஒருத்தியான தூக்கையாண்டி மகள் நாச்சி இக்கோயிலை எடுத்துள்ளாள். இக்கோயிலின் புறச்சுவர்களில் உள்ள நான்கு கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது சடையவர்மன் வீரபாண்டியனின் 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. இது "இக்கோயில் மேற்றளியுடைய மகாதேவற்கு இவ்வூர்த் தேவரடியாரில் துக்கையாண்டி மகள் நாச்சி எழுந்தருளுவித்த திருக்காமக்கோட்டம்" (பு. கோ. க-366) என்று கூறுகிறது. எனவே அவள் இக்கோயிலை எடுத்தாள் என்பது ஐயத்திற்கிடமின்றி உறுதிப்படுகிறது. இன்று இவ்வம்மன் சவுந்திர நாயகி என்று அழைக்கப்பட்ட போதிலும் வீரபாண்டியனின் கல்வெட்டு இவ்வம்மனைத் "திருக்காமக்கோட்டத்து நாச்சியார் அருவுடை மலைமங்கையார்" (பு. கோ. க-366) என்று குறிப்பிடுகிறது. எனவே கோயில் எடுக்கப்பட்ட காலத்தில் இப்படித்தான் பெயர் வழங்கியிருக்க வேண்டும்.

## கருவறை

கோயில் ஒரு சிறிய கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம் கொண்டு விளங்குகிறது. முன்மண்டபம் மூன்று புறமும் திறந்து வெளிமண்டபமாகக் காட்சியளிக்கிறது. கருவறை $7\frac{1}{2}$ அடி நீளம் அகலம் கொண்டு சதுரமாக அமைந்

துள்ளது. எளிமையான முறையில் உள்ளது. விதானம் சதுரப்பள்ளமாகவும், அதன்மேல் சாய்சதுரக் கற்பலகையும் போடப்பட்ட அமைப்பைக் கொண்டுள்ளது. பத்மபீடத்தில் நின்ற நிலையில் அம்மன் காட்சி தருகிறாள். கரண்ட மகுடம், காதுகளில் மகர குண்டலங்கள். கழுத்தில் ஒரு மங்கல அணியும், மணிமாலையும் அழகூட்டுகின்றன. கைகளில் வளையல் அடுக்குகள். கடிசூத்திரம், அடிவரை ஆடை. அடிகளில் தண்டை, சிலம்பு. நான்கு கைகள், பின் வல, இடக்கைகளில் முறையே தாமரை, நீலோத்பல மலர்கள் வைத்தும், முன் வலக்கை அபயம், இடக்கை வரத முத்திரை காட்டியும் நிற்கும் அம்மன், கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பாண்டியர் கலைப் படைப்பு, வாயிலில் இரண்டு பக்கமும் இரண்டு அரைத் தூண்கள் நிற்கின்றன. அதில் நாகபந்தம், கண்டம், குடம், நிமிர்ந்த, கவிழ்ந்த தாமரை, விரிந்த தாமரையின் மேல் சதுரப் பலகை, சதுரப் போதிகை இடம் பெற்றுள்ளன. போதிகை வளைந்து சிறிய பூ முனையோடு காட்சியளிக்கிறது.

**அர்த்த மண்டபம்**

சாதாரண அமைப்பைக் கொண்ட சிறுமண்டபம். கிழக்கு மேற்காக $8\frac{1}{2}$ அடி நீளம். தென்வடலாக $7\frac{1}{2}$ அடி அகலம் கொண்டது. நடுவில் அம்மனைப் பார்த்தவாறு பாண்டியர்கால நந்தி வைக்கப்பட்டுள்ளது. வாயிலின் இருபுறமும், கருவறை வாயிலில் உள்ளது போன்றே இரண்டு அரைத்தூண்கள் உள்ளன.

**முன் மண்டபம்**

மூன்றுபுறமும் திறந்த அமைப்புடையது. தென்வடலாக 34 அடி நீளமும், கிழக்கு, மேற்காக 29 அடி அகலமும் கொண்டது. மண்டபத்தை நான்கு தூண்கள் தாங்குகின்றன. அவற்றில் விரிந்த தாமரை செதுக்கப்பட்டுள்ளது. போதிகை நன்கு வளைந்து சற்றுப் பருத்த பூமுனையோடு காணப்படுகிறது. மண்டப விதானம் கருவறையில் உள்ளது போன்று மையத்தில் சதுரப்பள்ளமும் அதன்மேல் நான்கு கற்பலகைகள்போடப்பட்டுச் சாய்சதுர அமைப்பையும் கொண்டுள்ளது. மண்டபம் மேற்குச் சுவரில் சிறு விநாயகர், ஐந்தலை நாகம் போன்ற

உதிரிச் சிற்பங்கள் உள்ளன. கிழக்குப் பகுதியிலும், வடக்கிலும் வாயிற்படிகள் உள்ளன

வடபுறம் உள்ள வாயிற்படிகளில் இரண்டுபுறமும் யாளிமுக அமைப்பு உள்ளது. அவற்றின் பின் ஒன்றில் (மேற்கில்) இரண்டு சிங்கங்கள் எதிரெதிரே நின்று கொண்டிருப்பது போன்றும், முன்னங்கால்களை மேலே தூக்கிச் சண்டையிட்ட நிலையில் உள்ளன. கிழக்குப் பக்கம் உள்ளதில் ஒரு சிங்கம் பாய்ந்தோடும் நிலையில் தலையை மட்டும் பின்புறம் திருப்பிப் பார்ப்பதாக வடிக்கப்பட்டுள்ளது.

## புறஅமைப்பு

புறஅமைப்பில் அதிட்டானப் பகுதி உயரமான உபபீடம் ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம் பட்டிகை, கண்டம், பத்ம வரியுடன் கூடிய வேதிகை முதலிய அமைப்புகளைக் கொண்டுள்ளது. சுவரில் இடம் பெற்றுள்ள தூண்களின் அமைப்பு அர்த்தமண்டப வாயில்தூண் அமைப்பையே ஒத்துள்ளன. கோட்டங்கள் வெறுமையானவை. அவற்றின் இருபுறமும் அரைத் தூண்களும், மேலே இரண்டடுக்குச் சாலைகளும், அதில் கூடுகளும் இடம் பெற்றுள்ளன.

பிரஸ்தரம், பத்மவரி, கொடுங்கை, யாளிவரியுடன் கூடியது. கொடுங்கையில் கீர்த்திமுகக் கூடுகள்; அதில் மனித முகங்கள், பூவேலைப்பாடுகள் முதலியவை உள்ளன. யாளிவரிகள் திருப்பங்களில் பெரிய யாளியைக் கொண்டுள்ளது.

இக்கோயிலுக்கெனக் குறிப்பிடத்தக்க சிறப்பு பூசைகளோ விழாக்களோ இல்லை. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் கல்வெட்டுச் செய்திகள் என்னும் தலைப்பில் தரப்பட்டுள்ளன.

## விநாயகர் சிற்பம்

மேலைக் கோயிலின் தென்புறம் உள்ள பாறையில் இசைக் கல்வெட்டுக்குத் தெற்காக ஒரு விநாயகர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. முதலில் ஒரு சதுரமான பள்ளம் போன்று செதுக்கி அதற்கு உள்ளாக விநாயகர் வடிக்கப்பட்டுள்ளார். விநாயகர் உருவத்தைச் சுற்றிலும் உள்ள பாறையில் பல பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுகள் உள்ளன.

விநாயகர் உருவம் சற்று பெரியது. சுமார் 4' உயரம் இருக்கும். கி. பி. 12, 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

## விநாயகர் கோயில்

குடைவரைக் கோயிலுக்கு வடக்கே அருகில் மலையை ஒட்டி அமைக்கப்பட்ட மிகச்சிறிய கோயில் இது. ஒரு சிறிய கருவறையும், அதே அளவு வெளிமண்டபமும் கொண்டது. ஒரு வட்டமான பீடத்தில் விநாயகர் அமர்ந்துள்ளார். சுமார் 4 அடி உயரமுள்ள பெரிய விநாயகர் உருவம். இரண்டு வட்டமான சிறிய தூண்கள் முன் மண்டபத்தைத் தாங்குகின்றன. வாயிலின் இடப்புறச் சுவரில்,

'ஸ்வஸ்திஸ்ரீ இப் கொஇல்
வயலகம் திருவிதியர் மகாலிங்கால
நமசிவாய தெவந் தன்மம்'

என்று எழுதப்பட்டுள்ளது. வயலகம் என்னும் ஊர் இன்று வயலோகம் என்ற பெயரில் குடுமியான் மலைக்குக் கிழக்கில் 2 கி. மீ. தொலைவில் உள்ளது. அவ்வூரினர் இக்கோயிலைக் கட்டியுள்ளனர். இது காலத்தால் மிகவும் பிற்பட்ட கோயில். மலையோடு ஒட்டாமல் தனித்து நின்ற இக்கோயிலைப் பிற்காலத்தார் சுமார் ½ அடி சாய்வான சுவர் எடுத்து மலையோடு இணைத்துள்ளனர்.

# குடுமிநாதர் கோயில்

இன்றைய நாளில் பெரும்பாலான மக்களால் வணங்கப் படுவது இக்கோயிலே. இக்கோயிலின் பெருமையால், குடைவரைக் கோயில் கேட்பாரற்றுத் தனிமைப்பட நேரிட்டது. குடைவரைக் கோயிலுக்கு முன்பாக நேர் எதிரே அமைந் துள்ளது. இன்று மக்கள் பலராலும் குடுமிநாதர் என்றும் சிகாகிரீஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயில் யாரால், எப்போது தோன்றியது என்று வரலாற்று அடிப் படையில் ஆராய்வதற்கு முன்பு இக்கோயில் தோன்றியது பற்றிக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதைகளைக் காணலாம்.

**ஸ்ரீநிகேதாசலம்**

வாயுதேவனுக்கும், ஆதிசேடனுக்கும் ஒருமுறை தம்மில் யார் பெரியவர் என்ற சண்டையில் இக்கோயில் தோன்றி யது என்பதை,

"வாயுதே வனுக்கு மாதிசே டனுக்கும்
வார முறை யின்றியே சண்டை
ஆயஅப் பொழுதில் அந்தமா மேரு
அருங்கொடி முடியி லொன்றை
ஏயெனப் பிடுங்கி எறிந்தவன் அந்த
எழின்மலை யிம்மலை என்பர்
சேயென தன்பால் இருத்திய
செல்வஸ்ரீநிகேதாசல மிதுவே"[1]

என்னும் ஒரு பழம்பாடல் கூறுகிறது.

**ஜெயந்தவனேச்சுரம்**

"இந்திரர்க் கருள்செய் யீசனார் முன்னும்
ஏந்திழை யிருவரி னோடு
வந்தமர்ந் திருக்கும் சமயம தோர்ந்து
மகபதி வந்தடி பணிந்து

சிந்தையில் துயரம் யாவையும் தீர்ந்து
தீர்க்கமா யொருமக வளித்த
செந்திரு வகலா திருக்கவும் வாய்த்த
ஜெயந்தவ னேச்சுர மிதுவே"[2]

என்று ஒரு புராணம், இக்கோயிலை ஜெயந்தவனேச்சுரம் எனக் குறிப்பிடுகிறது.

## சிகாகிரீஸ்வரர்

இப்பெயரே இன்றும் பலரால் பேசப்பட்டு வருகிறது. இதற்குப் பொருத்தமாகவே கருவறையில் உள்ள லிங்கத்தின் முன் தலையில் குடுமி போன்ற குமிழ் ஒன்று உள்ளது. இறைவனுக்குக் குடுமி வந்த புராணத்தை,

"ஆலவா யமர்ந்த பாண்டிய னொருவன்
அர்த்த ஜாமத்திற் கப்பால்
சாலவு மீசன் பிரஸாதமு மீதலும்
மலரதிற் கேசமுங் கண்டு
ஏலவே யிருக்கும் விதமென் மறையோய்
இயம்பென உருக்கிய காலை
சீலமாங் குடுமி யிருக்கெனக் காட்டுஞ்
சிகாகிரி யாவது மிதுவே"[3]

என்னும் பழம் பாடல் மூலம் அறியலாம்.

## கோயிலின் பொது அமைப்பு

இக் கோயில் மூன்று பிரகாரங்களைக் கொண்டது. முதல் பிரகாரத்தில் கருவறை அமைந்துள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம், சபாமண்டபம் யாவும் முதல் திருச்சுற்றிலேயே அமைந்துள்ளன. திருச்சுற்று மாளிகையும் இதில் உண்டு. இரண்டாம் பிரகாரம் சற்று அகலமானது. இதில் தான் வசந்த மண்டபம் என்னும் அணிவெட்டிக்கால் மண்டபம் பல அற்புதச் சிற்பங்களைக் கொண்டு கருவறைக்கு எதிராக அமைந்துள்ளது. இத்திருச்சுற்றின் தென் கிழக்கு மூலையில் ஒரு யாக சாலையும், அதற்கும் மேற்கில் ஒரு பழைய மடைப் பள்ளியும்,

1-3. குடுமியான்மலை கோயில் கும்பாபிஷேக மலர்—1929.

அதற்கும் மேற்கு - தென் மேற்கில் ஒரு பெரிய மண்டபமும் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் அடங்கி வடக்கில் உள்ளது அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயில். இவ்வம்மன் கோயிலுக்கு எதிரில் அதாவது இரண்டாம் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் அம்மனுக்குரிய யாகசாலை மண்டபம் ஒன்று உள்ளது. மூன்றாம் திருச்சுற்று நீண்டது, அகலமானது. இதனுள் கருவறைக்கு எதிரில் உள்ள சிற்பங்கள் அடங்கிய முன் மண்டபம் உண்டு. இதன் இரண்டு புறங்களிலும் ஆயிரக்கால் மண்டபங்கள் தொடர்கின்றன. இத் திருச்சுற்றின் தெற்கில் ஒரு படிகளமைந்த அழகான குளமும் உண்டு. வடக்கில் ஏதோ ஒரு மண்டபம் இருந்தமைக்குச் சான்று கூறும் வகையில் சுமார் 3 அடி உயரமுள்ள சுமார் 20 தூண்கள் நிற்கின்றன. இதைக் கடந்து தான் மேலைக் கோயிலுக்குச் செல்லவேண்டும். இம் முன் மண்டபத்தோடு ஒட்டி வாயிலில் இரண்டு பெரிய கல் திண்ணைகள் கட்டப்பட்டுள்ளன. இதில் வடக்கும் தெற்குமாக இரண்டு அறைகளும் கட்டியுள்ளனர். ஆயிரக்கால் மண்டபம் பெரும் சிதைவுக்குள்ளானபடியால் மத்தியத் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் இப்போது அதைப் பழுது பார்த்து வருகின்றனர். இனி, கோயில் பகுதிகளைத் தனித்தனியே விரிவாகக் காணலாம்.

### கோயிலின் காலம்

இக்கோயில் யாரால் கட்டப்பட்டது என்பதற்கு நேரடியான கல்வெட்டுச் சான்றுகள் ஏதும் இல்லை. தேவாரம் பாடிய மூவராலும் இக்கோயில் பாடப்படவும் இல்லை. எனவே இது அவர்கள் வாழ்ந்த கி. பி. 7, 8 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றியதாக இருக்க வேண்டும். பிற இடங்களில் சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுகள் இருந்தபோதிலும் கருவறையில் இல்லை. பிற்காலத்திய நாயக்க மன்னர் காலத்தியவையே உள்ளன. எனவே கருவறை பிற்காலத்தவரால் திரும்பக் கட்டப்பட்டிருக்கவேண்டும். கோயிலின் இரண்டாம் திருச்சுற்றின் தென், வட சுவர்களில் சோழன் பரகேசரிவர்மனின் 8-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுகளும், (பு.கோ.க. 48,49,50). பத்தாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டும் (பு.கோ.க. 53). கிடைக்கின்றன. ஆனால் இக்கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டு இப்பரகேசரிவர்மன் யாரென்று துணிய முடியவில்லை.

ஆனால் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அவனது நான்காம் ஆட்சியாண்டில் கல்வெட்டுப் படிமாற்றாக எழுதப்பட்ட ஒரு கல்வெட்டின் (பு. கோ. க. 255) உதவி கொண்டு இக்கோயிலின் காலத்தைக் கணிக்கலாம். இச்சுந்தர பாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டில் ஆற்றூருடையான் பொன்னன் காங்கேயராயன் என்பவனால் இக்கோயிலின் இரண்டாம் பிரகார வாயில் இடித்துக் கட்டப்பட்டது. அப்போது அதிலிருந்த கல்வெட்டைப் படியெடுத்து இப்போது உள்ள மடைப்பள்ளியில் கிழக்குச் சுவரில் எழுதி வைத்தனர். அக்கல்வெட்டில் சோழன் பரகேசரிவர்மனின் 33ஆம் ஆட்சியாண்டில் பிராந்தகன் குஞ்சரமல்லன் என்ற வீரசோழ இளங்கோ வேளான் என்பவன் கோயிலுக்கு நிலம் கொடையளித்தான் என்று கூறப்பட்டுள்ளது. இப்பிராந்தகன் குஞ்சரமல்லன் முதலாம் பராந்தகன் காலத்தவன் என்பது வரலாற்றாய் வாளர் கருத்து[4]. பராந்தகன் ஈழத்தின் மீது படையெடுத்த போது அதற்குப் படைத்தலைமையேற்றவன் இக்குஞ்சர மல்லன். அவனது ஈழ யாத்திரையின் பொருட்டு யாத்திரா தானமாகக் கொடுக்கப்பட்டதே இந்நிலம். எனவே இக்கல் வெட்டு முதல் பராந்தகனின் 33ஆம் ஆட்சியாண்டுக் கல் வெட்டு என்று கொள்வது தகும். அப்படியானால் இக்கல் வெட்டு கி. பி. 940 ஆம் ஆண்டினது. எனவே இக்கோயில் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலாவது, பத்தாம் நூற் றாண்டின் தொடக்கத்திலாவது எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

அர்த்த மண்டபமும், முன் மண்டபமும் சோழர் காலத் தவையே. ஆனால் சபாமண்டபம் என்ற ஒரு வெளிமண்டபம் அதன் அமைப்பில் பாண்டியர் பாணியைக் காட்டுகின்றது. எனவே முதலில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம் முதலியவை முற்காலச் சோழர்களால் கட்டப்பட்டுத், திருச்சுற்று மதிலும் கட்டப்பட்டிருக்கவேண்டும். பின்னர் வந்த பிற்காலப் பாண்டியர்கள் சபாமண்டபத்தை எடுத்திருக்க வேண்டும் எனலாம்.

4. கலைமகள், செப். '56, பக் 280. திரு. சா. கணேசன்.

### கல்வெட்டில் இறைவன் பெயர்

இவ்விறைவன், கல்வெட்டுகளில் பலபெயர்களைக் கொண்டு வழங்கப்படுகிறார். முதலாம் பராந்தகனின் கல்வெட்டாகக் கருதப்படும் காலத்தால் முற்பட்டதும், மாறவர்மன் சுந்தர பாண்டியனின் 4-ஆம் ஆட்சியாண்டில் திரும்ப வெட்டப்பட்டதுமான கல்வெட்டில் இறைவன் திருநலக்குன்றத்துப் பரமேஸ்வரர் (பு. கோ. க. - 255) என்று அழைக்கப்படுகிறார். இதுவே முன்னைய பெயராயிருந்திருக்க வேண்டும். இன்னும் பல கல்வெட்டுகளில் திருநலக் குன்றமுடைய மகாதேவர், திருநலக்குன்றமுடையார், திருநலக் குன்றமுடைய நாயனார் என்றும் அழைக்கப் படுகிறார். மேலைக் கோயிலில் உள்ள சில கல்வெட்டுகள் (பு.கோ.க. – 67, 69, 74) திருநலக்குன்றத்துப் பெருமானடிகள் என்ற ஒருபெயரைக் குறிக்கின்றன. அதுவும் இவ்விறைவன் பெயராகவே இருக்கவேண்டும் அங்கு ஏன் வெட்டப்பட்டன என்பதற்குக் காரணம் விளங்கவில்லை. கி.பி.17–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று (பு.கோ.க. - 866) இறைவனை குடுமிநாத சுவாமி என்று குறிக்கிறது. ஏறக்குறைய இதே காலத்தில் இறைவன் குடுமியாமலை நாயனார் என்றும் ஒரு கல்வெட்டில் ( பு. கோ. க. 906 ) குறிக்கப்படுகிறார். பதினெட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று குடுமிலிங்கம் (பு.கோ. க. - 880) என்று கூறுகிறது. ஆனால் இன்றைய தினம் அரசு ஆவணங்களிலும், பிறரிடமும் வழங்கப் பட்டு வரும் சிகாகிரீஸ்வரர் என்பதற்கு எவ்வித கல்வெட்டுச் சான்றுகளும் இல்லை. குடுமிநாதர் என்பதனை வடமொழியில் அவ்வாறு கூறிவந்துள்ளனர்.

### கட்டிடக்கலை

**கருவறை:** கருவறை பிற்கால நாயக்கர்களால் பிரித்துக் கட்டப்பட்டது என்று முன்னமே கண்டோம். கிழக்கு நோக்கிய கருவறையில் உள்ள லிங்கம் சுயம்புலிங்கம் என்பர். சுமார் $2\frac{1}{2}$ அடி உயர வட்டமான பீடத்தின் மேல் 2 அடி உயர லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. லிங்கத்தின் முன் தலையில் குடுமி இருப்பதற்கு அடையாளமாக ஒரு உருண்டையான அமைப்பு உள்ளது. கருவறையின் நிலைப்படிகளில் இருபுறமும் பத்மவரி வெட்டப்பட்டுள்ளது. நிலையின் மேல் புலகையில் பத்மம் விரிந்த நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**அர்த்த மண்டபம்:** இவ்வர்த்த மண்டபம் கிழக்கு மேற்காக 21அடி நீளமும், தெற்கு வடக்காக 13 அடி அகலமும் கொண்டது. இச்சுவரில் நுழைவாயிலின் இரண்டு புறங்களிலும் இரண்டு ஒட்டிய அரைத்தூண்கள் காணப்படுகின்றன. அவை நீண்டகால், குடம், அமலக்கா, விரிந்த பத்மம், வட்டமான எண் கோணப்பட்டை பகுதி அதன் மேல் சதுரப்பலகை முதலிய அமைப்பினைக் கொண்டவை. இதன்மேல் சதுரமான போதிகை உள்ளது. போதிகை வளைந்து கூரிய முனையுடைய சிறிய வாழைப்பூ போன்ற அமைப்பில் உள்ளது. இத்தூண்களின் பக்கச்சுவர்களும் மேற்குச் சுவரும் இணைகின்ற இடத்தில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு கும்ப பஞ்சரங்கள் உள்ளன. கும்பம் சதுரமானது. அதன் மேலுள்ள நீண்ட தண்டுப் பகுதியின் மேல் கூடு அமைந்துள்ளது.

நான்கு புறங்களிலும் நான்கு அரைத் தாமரைகள் மண்டபத்தைத் தாங்குவதுபோல் கல்லில் வெட்டப்பட்டுள்ளன. மண்டபத்தின் முன் அதாவது கருவறையின் நுழைவாயிலில் போகசக்தியின் செப்புத் திருமேனி எப்போதும் வைக்கப்பட்டிருக்கும். அதன் அருகில் பித்தளையால் ஆன சரவிளக்கு உள்ளது. இச் சரவிளக்கினை இரண்டு வேலைப்பாடு அமைந்த அன்னங்கள் தாங்குகின்றன. இவ்வன்னங்கள் நிற்கும் கீழ்த் தட்டில் எழுத்துக்கள் உள்ளன. மண்டபத்தின் நடுவில் கற்பலகையில் கருவறையைப் பார்த்தவாறு சிறு நந்தி ஒன்று படுத்துள்ளது. இது சோழர்கால நந்தியாக இருக்கலாம். நந்தியின் முன் எப்போதும் ஒரு செப்புக் கண்ணாடி இடம் பெற்றிருக்கிறது.

**மகாமண்டபம்**

மகாமண்டபத்தின் நீள்ம் தென், வடலாக சுமார் 40 அடியும், அகலம் கீழ்மேலாக சுமார் 31 அடியும் கொண்டது. அர்த்த மண்டபத்தை விடப்பெரியது. இம்மண்டபத்தைப் பல பெரிய தூண்கள் தாங்கிநிற்கின்றன. முன்வரிசையில் 4 முழு, 2 அரைத் தூண்களும், இரண்டாம் வரிசையில் 4 தூண்களும் மூன்றாம் வரிசையில் மூன்று தூண்களும் உள்ளன. இன்னும் சில வட்டத்தூண்களும் உள்ளன. தூண்கள் எவ்வித வேலைப்பாடும் இன்றி சாதாரணமாக உள்ளன. செப்புத்

திருமேனிகள் வைக்கப்பட்டுள்ள மேடையை ஒட்டிய தென், மேற்குச் சுவர்களில் இரண்டு சிறிய கற்சாளரங்கள் உள்ளன. தென்மேற்குப் பகுதி விதானத்தில் சூரிய ஒளிக்காகக் கம்பிகள் போடப்பட்டு மேலே சிமெண்டால் கைப்பிடிச் சுவரும் கட்டியுள்ளனர். செப்புத் திருமேனிகள் உள்ள மேடைக்கு அருகில் சற்று கிழக்காக 3' × 3' சதுர வழியுடன் ஒரு சுரங்கம் உள்ளது.

மகாமண்டபத்திலிருந்து அர்த்த மண்டபத்திற்குள் செல்லும் வாயிலின் நிலையிலும் இருபுறங்களில் நாகபந்தமும், பத்ம வரியும் செதுக்கப்பட்டுள்ளன. மேலே முன்முகப்பில் கஜலட்சுமியின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அன்னை அமர்ந்திருக்க இரண்டு யானைகள் இருபுறங்களிலும் துதிக்கையைத் தூக்கி வணங்கும் வகையில் அமைந்துள்ளன. வாயிலின் ஓரங்களில் ஒவ்வொரு அரைத்தூணும், அதை அடுத்து முழுத்தூணும் இடம் பெற்றுள்ளன. இத்தூண்கள் ஒரே அமைப்பைக் கொண்டவை. சதுரமான நீண்ட கால் பகுதி, சிறிய நாகபந்தம், கூரிய முனையைக் கொண்ட போதிகை ஆகியவற்றுடன் விளங்குகின்றன.

## துவாரபாலகர்

அர்த்தமண்டப வாயிலின் இரண்டு புறங்களிலும் இரண்டு துவாரபாலகர்களின் எழிலார்ந்த சிற்பங்கள் நிற்கின்றன. இவை முற்காலச் சோழர்களின் அரிய கலைப்படைப்புகள் தென்புறம் உள்ள துவாரபாலர் சுமார் 5 அடி உயரமுள்ளது. வலது காலை நேராக ஊன்றி இடதுகாலைச் சற்று வளைத்துச் சாய்வாக வைத்து நின்ற நிலை. இடதுகையைக் கதையின்மேல் ஊன்றி வலதுகையை இடதுபுறம் கொண்டுவந்து விஸ்மய முத்திரை காட்டுகிறார். முகத்தைச் சற்று வலம்நோக்கித் திருப்பி, இனிய மென்மையான புன்னகையை வீசிக்கொண்டிருக்கும் காட்சி மனத்தை ஈர்க்கிறது. இதழோரங்களில் இரண்டு வளைந்த பற்களுடன் காணப்படுகிறார் இவர்.

வலதுபுறம் உள்ள துவாரபாலகர் அதே உயரம். அதே மாதிரி நின்றநிலை. வலதுகை கதையின் மேல் உள்ளது. இடது கை வலதுபுறம் வளைந்து வந்து சூசி முத்திரை காட்டி நிற்கிறது.

இதில் நான்கு புறங்களிலும் சாய்சதுர அமைப்பில் நான்கு கற்கள் போடப்பட்டுள்ளன. இதே போன்ற அமைப்பு இக் கோயிலுக்குப் பின்னால் இருக்கும் சவுந்திர நாயகி அம்மன் கோயில் கருவறையிலும், முன் மண்டபத்திலும், விதானத்தில் காணப்படுகிறது. எனவே கி. பி. 13ஆம் நூற்றாண்டில் இத்தகு பாணி பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் சவுந்தர நாயகி அம்மன் கோயிலும் வீரபாண்டியன் காலத்தில் அதாவது 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது தான்.

## விமானம்

இக்கோயில் விமானம் உபானம், பத்மவரி, கண்டம், கபோதம், அதில் வேலைப்பாடமைந்த கீர்த்திமுகக்கூடுகள், ஒவ்வொரு கூட்டிற்கும் இடையில் மாலை போன்ற அமைப்புகள். கபோதத்தின் மேல் சிறிய யாளிவரி, ஆகிய அமைப்புகளுடன் உள்ளது. இதற்குமேல் அதிட்டானம்; பெரிய பத்ம ஜகதி, விருத்த குமுதம், கபோதம், அதிலும் வேலைப்பாடு மிக்க கீர்த்திமுகக் கூடுகள், கூடுகளுக்கிடையில் மாலைகள், திருப்பங்களில் வேலைப்பாடுகள் உள்ளன. கபோதத்தின் மேல் யாளிவரி, திருப்பங்களில் பெரிய முகமுடைய யாளிகள், கண்டம், பத்ம வரிகள் தாங்கிய பட்டிகை முதலியனகொண்டுள்ளது. உயரமான சுவரில், பல வேலைப்பாடு மிக்க தூண்கள் உள்ளன. தூண்களில் நாகபந்தம், பூமுனை சிறிய அளவில் உள்ள போதிகை உள்ளன. சுவர்களில் கோட்டங்களும் கும்ப பஞ்சரங்களும் உள்ளன.

## கோட்டங்கள்

கருவறையின் தென்புறம் இரண்டும், மேற்கில் ஒன்றும் வடக்கில் இரண்டுமாக ஐந்து கோட்டங்கள் உள்ளன. இக் கோட்டங்களில் தென்புறம் முதல் கோட்டத்தில் ஒரு பிச்சாடனர் சிற்பமும், அடுத்ததில் ஒரு தட்சணாமூர்த்தி சிற்பமும் வைக்கப்பட்டுள்ளன. தட்சிணாமூர்த்தி யோக நிலையில் உள்ளார். இக்கோட்டத்தின் முன் தற்காலத்தார் ஓர் அறை கட்டித் தனிக் கோயில் ஆக்கியுள்ளார்கள். மேற்குக் கோட்டத்தில் ஒரு திருமால் சிற்பமும், வடக்கில் ஒன்றில் பிரம்மா,

மற்றொன்றில் துர்க்கை சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. இக்கோட்டச்சிற்பங்கள் யாவும் கி. பி. 10-11ஆம் நூற்றாண்டினது. சிதைந்த நிலையில் உள்ள இவை கருவறை பிரித்துக் கட்டப்பட்டபோது மீண்டும் வைக்கப்பட்டிருக்க வேண்டும். கோட்டங்களுக்கு இடையில் கும்ப பஞ்சரங்கள் அமைந்துள்ளன. கும்பத்தைச் சுற்றிப் பூ வேலைப்பாடமைந்த தோரணமாலைகள் செதுக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தரம் அல்லது கூரை, பத்மவரி, கொடுங்கை, யாளிவரி கொண்டு விளங்குகிறது. கொடுங்கையில் கீர்த்தி முகக் கூடுகள் பல உள்ளன. அவற்றினுள் கல் சுமக்கும் பூதம், சாலை, கூடு, சங்கம் ஊதும் பூதம், குறுகியமர்ந்துள்ள குரங்கு, சிங்கம், விநாயகர், நரசிம்மம், யானை, ஆடல் மகன், அரவணையில் அமர்ந்த பெருமாள், யோக தட்சிணாமூர்த்தி, நான்முகன், தேவி, வணங்கும் மனிதன் போன்ற உருவங்கள் சுற்றிலும் செதுக்கப்பட்டுள்ளன. யாளிவரியின் வடபுறத்தில் உள்ள வாய் பிளந்த யாளி ஒன்றின்மேல் உண்ணாக்கில் ஒரு பெண் ஆடுவதாகச செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக் கது

கழுத்தின் நான்கு புறமும் நான்கு நந்திகள்உள்ளன. முற்றிலும் செங்கல்லால் கட்டப்பட்டு மேலே சுதை பூசப் பட்ட கட்டிடப்பகுதியே விமானத்தின் மேல்பகுதியாகும். இதில் மூன்று நிலைகளில் சுதையிலான சிற்பங்கள் உள்ளன.

கிழக்குப்பகுதி முதல்நிலையில் விநாயகர், நாயன்மார், முனிவர், வாமனன், சாமரப்பெண்கள், திருமால், உமாசகித சுகாசனர் உருவங்களும், இரண்டாவது நிலையில் மயில்வாகனனாக முருகன், வள்ளி, தெய்வானை, சாமரப் பெண் உருவங்களும், மூன்றாவது நிலையில் யானை மீது இந்திரன்உருவமும் சுதையால் அமைந்துள்ளன.

தென்புற முதல்நிலையில் தட்சிணாமூர்த்தி, திருமால், கருடன், அனுமன், தாண்டவமாடும் சிவன்-சக்தி, வியந்து நோக்கும் உமை, மானுக்குத் தளிரூட்டும் பிட்சாடனர் இரண்டாவது, மூன்றாவது நிலைகளில் தட்சிணாமூர்த்தி,

துவார பாலகர் உருவங்களும் உள்ளன. மேற்குப் பகுதி முதல் நிலையில் திருமால் இரு தேவியருடனும், நடனப்பெண் அடியார் உருவங்களும் இரண்டாவது நிலையில் யோக நரசிம்மர், துவாரபாலகர் உருவங்களும், மூன்றாவது நிலையில் சுதை உருவம் உடைந்தும் உள்ளன.

வடபுறம் முதல் நிலையில் பிரமன் உருவமும், அரசத் தம்பதிகளின் ஆலிங்கனக் காட்சியும், திருமால் உருவங்களும் இரண்டாவது நிலையில் சுதை உருவம் சிதைந்தும் காணப் படுகின்றன.

சிகரம் வேசர வகையைச் சேர்ந்தது. நான்கு புறமும் நான்கு பெரிய கீர்த்திமுகக் கூடுகள் உள்ளன. அவற்றின் இடையில் நான்கு சிறிய கூடுகளும் உள்ளன.

## முதல் திருச்சுற்று மாளிகை

கருவறை, அதை ஒட்டிய மண்டபங்களைச் சுற்றித் திருச் சுற்று மாளிகை எடுக்கப்பட்டுள்ளது. திருச்சுற்றில் கருவறைக்கு எதிரில் பெரும்பெரும் ஆறு தூண்கள் நிறுத்தப்பட்டுப் பலகைக் கற்களைக்கொண்டு கூரை அமைத்துள்ளனர். கருவ றையின் மேற்கில் இத் திருச்சுற்றில் தேவ கோட்டத்திற்கு எதிரில் ஒரு தூணில் ஒரு அரசகுல உருவம் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இது கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் நாயக்கர் ஆட்சியின்கீழ் இப்பகுதியை ஆண்ட பல்லவராயர் ஒருவரின் சிற்பமாக இருக்கக்கூடும். இவ்வுருவம் வணங்கிய நிலையில் உள்ளது. அவருக்குப் பின்னால் இரு சிறு ஆடவர் உருவங்கள் ஆயுதத்தைக் கட்கத்தில் வைத்து வணங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளன.

## சண்டிகேசுவரர் கோயில்

திருச்சுற்றின் வடக்கில் துர்க்கைக்கு எதிரில் சண்டிக்குச் சிறு கோயில் எடுக்கப்பட்டுள்ளது. இதனுள் 15, 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சண்டியின் சிற்பம் வைக்கப் பட்டுள்ளது. இக்கோயிலின் கிழக்குச் சுவரில் தடி ஒன்றை ஊன்றிக்கொண்டு இரண்டு ஆண் உருவங்கள் ஒரே தலை யுடன் காணப்படுகின்றன. இத்தகு வேலைப்பாடு நாயக்கர் கட்டிடங்களில் பெரும்பாலும் நாம் காண்பதாகும்.

வடக்குத் திருச்சுற்றிலேயே பிரணாள நீர் விழும் பெரிய தொட்டி கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. பிரணாளம் யாளி முகத்தைக் கொண்டுள்ளது. கல் தொட்டி 3' உயரம். நான்கு புறங்களிலும் இரட்டை நந்திகள் எதிர் எதிராக அமர்ந்து தலையை முட்டவைத்துக்கொண்டிருக்கின்றன. இத் தொட்டியின் கீழாக நீர் ஒரு கல் வாய்க்காலில் செல்கிறது. இக்கல் வாய்க்காலின் திருப்பங்களில் இரட்டை நந்திகள் ஒன்றாக அமைந்துள்ளன.

### தென் திருச்சுற்றுமாளிகை

தென் திருச்சுற்றுமாளிகையில் அங்கு வாசல் ஒன்றுள்ளது. சுவர்களில் கல்வெட்டுகள் வெள்ளையடிக்கப்பட்டுத் தெளிவற்ற நிலையில் உள்ளன. திருச்சுற்றுமாளிகையில் இப்போது திருவிழாவிற்கு வேண்டிய அட்டையில் செய்த தேர், சப்பரம் போன்றவைகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

### உதிரிச் சிற்பங்கள்

தென் புறத்திலேயே சப்தமாதர்களின் சிற்பமும் மற்றும் சில சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. சப்தமாதர்களில் நான்கு கன்னியர் ஒரே கல்லில் வரிசையாகவும், மற்ற மூன்றும் தனித்தனியாகவும் உள்ளன. அனைத்தும் ஒரே மாதிரி அமைப்புக் கொண்டவை. பெரும்பகுதி சிதைந்து கைகளில் உள்ள ஆயுதங்களோ, கொடி, வாகனம் போன்ற புற அமைதிகளோ காண முடியவில்லை. இவை கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத்தான் இருக்கும். இதே பகுதியில் சண்டிகேசுவரர் 3, தாளமிடும் சம்பந்தர் 2, தியானமூர்த்தி 2, அம்மன் 2, சுகாசனர் 1, சிவலிங்கம் 1, விநாயகர் 2 ஆகியவை உள்ளன. தென்மேற்கு மூலையில் ஒரு அறை கட்டப்பட்டுள்ளது. இவ்வறைக்கருகில் ஒரு வலம்புரி விநாயகர் இடம் பெற்றுள்ளார். இது சற்று காலத்தால் முற்பட்டது.

மேற்குப் பகுதியில் 10 தூண்கள் உள்ளன. இப்பகுதி மாளிகை முழுவதும் சிறுசிறு அறைகளாகத் தடுக்கப்பட்டு ஒவ்வொரு அறையிலும் சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது. மேற்குப்பகுதியின் இறுதியில் ஜேஷ்டா தேவியின் சிற்பம் உள்ளது.

வடதிசையிலும் ஒருவாசல் உள்ளது. இவ்வாசல் அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் செல்கிறது. வடபுறமும் சில உதிரிச்சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. லிங்கம், லிங்கோத்பவர், பிரம்மா, அம்மன், சண்டி, கஜலட்சுமி, நந்தி, முதலிய சிற்பங்கள் உள்ளன. இதில் வடகிழக்கில் உள்ள முதல் தூணில் பாண்டியர் சின்னமாகிய இரட்டைக் கயலும் செண்டும் தலைகீழாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் சூரியனாரின் சிற்பம் உள்ளது. தலையில் ஒளி வட்டம் காட்சியளிக்கிறது.

### ஓவியங்கள்

குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிறப்பான ஓவியங்கள் ஏதும் இங்கு இல்லை. ஆனால் திருச்சுற்றுமாளிகையின் தென்புறம் உள்ள சுவரில் சில பண்டைய ஓவியங்களிருந்த தடயம் காணப்படுகிறது. கருப்பு, மஞ்சள் கலந்த வண்ணங்கள் இரண்டு மூன்று இடங்களில் அங்கும் இங்குமாகக் காணப்படுகின்றன. இவற்றின் மேல் பிற்காலத்தில் சில ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அதில் மஞ்சள், சிவப்பு வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யானை ஒன்று நிற்பது போலும், அதன் மத்தகத்தில் வாள் ஒன்று குத்தியுள்ளது போலும், அவைகளுக்கு எதிரே இரண்டு ஆடவரும், பெண்டிரும் நிற்பது போலும் உள்ளன. மரமோ, செடியோ ஒன்று காணப்படுகிறது. யானை ஒன்று துதிக்கையால் மரக்கிளையைப் பற்றிக்கொண்டு ஓடி வருவது போல ஒரு காட்சி தீட்டப்பட்டுள்ளது. ஒரு பெண்ணும், ஆணும் அருகருகே நிற்கின்றனர். பெண்ணின் கொண்டை அழகும், புடவை வண்ணமும், சில பூ வேலைப்பாடுகளும் நன்கு அமைந்துள்ளன. இவை கி. பி. 17, 18-ஆம் நூற்றாண்டு ஓவியமாக இருக்கலாம்.

### முதல் கோபுரம்

கோயிலின் முதல் திருச்சுற்றின் வாயிலை அலங்கரிக்கும் சிறிய கோபுரம் இது. ஏற்கனவே இருந்த வாயிலை மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அவன் அரசியல் தலைவன் காங்கேயராயன் திருத்தி அமைத்துள்ளான். அப்போது தான் இக்கோபுரம் சற்று சீரமைக்கப்பட்டும், திருச்சுற்று மாளிகை கட்டப்பட்டும் இருக்கவேண்டும்.

ADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY, ACC. NO. Date MADRAS-28

கோபுர வாயில் உயரமானது. சாதாரண, வேலைப் பாடுகள் அதிகம் இல்லாத பழைய மரக்கதவு பொருத்தப்பட்டுள் ளது. வடப்பக்கத்தில் உள்ள வாயிற் சுவரில் ஒரு நெற் களஞ்சியம் முன்பு இருந்திருக்கவேண்டும். ஏனெனில் அதில் மேலே பெரிய துவாரமும், கீழே சிறிய துவாரமும் உள்ளன. சிறிய துவாரத்தில் கைவிட்டுப் பார்த்தால் இப்பொழுதும் சில நெல் உமிகள் கிடைக்கின்றன. கோபுரத்தின் வாயில் மேல் நிலையில் கஜலட்சுமியின் உருவம் பொறிக்கப்பட்டுள் ளது. வாயிலின் இரண்டு புறங்களிலும் 7 அடி உயரமுள்ள இரண்டு துவாரபாலகர்கள் நிற்கின்றனர். இவர்கள் இரண்டு தனித்தனி தூண்களில் செதுக்கப்பட்டு வாயிலை ஒட்டி நிறுத்திவைக்கப் பட்டுள்ளனர். தென்புறத் துவாரபாலகர் எட்டு கைகளில் வலக்கைகள் நான்கில் மேலிருந்து கீழாக முறையே அம்பு, அக்கமாலை, கத்தி, சூசி முத்திரையும், இடக் கைகளில் மேலிருந்து கீழாக முறையே வில், மழு, கேடயம் கொண்டு இன்னொரு கையால் கதையின் மேல் கவிழ்த்து வைத்துக் காட்சி தருகிறார். இது கி. பி. 13ஆம் நூற்றாண் டின் பாண்டியர் காலக் கலைஅமைப்பு.

வலது முன்கை வேழக்கை போல் வளைந்து இடது புறம் உள்ள கதையின்மேல் படிகிறது. எட்டுகைகள், வலம் இருந்து அம்பு, சக்கரம் அல்லது அக்கமாலை, கத்தி, சூசி முத்திரையும், இடப்புறம் வில், மழு, கேடயம், கஜஹஸ்தமாகவும் காணப்படுகின்றன. இதுவும் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சிற்பமே.

இக்கோபுரப் கீழ் பகுதி கல்லாலும், மேற்பகுதி செங்கல், சுதையாலும் ஆகியது. அதிக உயரமில்லாதது. மேற்பகுதி இரண்டு நிலைகளாகச் சுதைச் சிற்பங்களுடன் விளங்குகிறது.

**வசந்தமண்டபம்**

முதல் கோபுரத்தை அடுத்து உள்ள பகுதி ஒரு பெரிய மண்டபம் ஆகும். கோயிலின் வசந்தவிழா உற்சவத்தின் போது இறைவன் இம்மண்டபத்தில் அமர்ந்திருக்கிற காரணத் தால் வசந்தமண்டபம் என்று பெயர் பெற்றது. இம் மண் டபம் 98 அடி நீள, அகலம் கொண்ட ஒரு சதுரமான மண்

டபம். இம்மண்டபத்தில் வரிசைக்கு 12 ஆக 8 வரிசைகளில் 96 தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இத்தூண்களின் அடிப் பகுதி சதுரமானது. இவற்றில் பலவித சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிவலிங்கம், கும்பம், பாயும்புலி, தலைமேல் கைதூக்கி வணங்கும் மனிதன், கீர்த்தி முகக் கூடு, அதனுள் மனித முகம், பின்னிக் கொண்ட பாம்புகள், அமர்ந்த நரசிம்மர், மீன், ஆடல்மகள் போன்ற பலவித அமைப்புகள் செதுக்கப்பட்டுள்ளன. ஒரு தூணில் பெண் ஒருத்தி பிறந்த மேனியாக நிற்க அவள் இரண்டு தோள்களில் இரண்டு கிளிகள் அமர்ந்திருக்க மூன்றாவது கிளி அவளது மர்மத்தானத்தைக் கொத்துவதாக அமைந்துள்ளது. இதே தூணில் இவ்வுருவத்தின் பின்புறம் ஓர் ஊறும் பல்லி செதுக்கப்பட்டிள்ளது.

### சிற்பத் தூண்கள்

நடுவில் உள்ள இருவரிசைத் தூண்கள் சிற்பங்கள் உள்ள தூண்கள். இவை உருவத்தில், கனத்தில், வேலைப்பாட்டில் சிறப்பான தன்மையைப் பெற்றுள்ளன. சிற்பங்கள் உள்ள தூண்களுக்குமேல் விதானத்தைத் தாங்குவதற்கெனக் கிழக்கு மேற்காக நெடிய கற்கள் போடப்பட்டுள்ளன. அக்கற்களில் பல அழகிய சிறிய சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன. அச் சிற்பங்களில் சில பால் உணர்வுச் சிற்பங்கள் (Erotic-figures). இன்னும் சில நாட்டியச் சிற்பங்கள், போர்க் காட்சிகள், தவம் செய்யும் முனிவர்கள், சில பூதங்கள் முதலியவை உள்ளன.

### காங்கேயராயன் கொரடு

வசந்த மண்டபத்திலிருந்து கோயிலுக்குள் நுழையும் வாயிலில் இரண்டு புறமும் இரண்டு சிறிய கல் மேடைகள் உள்ளன. இவை காங்கேயராயன் கொரடு என்று பெயர் பெறுகின்றன. இவை இவ்வாசலை இடித்துக்கட்டிய காங்கே யராயன் பெயரால் அழைக்கப்படுகின்றன போலும். இம்மண்ட பத்திலேயே கருவறைக்கு நேர் எதிரே பலிபீடமும், கொடி மரமும் உள்ளன. பலிபீடத்தின் முன்னர் நந்தி ஒரு பீடத்தில் அமர்ந்துள்ளது. இது பாண்டியர் காலத்து நந்தி. இது அமர்ந் துள்ள மேடையும் பலிபீடம் போன்ற அமைப்பு உடையது.

கொடிமரத்திற்கு முன்னர் சிறு சிறு கற்றூண்களையும் சிறு சிறு பலி பீடங்களையும் பிற்காலத்தினர் கொண்டுவந்து வைத்துள்ளனர். கொடிமரம் உள்ள மேடையும் உபபீடம், பத்மவரி கபோதம், கூடு முதலியவற்றுடன் அமைந்துள்ளது. கவிழ்த்து வைக்கப்பட்ட விரிந்த தாமரையில் கொடிமரம் நடப்பட்டுள்ளது. உருண்டையான மரம் விதானத்தையும் கடந்து வானில் நீண்டுள்ளது.

வசந்த மண்டபத்தின் தென்பகுதியில் ஒரு சதுரமான கல் பீடம் அமைக்கப்பட்டுள்ளது. வசந்த விழாவின்போது இறைவன் இதில் அமர்ந்து மக்களுக்குக் காட்சி கொடுப்பார். அம்மேடையைச் சுற்றிலும் மரத்தால் செய்யப்பட்ட இக் கோயில் வாகனங்கள் பல வைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியிலேயே பல மரப்பெட்டிகளில் சுவாமிக்கு உரிய ஆடைகள் ஆராதனை நேரங்களில் இசை முழங்குவோரின் இசைக்கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்திலேயே திருச்சுற்றை ஒட்டி இரண்டு, மூன்று அறைகள் கட்டப்பட்டுள்ளன. அவ்வறைகளில் பழைய செப்புப் பாத்திரங்கள் பல வைக்கப்பட்டுள்ளன.

## இரண்டாம் திருச்சுற்று

வசந்த மண்டபத்தை உள்ளடக்கியே இரண்டாம் திருச்சுற்று உள்ளது. இத் திருச்சுற்றின் தென்புறம், யாகசாலை, மடைப்பள்ளி, ஒரு அணிவெட்டுக்கால் மண்டபம் முதலியவை உள்ளன. இத்திருச்சுற்றின் வடக்கில்தான் அகிலாண்டேஸ்வரி அன்னையின் கோயில் அமைந்துள்ளது. இத்திருசசுற்றில் எல்லாப் பகுதிகளிலும் மகிழமரம், தென்னை, மா, வேம்பு, புன்னை, அரளி போன்ற மரங்கள் உள்ளன. இதன் முன் படுக்கையாகக் கிடக்கும் ஒரு தூண் போன்ற கல்லில் நன்றாகக் கோடுகள் போட்டு வெட்டப்பட்ட எழுத்துக்கள் உள்ளன. வெளியிலிருந்து இவ்விடத்திற்கு எப்படியோ இக்கல் வந்துள்ளது. யாகசாலையின் எதிரில் சற்றுத் தொலைவில் ஒரு கிணறு உள்ளது.

## மடைப்பள்ளி

யாகசாலைக்கு அடுத்து மேற்காக, திருச்சுற்று மதிலோடு சேர்த்துக் கட்டப்பட்ட கற்கட்டிடம் முற்கால மடைப்பள்ளி.

இது இப்போது மடைப்பள்ளியாகப் பயன்பெறவில்லை. இதன் வாசல் மேற்குநோக்கி உள்ளது. இம்மடைப்பள்ளியின் கிழக்குச் சுவரில்தான் பல கல்வெட்டுக்கள் திரும்ப எழுதப்பட்டுள்ளன. இச்சுவரில் உள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முற்பட்டது குலோத்துங்கச் சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. (பு.கோ.க. - 215) ஆனால் இக் குலோத்துங்கன் யாரென்று அறியமுடியவில்லை. எனினும் இம்மடைப்பள்ளி கி. பி. 12, 13 ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டிருக்கவேண்டும்.

இம் மடைப்பள்ளி முன்பகுதியில் நீண்ட தாழ்வாரத்தைக் கொண்டுள்ளது. உள்ளே ஒரே அறை. நடுவில் நான்கு தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இத்தூண்களுக்கு நேர் சதுர அளவில் விதானம் வேயப்படாமல் சதுரமான துவாரமாக விடப்பட்டுள்ளது.

## குருந்தபிள்ளை

கிழக்குச் சுவரில் ஒரு கல்லில் "குருந்த பிள்ளை உபயம்" என்று 17-ஆம் நூற்றாண்டு எழுத்தில் பெரிதாக எழுதப்பட்டுள்ளது. இதுவும் வேறிடத்திலிருந்து எடுத்துவரப்பட்ட கல்லே. குருந்தப் பிள்ளை என்பவர் ரகுநாத ராயத் தொண்டைமானின் அமைச்சராக இருந்தவர். இவர் பல பகுதிகளை இக் கோயிலில் புதுப்பித்துக் கட்டியுள்ளார்.[5]

## பெருமாள் கோயிலா?

இத்திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் சுவரை ஒட்டிக் கட்டப்பட்டுள்ள ஒரு மண்டபம் உள்ளது. இது ஒரு காலத்தில் பெருமாள் கோயிலாக இருந்தது என்பர். இம்மண்டப வாயில் கிழக்கு நோக்கியுள்ளது. நீண்ட முன்மண்டபமும், அதனுடன் ஒரு கருவறை போன்ற அறையும் கொண்டது. தூண்களில் ஐந்தில் யாளிகள் இடம்பெற்றுள்ளன. மொத்தம் 15 தூண்களில் யானையின் மீது நிற்கின்ற யாளியின் உருவம் வடிக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலாகத் தூண்களில் அரைத் தாமரையும், பலகைக் கல்லும் போடப்பட்

---

5, A general History of the Pudukkottai State. P. 156.

டுள்ளன. தூண் அமைப்பு இக்கோயிலில் காணப்படும் பிற நாயக்கர் காலத் தூண்களையே ஒத்துள்ளன. கருவறைக்கு எதிரிலுள்ள இரண்டு எதிர்த் தூண்களில் வணங்கிய நிலையில் உள்ள மனித உருவச் சிலை உள்ளது. இடுப்பில் குறுவாள், சாய்ந்த குடுமி, தூணின் பின்புறம் சில சிறிய உருவங்கள் வணங்கும் நிலையில் உள்ள இவை 17ஆம் நூற்றாண்டு நாயக்கர் கீழ் ஆண்ட சிற்றரசர்களாக இருக்கலாம். இன்னும் ஒரு தூணில் வியாக்ரபாதர், லிங்கத்தின் மேல் சுற்றியுள்ள பாம்பின் (பதஞ்சலி) மேல் நிற்கிறார். வணங்கும் நிலையில் உள்ளார். அணிவெட்டிக் கால்களில் பலவித திருமால் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

### கருவறைதானா?

மண்டப முடிவில் கருவறை போன்றே அமைப்புக் கொண்ட நீண்ட அறை ஒன்று உள்ளது. உள்ளே மேற்குச் சுவரோடு ஒட்டி தென் வடலாக சுமார் மூன்றடி உயர நீள மான மேடை கட்டப்பட்டுள்ளது. அம்மேடை உபபீடம், பத்மஜகதி, கண்டம், குமுதம், கூடுடைய கபோதம் முதலியவை கொண்டது. தெய்வங்கள் இருந்தமைக்கு எவ்விதத் தடையமும் இல்லை. சுவர்களில் பிற்காலத்தார் சாந்து பூசியுள்ளனர். வெளிப்புறம் மூன்று பகுதிகளிலும் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. வடபுறம் தேவ கோட்டத்தின் கீழ் கோமுகம் உள்ளது. கோட்டத்தின் மேல் பகுதியில் இரண்டு சாலைகளும், அதனுள் உருவம் கொண்ட கூடுகளும் பெற்றுள்ளன. நீண்ட கல்மேடை கருவறைக்குள் இருப்பதால் இது அனந்தசயனர் கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர். சரியான சான்று ஏதும் நமக்கு கிடைக்கவில்லை. ஆனால் கோட்டம், பிரணாளம் போன்ற அமைப்புகள் கொண்டு பார்க்க இது ஒரு கோயிலாகத்தான் இருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

முன் மண்டபத்தில் உள்ள தூண்களில் பல புடைப்புச் சிற்பங்கள் சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. நடமிடும் மங்கை, சஞ்சீவி மலையைத்தூக்கும் அனுமன், அன்னம், முருகன், விநாயகர், ஆடல்மகன், மத்தளம் கொட்டுவோன்,

கமண்டலம், குண்டிகையுடன் வரும் முனி, தவம் செய்யும் முனிவன், நரசிம்மம், பிச்சைபுகும் பெருமான், இன்னும் சில பூவேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் அம்மனுக்கென, அம்மன் கோவிலுக்கு எதிரில் ஒரு யாகசாலை எடுக்கப்பட்டுள்ளது.

## உதிரிச் சிற்பங்கள்

வசந்த மண்டபத்தில் வடக்காக முதல் திருச்சுற்றுச் சுவரை ஒட்டி பல உதிரிச் சிற்பங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் கை, கால் சிதைந்த மிகச் சிறிய சிற்பங்கள், தலை மட்டும் கொண்டது, அழகிய முழுமையான அய்யனார் சிற்பம் முதலியவை இங்கு வைக்கப்பட்டுள்ளன. அம்மன் பலிபீடத்திற்குத் தெற்காக உள்ள காலி இடத்தில் இக்கோவிலில் கீழே தோண்டும்போது கிடைத்ததாக சில கட்டிடத் தூண்களும் சிற்பங்களும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

## இரண்டாம் திருச்சுற்று மதில்

வசந்த மண்டபத்தை உள்ளடக்கியது இரண்டாம் திருச்சுற்று மதில். இம்மதிலின் தென் சுவரில் மடைப்பள்ளிக்கு சற்று கிழக்காக ஒரு வாயில் தெற்கு நோக்கியுள்ளது. மூன்றாம் திருச்சுற்றுக்குச் செல்லும் வழியாக உள்ள மற்றொரு வாயில் மேற்குச் சுவரில் உள்ளது. இவ்வாயில் மேலைக் கோயிலுக்குச் செல்லும் வழியாகப் பயன்பட்டது. இப்பொழுது அடைக்கப்பட்டுள்ளது. இத்திருச்சுற்று மதிலின் கிழக்கு வாசலில் உயரமான எழுநிலைக் கோபுரம் கட்டப்பட்டுள்ளது.

இக்கோபுர வாயிலின் இரண்டு புறங்களிலும் பாண்டியர், பாணர், நாயக்கர் காலத்தைச் சேர்ந்த சுமார் 9 கல்வெட்டுகள் உள்ளன. பலபாடற் கல்வெட்டுகளும் இடம் பெற்றுள்ளன. இங்குள்ள 9 கல்வெட்டுகளிலும் காலத்தால் முந்தியது முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 7ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. (பு. கோ. க-266) இக்கல்வெட்டைக் கொண்டு இக்

கோபுரம் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் சுந்தரபாண்டியனால் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். வாயிலில் பாண்டியரது சின்னங்களான கயலும் செண்டும் இங்கு பொறிக்கப்பட்டுள்ளமை இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

## கோபுர அமைப்பு

கோபுரம் கற்களாலான உயரமான அதிட்டானப் பகுதியைக் கொண்டது. உபபீடம். முற்றிலும் மண்ணில் புதைந்துள்ளது. அதிட்டானப் பகுதியிலுள்ள கபோதம் பல கூடுகளைக் கொண்டுள்ளது. கூடுகளினுள் பலவித சிற்பங்கள் சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. தென்சுவர்க் கபோதத்தில் அமைந்துள்ள கூடுகளில் சிங்கத்தின் மீது அமர்ந்த வீரன், குழல் ஊதும் பூதம், கையில் கத்தியுடன் ஒய்யாரமாய் அமர்ந்துள்ள பூதம், ஆடல் மகள், மத்தளம் வாசிக்கும் பெண், ஆடும்குள்ள பூதம், பெண் ஒருத்தி இரண்டு கைகளையும் ஊன்றி இரண்டு கால்களையும் மேலே தூக்கிக் கரணம் செய்யும் சிற்பம், ஆடும்பூதம், விநாயகர் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

வடக்குப்புறத்தில் ஆணும், பெண்ணும் எதிர் எதிராக ஆடும் காட்சி, மண்டியிட்டு லிங்கத்தை வணங்கும் பெண், லிங்கத்தின் மீது பால் சுரக்கும் பசு, குழலூதும் பூதம், ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டுள்ள மூன்று பெண்கள், யானையின் துதிக்கைப்பிடிக்குள் அகப்பட்ட ஒரு மனிதன், எதிரியின் சிரம் அரிந்த வீரன், கூத்தாடும் பூதம், தோளில் கோலுடன் ஆடும் ஆடவன், ஆடல்மகள், பம்பை, மத்தளம் கொட்டும் உருவங்கள் போன்ற பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

அதிட்டானப் பகுதிக்கு மேல் உறுதியான சுவர் எழுப்பப்பட்டுள்ளது. சுவர்களிலுள்ள தூண்கள் மிக நேர்த்தியான வேலைப்பாடு கொண்டவை. தூண்களுக்கிடையில் கோட்டமும், கும்ப பஞ்சரமும் இடம் பெற்றுள்ளன. கோட்டங்களில் உள்ள பத்ம பீடத்தில்நான்கு கரங்களையுடைய துவாரபாலகர் சிலைகள் உள்ளன. இத் துவாரக பாலகர்கள் பிற்காலப் பாண்டியர் காலமான கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

பிரஸ்தரம் வளைந்த கொடுங்கையைக் கொண்டுள்ளது கொடுங்கையுள் கூடுகளும், அதனுள் சிறிய சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. ஆடல் மகள், வீரனை விரட்டும் யானை, தவமி யற்றும் முனிவன், லிங்கத்தின்மீது பால் சுரக்கும் பசு போன்ற சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. கொடுங்கையின் மேல் யாளி வரி உள்ளது. யாளிகள் அனைத்தும் முற்றாகச் சிதைந்துள்ளன. இதற்கு மேல் செங்கல்லால் கட்டப்பட்டு நிற்கிறது.

### கோபுர வாயில்

வாயில் மிக உயரமானது. இரண்டு புறமும் பல கல் வெட்டுகள், குறிப்பாக பாடற் கல்வெட்டுகள் இடம் பெற்றுள் ளன. அவற்றில் இன்று சுண்ணம் பூசப்பட்டு மறைக்கப்பட்டு விட்டன. தென்புறநிலையில் பாண்டியர் சின்னமான இரட்டை மீன்களும், ஒரு செண்டும் பொறிக்கப்பட்டுள்ளன. இதுபோன்று பாண்டியர் சின்னம் பொறித்த கோபுரங்களை நாம் திரு வானைக்காவல், திருவதிகை, சிதம்பரம் போன்ற இடங்களில் காணலாம்.

நிலைப்படியின் இரு புறங்களிலும் கொடிக்கருக்கு வெட் டப்பட்டுள்ளது. கோபுரத்தின் உட்பகுதியில் இரண்டு புறமும் உயரமான திண்ணைகள் உள்ளன. இப்பகுதிகளில் கல் வெட்டுகள் உள்ளன. தென் திண்ணையில் கோபுர உச்சிக்குச் செல்லும் படிகள் செல்கின்றன. இக்கோபுர மேற்குப்பகுதி ஏழு நிலைகளைக் கொண்டது. முற்றிலும் செங்கல்லால் ஆனது. சுற்றிலும் பலவித சுதை உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இன்று பெரும்பகுதி சிதைந்து விட்டது.

கொடுங்கைப் பகுதியில் உள்ள கூடுகளில் மனிதமுகமும், குரங்கு, அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்குதல் போன்ற சிற் பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. ஓரிடத்தில் பல்லி ஒன்றின் உடல் மட்டும் தலைகீழாகச் செதுக்கப்பட்டுள்ளது.

### ஆயிரக்கால் மண்டபம்

கோயில் வாயிலில் நுழைந்தவுடன் இருப்பது இம்மண் டபமே. வாயிலின் நேராக இருபுறமும் உள்ள தூண்களில் தான் அனுமான் உள்ளிட்ட சிற்பங்கள் உள்ளன. எனவே இதற்கு அனுமனடி என்ற பெயரும் உண்டு.

சிற்பத் தூண்கள் பெரியவையாயும் ஒரே மாதிரியான அமைப்பும் கொண்டவை. தூண்கள் கீழே சதுரமான அமைப்பும், அதற்குமேல் சிற்பமும் கொண்டுள்ளன. போதிகையில் லேசான குமிழ் மட்டும் காட்டப்பட்டுள்ளது. ஆயிரக்கால் மண்டபத்தில் தெற்கிலும், வடக்கிலுமாக இப்போது உள்ள தூண்கள் 645தான். பல தூண்கள் வீழ்ந்துபட்டுள்ளன. விதானமும் விரிசல் ஏற்பட்டு விட்டது.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் இம்மண்டபம் கட்டப்பட்டிருக்க வேண்டும். முன்னால் கட்டினமை என்பதற்கு ஆதாரங்கள் இல்லை.

தூண்களின் கீழ்ப்பகுதிகளில் மீன்கள், ஐந்து தலை நாகம், விரிந்த தாமரை, பின்னிக்கொண்ட பாம்புகள், கும்பங்கள் போன்ற சிற்பங்கள் சிறிய அளவில் வெட்டப்பட்டுள்ளன. இம்மண்டபத்தை ஒட்டியே மூன்றாம் திருச்சுற்றுமதில் எடுக்கப்பட்டுள்ளது. மூன்றாம் திருச்சுற்றில் தென்புறம் ஒரு குளம் உள்ளது. இது இவ்வூரிலுள்ள ஒன்பது தீர்த்தங்களுள் ஒன்றென எண்ணப்படுவது. வடதிருச்சுற்றில் ஏதோ மண்டபம் இருந்திருக்கலாம். இரண்டாம் திருச்சுற்று மதிலை ஒட்டி நின்றுள்ள 3 அடி உயரமுள்ள சுமார் 20 தூண்கள் நம்மை இவ்வாறு நினைக்கத் தூண்டுகின்றன. மூன்றாம் திருச்சுற்றின் தென் மதிலும், வடமதிலும் மேலைக்கோயிலையும் உள்ளடக்கி மலைப்பாறையோடு சென்று முடிவடைகின்றன.

## அனுப்பு மண்டபம்

குடுமிநாதர் கோயிலின் நேர் எதிரில் ஒரு கல்மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இது அனுப்ப மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இது பல்லவராயர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும். சுவாமி வீதி உலா வந்து திரும்பும்போது இம்மண்டபத்தில் தங்கி இளைப்பாறுவது வழக்கம். அப்போது அனைத்து இசைக்கருவிகளும் முழங்கும். பின் அங்கு ஆராதனை முடிந்து இறைவன் கோயிலுக்குள் கொண்டு செல்லப்படுவார். வீதிவலம் வந்த இறைவனை, அலுப்பு நீக்கி அனுப்புவதால் இதுஅனுப்பு மண்டபம் என ஆகியிருக்கலாம்.

மண்டபத்தின் முதல் வரிசை 2,3ஆம் தூண்களில் இரண்டு மனித உருவச்சிற்பங்கள் உள்ளன. இது 17-ஆம் நூற்றாண்டு நாயக்கர் அல்லது பல்லவராயர் சிற்பங்களாக இருக்கலாம். வணங்கிய நிலையில் உள்ள இவ்வுருவங்களின் குடுமி இடப் புறம் சாய்ந்துள்ளது. காதுகளில் குண்டலம்; கழுத்தில் பலவித ஆரங்கள்; இடுப்பில் குறுவாளுடன் கூடிய அணிகள்; தொங் கும் குஞ்சங்களுடன் பாதம் வரையுள்ள ஆடை இரண்டு சிலை களிலும் உள்ளன. மண்டபத்தின் மையமான பாகத்தில் ஒரு நீண்ட சதுர ஒற்றைக்கல் பலகை போடப்பட்டுள்ளது. இதன் நான்கு புறங்களில் வேலைப்பாடற்ற நான்கு சிறிய தூண்கள் பிளந்த நுனிப்பகுதியுடன் நிறுத்தப்பட்டுள்ளன. சதுரக்கல் பலகையில் நடுவில் ஒரு விரிந்த தாமரையும் செதுக் கப்பட்டுள்ளது.

### நந்தி மண்டபம்

கருவறைக்கு நேர் எதிரே, அனுப்பு மண்டபத்திற்கும் பின் னால் சுமார் அரை பர்லாங் தொலைவில் ஒரு சிறிய மண்டபம் கட்டப்பட்டு அதில் ஒரு பெரியகல்நந்தி வைக்கப்பட்டுள்ளது. இதுவே நந்தி மண்டபம் எனப்படுவது.

மண்டபத்தின் அடிப்பகுதி அதிட்டான வர்க்கங்களுடனும் கபோதக்கூடுகளில் மனித உருவங்கள், குழலூதும் கண்ணன், சங்கம் ஊதுவோன், நாட்டிய மாந்தர் முதலிய சிற்பங்களுட னும் உள்ளது. நடுவில் ஒரு அரை அடி உயரப் பலகையின் மேல் நந்தி வைக்கப்பட்டுள்ளது. நந்தியின் உயரம் ஐந்து அடி இருக்கும்.

### கல்வெட்டுகள்

குடுமிநாதர் கோயிலில் மட்டும் மொத்தம் 48கல்வெட்டுகள் உள்ளன. அவை சோழர்காலக் கல்வெட்டுகள்-15, பாண்டியர் காலக் கல்வெட்டுகள்-20, வாணர் கல்வெட்டு-1, பிற்காலப் பல்லவர் கல்வெட்டு-1, நாயக்கர் காலக்கல்வெட்டுகள்-3, அரசன் பெயரில்லாக் கல்வெட்டுகள் 8, ஆக -48 ஆகும். இவற் றில் பாடல்களாக உள்ள கல்வெட்டுகள் ஆறு ஆகும்.

முக்கியமான கல்வெட்டுகளின் செய்திகளைக் கல்வெட்டுச் செய்திகள் என்னும் தனித் தலைப்பில் ஆராயும் எண்ணத்துடன்

இங்கு அவற்றைக் குறிப்பிடவில்லை. நிலக்கொடைகள், விளக்கு கள், பொன் கொடைகள் போன்ற கல்வெட்டுகள் மட்டும் கீழே தரப்படுகின்றன.

## நிலக்கொடைகள்

பரகேசரிவர்மனின் 33-ஆவது ஆட்சியாண்டில் இக் கோயில் திருவமிர்துக்காகப் பராந்தகன் குஞ்சரமல்லன் என்ற வீரசோழ இளங்கோவேளான் கீழ்மணநல்லூரில் ஒரு வேலி நிலம் கொடுத்தான்.

இரண்டாம் இராஜராஜன் தன் பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் பூசைகளுக்கெனப் புதுவூர் என்ற கிராமத்தைத் தேவ தானமாக வழங்கினான் என்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. (பு. கோ. க. 182) மூன்றாம் குலோத்துங்கனின் பதினெட்டாம் ஆட்சியாண்டில் அம்மன் கோயில் அமுதுபடிக்கெனச் சகர அரை யன் தன்னன் எதிரிலாப் பெருமாளான குலோத்துங்க சோழ கடம்பராயன் இரண்டு மாநிலம் கொடுத்துள்ளான்.(பு.கோ.151) இதே அரசன் தன் முப்பத்து நான்காம் ஆட்சியாண்டில் ஒரு நேர் முக ஆணையின் மூலம் கோயில் நிலங்களுக்கு இறையில்லா மல் செய்தான். (பு.கோ.க.163)

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இக் கோயில் இறைவனுக்குத் திருத்தோப்பு செய்யும் எண்ணத்தில் தென்கோனாட்டுக் கரையூர் தேவன் கிழவனான சோழ திவாகர மூவேந்தவேளார் என்பவர், இக்கோயிலிலேயே இரண்டுமா நிலத்தை 1260 காசுக்கு வாங்கித் திரும்பவும் கோயிலுக்கே நிலத்தைக் கொடையளித்துத் திருத்தோப்புச் செய்வித்தார். (பு. கோ. க. 266) வீரப்பிரதாப சதாசிவராயன் காலத்தில் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த ஒருவன் இக்கோயிலுக்கு நிலம் கொடுத்துள்ளான். (பு. கோ. க. 756)

## ஆடு, காசுகள் கொடை

குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் பதினான்காவது ஆட்சியாண்டில் அண்ணவாயில் கூற்றத்துத் திருவேளான் சாத் தன் என்பவன் மூன்று சந்திவிளக்கு எரிக்க 42 ஆடுகள் கொடை யளித்துள்ளான். (பு. கோ. க. 215) குலோத்துங்க சோழனின்(?)

முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டில் இந்நாட்டு மூன்றுபடைப் பொற்கோயில் கைக்கோளர்கள் பல பூசனைகளுக்கும், திருவிழாக் காலச் செலவுகளுக்கும், 25 காசுகள் கொடையளித்தனர். (பு. கோ. க. 248.) இக்கல்வெட்டு மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் நடந்த திருப்பணியில் திரும்ப வெட்டப்பட்டது. இம்மூன்று படைப் பொற்கோயில் கைக்கோளர்கள் என்பவர்கள் உள்நாட்டுப் பாதுகாப்புக் கடமை கொண்ட, அரசிடமிருந்து நிரந்தர ஊதியம் பெறும் படையைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.[6]

6. The cholas - Neelakanta Sastri. P. 457.

# அகிலாண்டேஸ்வரி அம்மன் ஆலயம்

**காலம்**

குடுமிநாதர் சன்னதிக்கு இடதுபுறமாக வடக்குத் திருச்சுற்றை ஒட்டி அமைந்துள்ளது அம்மனின் இக்கோயில். இன்னார் கட்டியது என்பதற்கு நேரடியான கல்வெட்டுச்சான்றுகள் இல்லை. ஆனால் குடுமிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்றின் வடக்குச் சுவரிலுள்ள கல்வெட்டு அம்மன் பெரிய நாச்சியார்க்குத் திருவமுதுக்காக நிலம் கொடையளிக்கப்பட்டதைக் கூறுகிறது. இக்கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனின் 18ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது.(பு.கோ.க.151)எனவே இக்கோயில் அவன் காலத்திலேயே இருந்திருக்க வேண்டும். அவன் காலத்திலாவது அல்லது அவனுக்கு முன்பாவது கட்டப்பட்டிருக்கவேண்டும். இக்கோயில் சுவரில் உள்ள கல்வெட்டுகள் யாவும் பிற்காலப் பாண்டியர்களாலும், அவர்களுக்குப் பின் வந்தவர்களாலும் வெட்டப்பட்டவை. இக்கோயிலின் கட்டிட அமைதி கொண்டும் இக்கோயில் ஏறக்குறைய கி.பி. 13-ஆம்நூற்றாண்டு எனக் கணக்கிடலாம். தூண் அமைப்பும், கும்பபஞ்சர அமைப்பும் கோபுரவாசலில் கண்டது போலவேயுள்ளன. கருவறையில் பத்மபீடத்தில் நிற்கும் அம்மையின் எழில் வாய்ந்த உருவமும் 13 ஆம் நூற்றாண்டின் கலைப்படைப்பாகவேயுள்ளது. பதின் மூன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மேலைக்கோயில் சவுந்திர நாயகி அம்மனின் உருவமும், இவ்வம்மனின் உருவமும் ஒரே அச்சில் வார்த்த வடிவங்களைப்போல உள்ளன. இவ்வம்மனின் பெயர் அகிலாண்டேஸ்வரி என்பது 19-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது. (பு. கோ. க. 890)

எழில் வாய்ந்த இவ்வம்மன் தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகர குண்டலம், வாகுமாலை, கேயூரம், முன் கையில் வளைகள் முதலியவை அணிந்துள்ளாள். கழுத்தில் திருமாங்கல்யம், மணிமாலை, கடி சூத்திரம், பாதம் வரை ஆடை. பாதங்களில் சிலம்புகள் அணி செய்கின்றன. அம்மன் நான்கு கைகள் கொண்டு, பின் வலக்கையில் நீலோத்பலமும், பின் இடக்கையில் பத்மமும் கொண்டுள்ளாள். முன் இரு கைகளும் அபய வரத முத்திரை காட்டுகின்றன.

கருவறையை அடுத்து அந்தராளம் உள்ளது. அதனை அடுத்த அர்த்த மண்டபத்தின் நீளம் 16 அடி. அகலம் 9 அடி. இம்மண்டபத்தில் கருவறையின் வாயிலுக்கு முன் செப்புச் சர விளக்குகள் தனித்தனியாகக் கழற்றும் விதத்தில் தமிழ் எண்கள் போடப்பட்டுள்ளன. இவ்விளக்குகளை இரண்டு புறமும் அன்னங்கள் தாங்குகின்றன.

இதனை அடுத்த மகாமண்டபம் கிழக்குமேற்காக $21\frac{1}{2}$ அடி நீளமும் தென் வடலாக $18\frac{1}{2}$ அடி அகலமும் கொண்டது. இம்மண்டபத்தில் அம்மனை நோக்கியவாறு ஒரு பாண்டியர் கால நந்தி வைக்கப்பட்டுள்ளது. மண்டப வாயிலின் நிலைகளில் பத்மவரி வெட்டப்பட்டுள்ளன. மண்டப வெளிச்சுவரில் இருபுறங்களிலும் பிற்காலத்தார் சுதையால் துவாரபாலகிகள் செய்துள்ளனர். இங்குள்ள திருவாசி விளக்கு 150 ஆண்டுகட்கு முன்னர் செய்யப்பட்டதாக இருக்கலாம்.

இதனை அடுத்த வெளி மண்டபத்தின் கிழக்கிலும், தென் பக்கத்திலும் படிகள் கட்டப்பட்டுள்ளன. மண்டபத்தை நான்கு பாண்டியர் காலத் தூண்கள் தாங்குகின்றன. சாதாரண தூண்களை நிறுத்தி குறுக்காக ஒரு மரச் சட்டம் போட்டு விதானத்தைத் தாங்கச் செய்துள்ளனர். மண்டபத்தின் கிழக்குப் புறம் உள்ள படிகளின் பக்கத்தில் யாளிகளின் துதிக்கை செதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு வரைதான் பாண்டியர் கலைப் பாணியாகும். இதனையடுத்து இணைந்துள்ள பன்னிருகால் மண்டபமும், ஆறுகால் பீடமும் பல்லவராயர்களால் கட்டப்பட்டவை.

## விமானம்

அம்மன் கோயில் விமானத்தின் உயரமான உபபீடத்தை அடுத்து பத்மவரி, ஜகதி, கண்டம், கபோதம், அதில் கீர்த்திமுகக் கூடுகள், யாளிவரி, கண்டம், ஆகிய அதிட்டானப் பகுதி பத்மவரியுடன் கூடிய வேதிகை முதலியவை உள்ளன.

சுவர்களில் பாண்டியர் பாணித் தூண்களும் தேவகோட்டங்களும் உள்ளன. தேவ கோட்டத்தின் கீழ்ப்பகுதி அதிட்டானம் சற்று மாறுபட்ட அமைப்பு கொண்டுள்ளது. கோட்டத்தின்

மேல் அடுக்கடுக்கான இரண்டு சாலைகளும், அதில் பூ வேலைப் பாடுகளும் உள்ளன. சுவர்களில் கும்ப பஞ்சரமும், மகர தோரணமும் இடம் பெற்றுள்ளன. கோட்டங்கள் தெய்வம் ஏதும் இன்றி வெறுமையாக உள்ளன.

## பிரஸ்தரம்

உயரமான பத்மவரி, பட்டையான பெரிய சற்று வளைந்த கொடுங்கை, அதில் மனித முகத்துடன் கூடிய கூடுகள் ஆகியவை உள்ளன.

பிரஸ்தரத்துக்கு மேலுள்ள பகுதி முற்றிலும் செங்கல்லால் ஆனது. இரண்டு தளங்களைக் கொண்டது. வேசர சிகரமுடையது. இரண்டு நிலைகளிலும் பலவித சுதைச் சிற்பங்கள் உள்ளன.

கிழக்குப் பகுதியில் சாமரப் பெண்களுடன் தேவி நின்ற நிலையிலும், தெற்கில் அமர்ந்த நிலையிலும் காட்டப்பட்டுள்ளாள். மேற்குப் பகுதியில் சாமரப் பெண்களுடன் சங்கு சக்கரம் தாங்கியும், வடபுறம் நான்கு முகங்களுடன் பிராமியாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளாள். சிவன் கோயில் விமானத்தில் முறையே சிவன், தக்ஷிணாமூர்த்தி, திருமால், பிரம்மா காட்டப் படும் ஆகம நிலையை நினைவுறுத்துகிறது. இவை தவிர சாலை, கூட அமைப்புகளும், நந்திகளும், முனிவர்கள், விநாயகர் உருவங் களும், துவார பாலகிகளும் விமானத்தில் சுதையால் சித்தரிக்கப் பட்டுள்ளனர்.

## பல்லவராயன் மண்டபமும் ஆறுகால் பீடமும்

அம்மன் கோயில் முன்மண்டபத்தை ஒட்டிப் பன்னிருகால் மண்டபம் ஒன்று கிழக்காகச் செல்கிறது. இம்மண்டபத்தின் கீழ்க்கோடியில் அறுகோணக்கல்லாலான ஆறுகால் பீடம் ஒன்று உள்ளது. இப்பீடத்தில் உள்ள ஒரு கல்வெட்டைக் கொண்டு இம்மண்டபம் பல்லவராயரால் கட்டப்பட்டது எனத் துணியலாம். அக்கல்வெட்டு,

1. ஆறுகால் பீடமும், இதன் மேற்கு
2. பன்னிருகால் மண்டபமும் ... இத(ன்)

3. கிழக்கு இருபத்து நாலுகால்ச் சொ(க்கட்)
4. டான் மண்டபமும் சொலைத்...கள்
5. அதிலி பல்லவராயமண...த
6. தின தன்மம் வ

என்று உள்ளது. இக்கல்வெட்டு வெளியிடப்படாதது. நேரடியாகப் படித்து அறியப்பட்டது.

எனவே இப்பகுதி 17-ஆம் நூற்றாண்டில் பல்லவராயர்களால் கட்டப்பட்டது என்று துணியலாம். பன்னிருகால் மண்டபத்தில் உள்ள 12 தூண்களும் வரிசைக்கு மூன்று வீதம் நான்கு வரிசையில் இடம்பெறும் மிகச் சாதாரணத் தூண்களே. இம்மண்டபம் 39அடி நீளமும் 37அடி அகலமும் கொண்டது.

பன்னிருகால் மண்டபத்தை யொட்டியே ஆறுகால்பீடம் அமைந்துள்ளது. இதன் தளம் ஒரே அறுகோணக் கல்லால் ஆனது. இப்பீடத்தில் தெற்கிலும் வடக்கிலும் உள்ள இரண்டு தூண்களிலும் 5அடி உயரமுள்ள இரண்டு பெண்டிர் சிற்பங்கள் உள்ளன. இப்பீடத்தின்மீது அமர்ந்துதான் பல்லவராயர்களும், தொண்டைமான்களும் பட்டம் கட்டிக் கொண்டார்கள்.[1] பல்லவராயர்களைப் பின்பற்றியே விஜயரகுநாதராயத் தொண்டைமானும் இங்கு முடிசூட்டிக் கொண்டார்.[2] இவ்வறுகால் பீடத்தின் கிழக்காகப் படிகள் கீழிறங்குகின்றன. இப்படிகளின் இரண்டுபுறமும் யாளிமுகங்கள் உள்ளன.

## சொக்கட்டான் மண்டபம்

அறுகால் பீடத்திற்குக் கிழக்காக வாயில்வரை உள்ளது தான் ஷெ பீடக் கல்வெட்டில் குறிக்கப்பெறும் இருபத்துநாலுகால் சொக்கட்டான் மண்டபம். இதில் தற்பொழுது தூண்களை உள்ளடக்கி ஒரு சுவர் எழுப்பி, அதைத் தெற்காகக் கொண்டு சென்று இறைவன் கோயில் இரண்டாம் திருச்சுற்றுடன் இணைத்துள்ளார்கள்.

## பள்ளியறை

பள்ளியறை இம்மண்டபத்தினும் காலத்தால் முற்பட்டது. பாண்டியர்களால் கட்டப்பட்டிருக்கவேண்டும். தெற்கு

1. A Manual of the Pudukkottai State. P. 1045.
2. A General History of the Pudukkottai State P. 160.

நோக்கிய வாயில். இதன் எதிரே இறைவன் சன்னதிக்குச் செல்லும் வாயிலும் உள்ளது. பள்ளியறையும் அதிட்டானம், சுவர், அதில் கோட்டம், பிரஸ்தரம் முதலிய முறையான கட்டிட அமைப்புடன் அமைந்தது. பள்ளியறை விதானம் சாய்சதுரப் பள்ளமாகப் பாண்டியர் பாணியில் உள்ளது.

**ராசிமண்டலம்**

பள்ளியறையின் எதிரில் மண்டப விதானத்தில் 8x8 ஆக 64 கட்டங்கள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றில் நடுவில் உள்ள நான்கு கட்டங்களில் மூன்றடுக்குத் தாமரை விரிந்துள்ளது. முதல்வரிசை வெளிக் கட்டங்கள் 28 இல் பூ வேலைப்பாடுகள் உள்ளன. நடுவில் உள்ள பன்னிரண்டு கட்டங்களில் பன்னிரண்டு ராசிகளும், பக்கத்திற்கு ஒரு விநாயகரும் உள்ளனர். பிற கட்டங்களில் பெண்டிர் உருவம் உள்ளன.

**பைரவர் சன்னதி**

பள்ளியறைக்குக் கிழக்காக 26' தூரத்தில் பைரவர் சன்னதியும், அதனோடு ஒட்டிய அம்மன் சன்னதியும் உள்ளன. அம்மன்சிலை எழில் வாய்ந்தாக உள்ளது. 11, 12 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். கரண்ட மகுடம் அழகோடு காட்சி தருகிறது. நான்கு கைகள். பின்னிரு கைகள் மலர்கள் ஏந்த, முன்னிருகைகள் அபயம், வரதமாக உள்ளன.

பைரவர் சுவாலை மகுடம் புனைந்துள்ளார். தலையிலும் இடுப்பிலும் நாகம் சுற்றியுள்ளது. தொங்கும் காதுகள்; ஆடை இல்லா மேனி; எட்டுக் கைகள். இச்சிற்பம் 10, 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அருகில் பின்னால் நாய் நிற்கிறது. இறைவன் வலக்கைளில் முறையே மேலிருந்து உடுக்கை, கத்தி, அம்பு, திரிசூலம் கொண்டும், இடக்கைளில் நாகம், பாசம் வில், கபாலம் கொண்டும் காட்சியளிக்கிறார்.

**மண்டபம் கட்டியவர்**

மண்டப வாயிலில், அதாவது அகிலாண்டேஸ்வரி அம்மன் சன்னதி முன் நுழைவாயிலின் நிலைப்படியில் ஒரு கல்வெட்டு உள்ளது. இதுவரை இது வெளியிடப்படவில்லை.

1. "உ ரவுத்திரி ஸ்ரீ மார்களி மீ' ௨௰ ...ஸ்ரீ
2. ராமசுவாமி அய்யன் அவற்கள் காறுபா
3. றில் பிச்சய்யன் மனியத்தில் ஆயி
4. ரவன் சன்னதி முன்மண்டபம் கட்டி
5. முடிஞ்சத்து உ..

## அஞ்சினான் புகலிடம்

அகிலாண்டேஸ்வரி கோயில் முன்வாயில் நடைப்பாதை பல நீளமான பலகைக் கற்களைத் தெற்கு வடக்காகப் போட்டு அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஒருகல்லில் சதுரமாகக் கட்டம் போடப்பட்டு கீழே நடுவில் ஒரு கும்பமும், இரண்டுபுறமும் இரண்டு விளக்குகளும் செதுக்கப்பட்டுள்ளன. கும்பத்தின் மேல் மூன்று வரிசைகளில் சுமார் 13-ஆம் நூற்றாண்டு எழுத்துக் களில்,

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருநலக்குன்றம்
2. இராகுத்தராயன் ஆஸ்ரயம்
3. அஞ்சினான் புகலிடம்

என்று எழுதப்பட்டுள்ளது. இக்கல் வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கவேண்டும்.

"அஞ்சினான் புகலிடம் என்பது அடைக்கலத் தானத்தைக் குறிக்கும். சமணர் அகாரதானம், ஔடததானம், சாஸ்திரதானம் அடைக்கல தானம் என்னும் நான்குவகைத் தானங்களைச் சிறப் பாகக் கொள்வர். இத்தானங்களைப் பற்றிச் சமணநூல்கள் விரிவாகக் கூறும். அடைக்கலத் தானத்தைத்தான் அஞ்சினான் புகலிடம் என்று சாசனம் கூறுகிறது. இதற்கு இவ்விடத்திற்கு வந்து அடைக்கலம் புகுந்தவரை ஆதரிக்கவேண்டும் என்று பொருள்.[3]

3. சமணமும் தமிழும், மயிலை, சீனி. வேங்கடசாமி. பக். 122.

# முருகன் கோயில்

மலையின் உச்சியில் உள்ள கோயில் முருகன் கோயில் என்றும், தண்டாயுதபாணி கோயில் என்றும் பெயர் பெறுகிறது. மலையின் தென்மேற்குப் புறமாக உள்ள சரிவான பாதையில் இக்கோயிலுக்குச் செல்லவேண்டும். இக்கோயில் ஒரு சிறு கருவறை, அர்த்தமண்டபம், சிறு வெளிமண்டபமும், கொண்டு விளங்குகிறது. இதன் அருகில் தென்மேற்கில் ஒரு விநாயகர் கோயிலும், தெற்கில் ஒரு மடைப்பள்ளியும், வடக்கில் வீரபத்திரர் கோயிலும் இருக்கின்றன.

**முருகன் கோயில்**

கருவறை மிகவும் சிறியது. ஆண்டிக்கோலத்தில் வலது கையில் தடியும், இடது கையைத் தொடையின்மேல் வைத்துக் கொண்டும் நிற்கும் முருகன் சிற்பம் 18,19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அர்த்தமண்டபத் தென்சுவரில் 'எம்மண்டலமும் கொண்டருளிய' குலசேகரனுடைய ஆறாம் ஆண்டுக் கல்வெட்டுள்ளது. எனவே இக்கோயிலைப் பிற்காலப் பாண்டியருடையதாகக் கருதலாம். கட்டிட அமைப்பும் ஏற்புடையதாக உள்ளது. விமானம் திராவிட அமைப்பில் சுதையில் அமைந்தது. சுவர்ப் பகுதிகளை அரைத் தூண்களும், தெய்வங்கள் இல்லாத கோட்டங்களும், அணி செய்கின்றன.

அர்த்த மண்டபத்தை அடுத்து ஒரு வெளிமண்டபம் இருக்கிறது. முன்பு இதன் மூன்று புறமும் திறந்தவெளியாக இருந்துள்ளது. சமீபத்தில் அவற்றில் தென், வட பகுதிகளில் செங்கல்லால் சுவர் எடுத்துவிட்டார்கள்.

மண்டபத் தூண்கள் இரண்டில் இரண்டு அரசகுல உருவங்கள் வணங்கும் நிலையில் செதுக்கப்பட்டுள்ளன. தெற்கிலுள்ள ஒரு தூணிலும் இத்தகு சிற்பம் ஒன்று சிறிய அளவில் உள்ளது. தூண்களில் யாளி, மனிதத்தலை, லிங்கத்தை வணங்கும் நாகம்.

கொடிப்பெண், பூ வேலைப்பாடுகள் முதலியன செதுக்கப்பட்டுள்ளன. தளங்கள் அமைக்கப் போடப்பட்ட கற்களில் கல்வெட்டுத் துண்டுகள் உள்ளன. குடுமிநாதர் கோயில் கற்களைக் கொண்டு பல்லவராயர் காலத்தில் இம்மண்டபம் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

## பெருங்காயப் பிள்ளையார்

முருகன் கோயிலிலிருந்து இறங்கி வரும்போது படிகளுக்கு எதிரில் உள்ள ஒரு சிறிய குன்றில் விநாயகர் உருவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. முக்கோண வடிவப் பிறை ஒன்று வெட்டப்பட்டு அதற்கு உள்ளாக ஒரு விநாயகர் உருவம் அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. மக்கள் இதைப் பெருங்காயப் பிள்ளையார் என்று அழைக்கின்றனர். நான்கு கைகள், மேலிரண்டு கைகளில் மழு பாசம் கொண்டும், கீழிரண்டு கைகளில் உடைந்த கொம்பும், மோதகமும் கொண்டும் அமர்ந்துள்ளார்.

# கலைச்செல்வங்கள்

குடுமியான்மலையில் 30 செப்புத் திருமேனிகள் உள்ளன. இவை யாவும் கனமாகச் செய்யப்பட்டவை. பல்வேறு காலத்தைச் சேர்ந்தவை. கொடுத்தவர்கள் இன்னாரென்று அறிய இயலவில்லை.

**உமாசகித சந்திரசேகரர்**

ஒரே பீடத்தின்மேல் தனித்தனி பத்ம பீடங்களில் நின்ற நிலையில் அம்மையும், அப்பனும் உள்ளனர். இறைவன் நீண்ட ஜடா மகுடத்துடன் வலது காதில் மகர குண்டலம், இடது காதில் பத்ர குண்டலம் பெற்று நான்கு கைகளில், பின் வலக்கையில் மழு, பின் இடக்கையில் மான் கொண்டும் முன் வலது கையில் அபயமுத்திரை காட்டியும், முன் இடது கையால் அழைத்து வழங்கும் (ஆகூயம்) முத்திரை காட்டியும் நிற்கின்றார். அருகில் நிற்கும் அன்னை கரண்ட மகுடத்துடன் இரண்டு காதுகளிலும் மகர குண்டலம் பெற்றுள்ளார். இரண்டு கரங்கள் கொண்டு, வலக்கரம் கடக முத்திரையுடனும், இடக்கரம் தொங்கும் கரமாகவும் (டோல ஹஸ்தம்) காட்சியளிக்கிறார். இவை கி. பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

**சோமாஸ்கந்தர்**

ஒரு நீண்ட சதுரச் செப்புப் பீடத்தில் அமைந்துள்ள இவ்வுருவம் சுமார் 4 அடி உயரம் கொண்டது. இத்திருமேனிக்கு மேலாக செம்பாலான திருவாசி ஒன்று அமைந்துள்ளது. அன்னங்கள் தாங்கும் வகையில் திருவாசி அமைந்துள்ளது. அன்னங்களின் கீழாகக் குதிரைகளும் உள்ளன. திருவாசியில் பிரபைகள் இடம் பெற்றுள்ளன.

இறைவன் பத்மபீடத்தில் இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டுச் சுகாசனத்தில் உள்ளார். தலையில் ஜடா மகுடம், வலது காதில் மகர குண்டலம், இடக்காதில்

பத்ரகுண்டலம் பெற்றுள்ளார். நான்கு கரங்கள் கொண்டு பின் வல, இடக்கரங்களில் முறையே மழு, மான் கொண்டும் முன் வலது கையால் அபய முத்திரை காட்டியும், முன் இடது கையால் சூசி முத்திரை காட்டியும் அமர்ந்துள்ளார். அன்னை பத்ம பீடத்தில் இடது காலை மடக்கி வலதுகால் தொங்கும் நிலையில் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். கரண்ட மகுடம். இரண்டு காதுகளிலும் மகர குண்டலங்கள். இரு கரங்கள். இடக்கையில் மலர் கொண்டும், வலது கையால் வரத முத்திரை காட்டியும் அமர்ந்துள்ளார். இருவருக்கும் இடையில் பத்மபீடத்தில் இடைக்கச்சை அணிந்து நின்ற கந்தன். அழகொளிரும் இச் சோமாஸ்கந்தர் உருவம் கி. பி. 10, 11-ஆம் நூற்றாண்டுக் கலைப்படைப்பு என்று நம்பலாம்.

**சந்திரசேகரர் :** இறைவன் மட்டும் தனியாக நின்றநிலை. சுமார் மூன்று அடி உயரமுள்ள திருமேனி. ஜடா மகுடம் பெற்று, வல, இடக் காதுகளில் முறையே மகர, பத்ர குண்டலங்களுடன் விளங்குகிறார். கழுத்தில் இரண்டு ஆரங்கள், புரிநூல், உதரபந்தம், கடிசூத்திரம் பெற்றுள்ளார். தோள்களில் கேயூரம் காட்சியளிக்கிறது. பத்ம பீடத்தில் நின்ற நிலையில் உள்ள இத்திருமேனி 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும்.

**அன்னை :** பத்ம பீடத்தில் சற்று சாய்வாக நின்ற நிலையில் உள்ள இரண்டு அடி உயர அன்னை உருவம் கண்ணைக் கவரும் வனப்புடையது. கரண்ட மகுடத்துடன் பாதம் வரை பீதாம்பர ஆடை, கால்களில் சிலம்பும் தண்டையும் அணிந்துள்ளாள். இரண்டு கரங்கள், வலது கையில் மலர் கொண்டும் இடதுகை தொங்கும் கரமாகவும் உள்ள இவ் வன்னையின் எழில் உருவம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் கலைப்படைப்பு எனலாம்.

**ஆடவல்லான் :** சுமார் 6' உயரமுள்ள எழில் வாய்ந்த இத்திருமேனி கி. பி. 11, 12-ஆம் நூற்றண்டைச் சேர்ந்த சோழர் காலக் கலைப்பாணி. இது கோயிலின் சபா மண்டபத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. இறைவன் உருவத்தைச் சுற்றிப் பிரபை மண்டலம் உள்ளது. வலது காலைப் பத்ம பீடத்தில்

வீழ்ந்து கிடக்கும் முயலகன் மேல் ஊன்றியும், இடது காலைத் தூக்கி வளைத்து வீசியும் ஆடுகின்ற பெருமானாகக் காட்சியளிப்பது கண்கொள்ளாக் காட்சி. நான்கு கைகள் கொண்டு, பின் வலக்கையில் உடுக்கையும், பின் இடக்கையில் அனலும் ஏந்தியுள்ளார். முன் வலக்கை அபயமுத்திரை காட்டியும், முன் இடக்கை வேழ முத்திரை காட்டியும் அமைந்துள்ளன.

**சிவகாமசுந்தரி :** சுமார் மூன்றடி உயரமுள்ள இவ்வம்மன் சிலை பத்ம பீடத்தில் நின்ற நிலையில் உள்ளது. இதுவும் கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கலைப் படைப்பே. இரண்டு கரங்கள் கொண்டு வலது கரம் கடக முத்திரையோடும், இடது கரம் தொங்கும் கரமாகவும் காட்சி தருகிறது.

**தேவி :** பத்ம பீடத்தில் நின்ற நிலையிலுள்ள சுமார் ஒன்றரையடி உயரமுள்ள உருவம் இது. வலக்கரத்தில் தாமரை முகையைப் பிடித்துக் கொண்டும், இடக்கரத்தை தொங்கவிட்டும் உள்ள இத்தேவியின் திருமேனி கி. பி. 11, 12-ம் நூற்றாண்டின் கலைப்படைப்பாக இருக்கலாம்.

**முருகன் :** சுமார் இரண்டடி உயரமுள்ள ஆறுமுகக் கடவுளான முருகன் மயில்மேல் அமர்ந்து காட்சி தருகிறார். இடது புறம் தெய்வயானையும், வலதுபுறம் வள்ளியும் தனித்தனியே நிற்கின்றனர். மயில் பத்ம பீடத்தின் மேல் நிற்கிறது. அதன் தோகை அமைப்பு மிக அற்புதமான வேலைப்பாடாக மிளிர்கிறது. அரவம் ஒன்றை அலகில் கொண்டுள்ளது. பன்னிரு கரங்களில் வலது ஆறுகரங்களில் மேலிருந்து கீழாக முறையே சக்தி, அம்பு, கத்தி, சக்கரம், பாசம், அபய முத்திரைகளைக் கொண்டும், இடது ஆறுகரங்களில் மேலிருந்து கீழாக முறையே வஜ்ரம், வில், கேடயம், சேவல் முதலியன கொண்டும் உள்ளார். ஐந்தாவது இடக்கரம் சற்று சிதைந்துள்ளது. ஆறாவது கரம் வரதமாக காட்சியளிக்கிறது. தெய்வயானை ஆறுமுகக் கடவுளுக்கு இடது புறமாகப் பத்ம பீடத்தின் மேல் நிற்கிறாள். சுமார் இரண்டடி உயரம். இடது கரத்தில் தாமரை மலரும், வலது கரம் தொங்குகரமாகவும் உள்ளன. வள்ளி தன் மணாளனின் வலது புறமாகப் பத்ம பீடத்தின் மேல் நிற்கிறாள்,

இரண்டடி உயரம்; இருகைகள்; இடக்கரத்தில் மலர் கொண்டும் வலக்கரம் தொங்கும் கரமாகவும் உள்ளன. இம்மூன்று செப்புத் திருமேனிகளும் சுமார் கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கொள்ளலாம்.

**சம்பந்தர்:** இரண்டு சம்பந்தர் திருமேனிகள் இங்கு உள்ளன. ஒன்று கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டையும், மற்றொன்று கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகக் காட்சி தருகின்றன. இரண்டும் அமைப்பிலும் இலக்கணத்திலும் அணிகளிலும் ஒன்றாக இருந்தாலும் பாணியில் மிகுதியான வேறுபாடு காணப்படுகிறது. காலத்தால் முற்பட்டது ஒன்றறையடி உயரமுள்ளது. மற்றது இரண்டடி உயரமுள்ளது. பத்மபீடத்தின் மேல் இடது காலை ஊன்றி, வலது காலைத் தூக்கி ஆடும் நிலை.

**சுந்தரமூர்த்தி :** பத்மபீடத்தில் நின்ற நிலை. இரண்டடி உயரம். கிரீட மகுடமும், பத்ர குண்டலங்களும் பெற்றுள்ளார். வலது கரம் சற்று வளைந்து சூசி முத்திரை காட்டியும், இடது கரம் சற்று மடித்து நீட்டியும் உள்ளநிலை. கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம்.

**மாணிக்கவாசகர் :** பத்ம பீடத்தில் நிற்கும் இரண்டடி உயரமுள்ள செப்புத் திருமேனி. மழித்த தலையில் சுற்றப்பட்ட அக்கமாலையுடன் காட்சியளிக்கிறார். இடது கரத்தில் ஏடு கொண்டு, வலது கரத்தால் சின்முத்திரை காட்டும் நிலை. பெருவிரலில் அக்கமாலை உள்ளது. இதுவும் கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டின் கலைப்பாணியே எனலாம்.

**சண்டிகேஸ்வரர் :** இரண்டு சண்டிகேஸ்வரர் திருமேனிகள் இங்கு உள்ளன. இக்கோயிலில் பணி செய்வோர் இவற்றில் ஒன்றைப் பரசுராமன் என்கின்றனர். இரண்டுமே பத்மபீடத்தில் நின்ற நிலையிலுள்ளவையே. ஒன்று இரண்டரையடி உயரமுள்ளது. இது சுமார் 11, 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. காதில் பத்ர குண்டலங்கள் அணிந்து, கூப்பிய கையுடனும், வலது தோளில் சார்த்தப்பட்ட மழுவுடனும் காட்சி தருகிறார். இது காலத்தால் முற்பட்டது. காலத்தால் இரண்டு நூற்றாண்டு

கள் பிற்பட்ட இரண்டடி உயரமுள்ள உருவத்தில் காதுகளில் மகர குண்டலம், கழுத்தில் மணியாரம் உள்ளன. இரண்டு கரங்கள். வலது கரத்தில் மழு ஏந்தியும் இடது கரத்தால் வரத முத்திரை காட்டியும் காட்சி தருகிறார்.

**அய்யனார் :** பத்ம பீடத்தில் அமர்ந்துள்ள நிலை. சுமார் ஒரு அடி உயரம். இடது காலை மடக்கி ஊன்றியும் வலது காலைத் தொங்கவிட்டும் அமர்ந்துள்ளார். இடது காலில் முழங்காலுக்குக் கீழாக யோகபட்டம் வளைந்து செல்கிறது. வலக் கரம் செண்டு பிடித்துள்ளது. இடக் கரத்தை இடது முழங்காலில் வைத்து நீட்டிக் கொண்டுள்ளார். இது சுமார் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

**தேவி :** சுமார் இரண்டடி உயரமுள்ள இவ்வம்மன் பத்ம பீடத்தில் நின்ற நிலையில் காட்சி தருகிறார். வலக்கரம் கடக முத்திரையோடும், இடக்கரம் தொங்கும் கரமாகவும் காட்சிதரும் இவ்வம்மன் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம்.

**அதிகாரநந்தி :** இரண்டடி உயரமுள்ள இத்திருமேனியும் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டின் பாணியே. பத்ம பீடத்தில் நின்ற நிலை. முன்னிரு கரங்கள் வணங்கும் நிலையிலும், பின் வலக்கரத்தில் மழுவும், பின் இடக்கரத்தில் மானும் கொண்டு காட்சி தருகிறார்.

**பள்ளியறைச் சொக்கர் :** பத்ம பீடத்தில் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். உருவத்தின் பின்புறம் கீர்த்திமுகத் திருவாசி உள்ளது. இதனை இரண்டு அன்னங்கள் தாங்குகின்றன. பின் வல, இடக்கரங்களில் முறையே மழு, மான் கொண்டும் முன் வலக்கரம், அபய முத்திரை காட்டியும் முன் இடக்கரம் வரதமாகவும் உள்ளன. சுவாமியின் உயரம் திருவாசியுடன் ஒண்ணேகால் அடி இருக்கும். காலம் கி. பி. 13, 14-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

**பள்ளியறை அம்மன்:** வலக் காலை மடக்கி, இடக்காலைத் தொங்கவிட்டுப் பத்மபீடத்தில் சுகாசனத்தில் அமர்ந்துள்ள அம்மன். கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டின் கலைப்படைப்பாகலாம்.

**பைரவர் :** குடுமியான் மலையிலிருந்து மேற்கே 16 கி.மீ. தொலைவில் பேயால் என்ற ஊர் உள்ளது. அங்கிருந்த இத்திருமேனி பாதுகாப்பிற்கென இக்கோயிலில் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளது.

கீர்த்திமுகத் திருவாசியுடன் மூன்றடி உயரமுள்ள செப்புத் திருமேனி. திருவாசியின் கீழ் இரண்டு அன்னங்களும் இரண்டு சிறு கிளிகளும் பக்கத்திற்கு ஒன்றாக உள்ளன. பத்ரபீடத்தில் நின்ற நிலையில் உள்ள இறைவன். சுவாலை மகுடம்; வலது காதில் சர்ப்ப குண்டலம்; இடது காதில் மகரகுண்டலம் அணிந்து, முன் வலக்கையில் திரிசூலம்; இடக்கையில் கபாலம் கொண்டுள்ளார். இறைவனின் இடது முன்கை சுட்டு விரலைப் பின்னால் உள்ள நாய் நக்குகிறது. நாயின் உடலில் உள்ள மெல்லிய மயிர்கள் கூட அழகாகக் காட்டப் பட்டுள்ளன. இது கி. பி. 13,14-ஆம் நூற்றாண்டின் கலைச்செல்வம்.

**பிட்சாடனர்:** சுமார் இரண்டரை அடி உயரமுள்ள பிச்சைபுகும் பெருமான் பத்மபீடத்தில் நின்ற நிலையில் உள்ளார். கால்களில் காப்பும், செருப்பும் அணிந்துள்ளார். நிர்வாணமான தோற்றம். நான்கு கரங்கள் கொண்டு, முன் வலதுகரம் மானுக்குத் துளிர் கொடுத்துக் கொண்டும், இடக்கரம் பிட்சைப் பாத்திரம் ஏந்தியும் உள்ளது. பின் வலக்கரம் உடுக்கை ஏந்தியும், இடது கரம் திரிசூலத்தைப் பின்புறம் வைத்துக் கொண்டும் காணப் படுகிறது. இத்திருமேனியின் காலம் கி. பி. 13,14-ஆம் நூற்றாண்டினது. குள்ள பூதம் இரண்டு கைகளையும் தலைமேல் தூக்கிப் பிட்சைப் பாத்திரத்தைத் தாங்கியவண்ணமுள்ள நிலை. பத்மபீடத்தில் நிற்கும் இவ்வுருவம் 1 அடி உயரம் கொண்டது. இவ்வுருவம் கி. பி. 13, 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

**போகசக்தி :** கருவறையின் வாயிலில் அர்த்தமண்டபத்திலேயே, லிங்கத்திற்கு ஈசானிய மூலையில் எப்போதும் வைக்கப்பட்டிருக்கும் சுமார் 2 அடி உயர அம்மன். பத்மபீடத்தில் நிற்கிறாள். வலக்கரம் கடக முத்திரையும், இடக்கரம் தொங்கும் கரமாகவும் உள்ள இவ்வம்மன் கி. பி. 13,14-ஆம் நூற்றாண்டின் கலைச்செல்வம்.

**பிடாரி :** பிடாரி கோயிலுக்குச் சொந்தமான இத் திருமேனி பாதுகாப்புக்கென இங்கு கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளது. பத்மபீடத்தில் நின்ற இரண்டரை அடி உயரச் சிலை. பின் வல, இடக்கரங்களில் முறையே உடுக்கை, பாசம் ஏந்தியும், முன் வல, இடக்கைகளில் முறையே திரிசூலம், கபாலம் கொண்டும் விளங்கும் இவ்வம்மன் கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

**விநாயகர் :** பத்மபீடத்தில் நின்ற விநாயகர். மேலே கீர்த்திமுகத் திருவாசி. சுமார் ஒன்றரை அடி உயரம். பின் வல இடக்கரங்களில் பரசு, பாசம் கொண்டும், முன் வல, இடக் கரங்களில் ஒடிந்த கொம்பும், மோதகமும் பெற்றுள்ளார். இத் திருமேனி கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

**தேவி :** கி. பி. 15, 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தேவியின் திருவுருவம் ஒன்று இரண்டடி உயரத்தில் பத்ம பீடத்தில் நிற்கிறது. வலக் கரம் கடக முத்திரையும், இடக் கரம் தொங்கும் கரமாகவும் உள்ளது.

**அங்காளம்மன் :** இவ்வூர் அங்காளம்மன் கோயிலிலிருந்து பாதுகாப்பிற்காக இங்கு கொண்டுவந்து வைக்கப் பட்டுள்ளது. ஒரு அடி உயரம் உள்ளது. சதுரமான பீடத்தில் அமர்ந்துள்ள அம்மன் வலக் காலை மடக்கி, இடக் காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ள நிலை. பின் வல, இடக் கரங்களில் முறையே உடுக்கை, பாசம் பெற்றும், முன் வல, இடக்கைகளில் முறையே திரிசூலம், கபாலம் கொண்டும் காட்சி தருகிறாள். இவ்வம்மன் 16, 17-ஆம் நூற்றாண்டின் கலைப்பாணி.

**அஸ்திர தேவர் :** திரிசூலம் இரண்டடி உயரமுள்ளது. சதுரமான பீடத்தில் உள்ளது. பீடத்தின் நான்கு புறங்களிலும் சிறுசிறு நந்திகள் இடம்பெறுகின்றன.

இவ்வகையில் சோழர் காலம் தொடங்கி நாயக்கர் காலம் வரையான பல்வேறு எழில் சிந்தும் செப்புத் திருமேனிகள் இக்கோயிலை அணிசெய்கின்றன.

# சிற்பச் செல்வங்கள்

குடுமிநாதர் கோயிலில் வசந்த மண்டபத்திலும் அனுமனடி என்று சொல்லப்படும் ஆயிரங்கால் மண்டபத்திலும் உள்ள சிற்பங்களே இத் தலைப்பின் கீழ் கூறப்படுகின்றன. வசந்த மண்டபத்தின் இருபுறங்களிலும் வரிசைக்கு 12 வீதம் 24 தூண் சிற்பங்கள் உள்ளன.

## இடப்புற வரிசைச் சிற்பங்கள்

**வல்லபை விநாயகர்:** கல்லிலேயே கவினுற அமைக்கப் பட்டுள்ள விநாயகர் சிற்பம், வலக்காலை ஊன்றி, இடக்காலைத் தூக்கி ஆடுவது போன்ற நிலையில் உள்ளார். இடது தொடை யில் தேவி அமர்ந்துள்ளாள். தேவியின் தலையும் கையும் சிதைந்துள்ளன. விநாயகரின் தலைக்குமேல் திருவாசி ஒன்று கல்லாலேயே அமைக்கப்பட்டுள்ளது. பத்துக் கைகள். வலது கைகளில் சக்கரம், கத்தி, கொம்பும் பிற உடைந்தும் உள்ளன. இடது ஐந்து கரங்களில் மேலிருந்து கீழாக முறையே மலர், நாகம், மலர், கத்தி முதலியவை வைத்துள்ளார். ஐந்தாம் கரம் உடைந்துள்ளது.

**இராவணன்:** இராவணன் பத்துத் தலைகளுடனும், இருபது கைகளுடனும் மிகக் கம்பீரமாகக் காட்சியளிக்கிறான். மிக அருமையான கலைப்படைப்பு; ஒரு கை மட்டும் உடைக் கப்பட்டுள்ளது. பத்து தலைகளிலும் கிரீட மகுடம்; காது களில் குண்டலம், முறுக்கிய மீசை. வலது கரங்களில் முறையே உருண்டையான கவண் கல், கத்தி, மழு, நாகம், பாசம், மலர், தண்டும் இடது கரங்களில் கவண்கல், மலர், கத்தி, நாகம், மழு, கேடயமும் கொண்டுள்ளான்.

**மகிடாசுரமர்த்தனி:** எருமை வடிவிலுள்ள மகிடனை வென்று அவன் மேல் வெற்றிக் களிப்போடு நின்று அருள் சுரக்கும் அன்னை, கரண்ட மகுடம், காதுகளில் பத்ர குண் டலம், கழுத்தில் மணிமாலை, மார்பில் கச்சை, அதன்மேல் அருவிபோல் இறங்கும் பதக்க மாலை அணிந்துள்ளாள்.

நான்கு கரங்களில் மூன்று சிதைந்துவிட்டன. பின்இடக் கரத்தில் கேடயம் உள்ளது.

**சங்கர நாராயணன் :** நின்ற நிலையில் உள்ள எழில்மிகு சிற்பம். சிலைக்குமேல் இருந்த திருவாசி உடைக்கப்பட்டு விட்டதால் அதன் கீர்த்திமுகம் மட்டும் எஞ்சியுள்ளது. மகுடத்தில் வலப்பாதி சிவனுக்குள்ள ஜடா மகுடமாகவும், இடப்பாதி திருமாலுக்குள்ள கிரீட மகுடமாகவும் அமைந்துள்ளது. வலக் காதில் பத்ர குண்டலமும், இடக்காதில் மகர குண்டலமும் அணிந்துள்ளார். சிவன் பகுதியில் தொடைவரை ஆடையும், திருமால் பகுதியில் பாதம் வரை ஆடையும் உள்ளன.

**மோகினி :** பிறந்த கோலத்துடன் நிற்கும் மோகினி, கல்லானாலும் காண்போரைக் கிறங்க வைத்து, கருத்திழக்கச் செய்யும் எழில் உடையது. இடக்கையால் ஆடையைப் பற்றியுள் ளாள். தொடைக்கும் கீழே குறுக்காக அவ்வாடை நழுவுகிறது. தலையிலும், காதிலும் கழுத்திலும் பலவித அணிகலன்கள், இரண்டு இரட்டைவட முத்துமாலைகள் குன்றென நிமிர்ந்த மார்பகங்களில் புரள்கின்றன. தூணின் இருபுறங்களிலும் மோனத் தவமிருந்த முனிவர்கள் தங்கள் தவங்கலைந்து மோகினியின் விழியசைவுக்காகக் கெஞ்சி நிற்கின்றனர். அவர் களும் பிறந்த மேனியராய், உணர்வு வயப்பட்டு அடங்காத் தாபத்தோடு காட்டப்பட்டுள்ளனர்.

**அகோர வீரபத்திரர் :** தலைக்குமேல் வேலைப்பாட மைந்த ஒளிவட்டம். ஜடாமகுடம், மகுடத்தில் ஒரு லிங்கமும், நாகமும் இடம் பெற்றுள்ளன. நெற்றிக்கண், முறுக்கு மீசை, காதுகளில் குண்டலம், தோள்களில் வாகுமாலை, இடுப்பில் கபாலங்கள் கோர்த்த ஓர் ஆரம்; தொடைவரை ஆடை. கால் களில் காப்பு, கழல். இடதுகால், வீழ்ந்து கிடக்கும் தக்கனின் தலைமீது உள்ளது. கால்களில் முரட்டுச் செருப்பு, கண்கள் அனல்வீச அச்சத்தைத் தரும் தோற்றம்; நான்கு கைகள், பின் வலக்கையில் அம்பும், இடக்கையில் வில்லும் உள்ளன. முன் இரண்டு கைகள் உடைந்துள்ளன.

**காளி :** தலையில் சுவாலை மகுடம். பத்ர குண்டலங்கள். கழுத்தில் மணியணி. கச்சையணிந்த மார்பில் வீழ்ந்துபுரளும்

பதக்க மாலை. நான்கு கரங்களில் முன் இடக்கரம் சிதைந்துள்ளது. பின் வல, இடக்கரங்களில் சக்கரம், சங்கும் முன் வலக்கரத்தில் சூலமும் தரித்துள்ளாள். அன்னையின் ஆற்றலுக்கு எதிர் நிற்கமாட்டாத அரக்கன் கையில் கத்தி, கேடயத்தோடு குப்புற வீழ்ந்து கிடக்கிறான்.

**திருமால் :** அண்ணல் தன் பெரிய திருவடியாம் இறக்கைகள் உடைந்த கருடனின் மீது அமர்ந்துள்ள நிலை. அண்ணலின் இடது தொடையில் தேவி கையில் மலருடன் அமர்ந்துள்ளாள். அம்மையின் இடக்கை உடைந்துள்ளது. கிரீட மகுடம்; காதுகளில் மகர குண்டலம்; கழுத்திலும் மார்பிலும், தோளிலும், பலவித அணிகலன்கள். நான்கு கரங்கள். வலது பின் கரம் சிதைவு, முன் வலக்கரம் அபய முத்திரை காட்டுகிறது. இடது முன்கரம் அன்னையின் கொண்டையிலும் பின்கரம் அன்னையின் தொடையிலும் உள்ளது.

**ரதிதேவி :** அன்னத்தின் மீது அமர்ந்துள்ள நிலை. அன்னத்தின் வேலைப்பாடு மிக உன்னதமானது. ரதியின் தலைக்கு மேல் அழகிய வட்டமான குடையுள்ளது. தலையிலும் மார்பிலும் பல மணி பதித்த ஆரங்கள். மார்பகத்தின் மீது புரளும் முத்துமாலைகள். இடையில் பலவிதமான மணி அணிகள் வலக்கரத்தில் எதையோ பிடித்துள்ள பாவனை. இடக்கையில் கரும்பு. ஆனால் கையும், கரும்பும் பெரும்பகுதி சிதைந்துள்ளன. கரும்பின் சிதைந்த பகுதி குடையின் மேல் உள்ளது.

**காங்கேயன் :** தலையில் முன்புறக் குடுமி, வணங்கும் கரங்கள், முறுக்கிய மீசை. காதுகளில் குண்டலம். மார்பில் மணி மாலை. கைகளில் வளைகள். இடையில் ஒற்றை மணி மாலை. தொடைவரை ஆடை அணிந்துள்ள இச்சிற்பம் பெயர்ப்பலகையில் காங்கேயன் என்று எழுதப்பட்டிருப்பினும் ஒரு நாயக்கமன்னன் என்பது என் கருத்து.

**யாளி:** இதுவே இடது வரிசையின் இறுதித் தூண்சிற்பம் ஆகும். கீழே யானை ஒன்று துதிக்கையை மேல் நோக்கித்

தூக்கிய வண்ணம் உள்ளது. அதன் மேல் யாளி நிற்கிறது. யாளி தன் முன்னிரு கரங்களையும் கொண்டு துதிக்கையைப் பிடித்த வண்ணம் செதுக்கப்பட்டுள்ள இச்சிற்பம் மிக நுண்மை யான வேலைப்பாடு கொண்டுள்ளது.

## வலது வரிசைச் சிற்பங்கள்

**ஆறுமுகம்:** *மயில் மீதமர்ந்த முருகன். ஆறு முகங்களும், பன்னிரண்டு கைகளும் கொண்டுள்ளான். மயிலை ஒரு சிறு பூதம் இரண்டு கைகளாலும் தலைக்கு மேல் தூக்கித் தாங்கிய நிலை. மயிலின் அலகில்பாம்பு ஒன்று சிக்கிக் கொண்டுள்ளது; மயிலின் தோகைகள் மிக அழகான முறையில் கல்லில் வடிக்கப்பட்டுள் ளன. பன்னிரண்டு கரங்களிலும் பலவித ஆயுதங்கள் உள்ளன. பன்னிரண்டாம் கரம் சற்றுச் சிதைந்துள்ளது. அவை அம்பு, சக்தி, கத்தி, அன்னம், மழு, அபய முத்திரை, வில், வஜ்ரம், சேடயம், திரிசூலம், மலர், வரதமுத்திரை ஆகியவற்றை ஏந்தி யுள்ளன.*

**நரசிம்ம அவதாரம்:** *இரணியனை வதம் செய்யும் சிற்பம். மேலே கீர்த்திமுகத் திருவாசி, கிரீட மகுடம், 18 கரங்கள், கழுத்தில் பலவித மாலைகள், புரிநூல், உதரபந்தம், கடிசூத்தி ரம், மார்பில் இரணியனின் குடல்மாலை தொங்குகிறது. இறை வனின் வலது கரங்களில் முதல் இருகரங்களில் அம்பும், குடல் மாலையும், எட்டாவது கரத்தில் இரணியனின் கால்களையும் கொண்டுள்ளார். எஞ்சிய கரங்கள் பெரும்பகுதி சிதைந்து விட்டன. இடக்கரங்களில் முதல் மூன்று கரங்களில் வில், குடல்மாலை, சங்கம், எட்டாவது கரத்தில் இரணியனின் கையையும் பற்றியுள்ளார். எஞ்சிய கரங்கள் பெரும் பகுதி சிதைந்து விட்டன.*

**கண்ணப்ப நாயனார்:** *நின்ற நிலையில் இடது காலை முன்னாகவும், வலது காலைப் பின்னாகவும் வைத்துள்ளார். கிரீட மகுடம், முறுக்கு மீசை, தொங்கும் காதுகளில் குண்ட லங்கள், தோளில் புரளும் சடைமுடி, வாருமாலை, கழுத்தி லும், மார்பிலும் பலவித ஆரங்கள். முரட்டுச் செருப்பையும், வில்லையும் வைத்துத்தான் இதைக் கண்ணப்பர் என்றனர் போலும்.*

**இராமபிரான்:** நின்ற நிலை. கிரீடமகுடம், மகர குண்டலங்கள் ஒளி சிந்துகின்றன. இரண்டு கரங்கள். மூக்கும், இடது கையும், வில்லும் உடைக்கப்பட்டுவிட்டன. பின்புறம் வலப் பக்கத்தில் அம்பறாத்தூணி கட்டப்பெற்றுள்ளது. கீழ் நோக்கி வந்த இடது கையில் அம்பு இருக்கிறது.

**மோகினி:** எதிர் வரிசையில் உள்ள அதே அழகுடன் காணப்படுகிறது. பிறந்த மேனியள். இடப்புறம் சாய்ந்த கொண்டை. பத்ர குண்டலம். வலது காலை நேராக ஊன்றி இடது காலை வளைத்து வைத்து ஒய்யாரமாக நின்ற நிலை. நழுவித் தொடைவரைச் சரிந்துள்ள ஆடையை இடக்கரத்தால் பற்றியுள்ளாள். விரல்களில் மோதிரங்கள் அணிசெய்கின்றன. மேற்கையில் நரம்புகள் தெரியும்படி செதுக்கப்பட்டுள்ளது. மோகினியின் பின்னால் காம உணர்வு மிகுதிப்பட்ட முனிவர்கள் ஏங்கி நிற்கிறார்கள். ஒரு முனிவன் அவள் பாதத்தையும், இன்னொருவன் அவள் தொடையையும் தடவி ஆறுதல் கொள்கின்றனர்.

**வீரபத்ரர்:** வீழ்ந்துபட்ட அசுரன் மேல் நிற்கும் பெருமான். அசுரனின் கைகள் கத்தி, கேடயங்களைப்பற்றியுள்ளன. எட்டுக் கரங்கள். அனைத்திலும் பெரும்பகுதி சிதைந்துவிட்டன. இடது மேற்கையில் கபாலமுள்ளது தெரிகிறது.

**ஊர்த்துவ தாண்டவர்:** சிற்பத்திற்கு மேலாகக் கீர்த்தி முகத் திருவாசி. வலது காலை முற்றிலும் மேலே தூக்கி, இடது காலை முயலகன் மீது வைத்து ஆடும் அண்ணல். ஜடா மகுடம். வலது காதில் மகரகுண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும் உள்ளன. பின் வலது கையில் உடுக்கையும், இடது கையில் அனலும் தாங்கியுள்ளார். முன் வலது கரம் அபய முத்திரை காட்டுகிறது. ஆனால் உடைந்துள்ளது. இடது கரமும் உடைந்துவிட்டது. ஊன்றியுள்ள இடது காலுக்கருகில் இருபுறமும் நான்முகனும், திருமாலும் நிற்கின்றனர். திருமால் மத்தளம் கொட்டிக் கொண்டு நிற்பது குறிப்பிடத்தக்கது.

**இலக்குவன்:** அனுமன் மேல் அமர்ந்துள்ள அண்ணலைப் பெயர்ப் பலகையில் இலக்குவன் எனக் குறித்துள்ளனர். அனுமன்

படுத்திருக்கும் சிங்கத்தின் மேல் நிற்கிறான். அவனது வலது காலும், இரண்டு கரங்களும் உடைந்துள்ளன. அவன் மேல் அமர்ந்திருக்கும் அண்ணலின் இரண்டு கால்களும், முழங்கைக்குக் கீழ் நான்கு கரங்களும் உடைந்துள்ளன.

**முசுகுந்தன் :** புராணக்கதையில் வரும் முசுகுந்தன் என்ற பெயரைத் தாங்கியுள்ள இச்சிற்பம் ஒரு நாயக்கர் தலைவனின் உருவச்சிலைதான். வணங்கும் கரங்களுடன் நிற்கிறது. இடப்பக்கம் சாய்ந்த தலை. தொங்கும் காதுகளில் குண்டலம். கைகளிலும், கால்களிலும் பலவித அணிகள். மார்பில் புரளும் பலவித ஆரங்கள். பாதம் வரை ஆடை காட்டப்பட்டுள்ளது.

**மன்மதன் :** மன்மதன் கிளியின் மீது அமர்ந்துள்ளான். கிளியின் கழுத்தில் பலவித அணிகள் அணிவிக்கப்பட்டுள்ளன. அதன் மூக்கில் கடிவாளம் போன்று முறுக்கிய சங்கிலி போடப் பட்டுள்ளது. மன்மதனின் தலைக்கு மேல் ஒரு வட்டப் பூக்குடை. கிரீட மகுடம். முறுக்கு மீசை. இடக்கரம் முழங்கைக்குக் கீழே உடைந்துள்ளது. இருகைகளிலும் ஏந்தி இருந்த மலர் அம்புகள் சிதையாமல் எஞ்சியுள்ளன.

**புரூரவன் :** புராணக் கதைப்பெயராக இருப்பினும் இதுவும் ஒரு நாயக்கர் தலைவனின் உருவச்சிலைதான். வணங்கிய கையுடன் நின்ற நிலை. முன்புறம் முடிச்சுள்ள குடுமி, முறுக்குமீசை. காதுகளில் வளையம். மார்பில் மணிமாலை. கைகளில் காப்பு. இடையில் ஒருவித மணிபதித்த ஆரம். பாதம்வரை ஆடை காட்டப்பட்டுள்ளது.

**யாளி :** எதிர்ப்புறம் உள்ளது போலவே யானையின் மேல் நிற்கின்ற யாளி உருவம் இத்தூணில் செதுக்கப்பட்டுள்ளது. யானையின் மேல்நோக்கிய துதிக்கையும் யாளியின் கீழ் நோக்கிய துதிக்கையும் ஒன்றாகப் பின்னியுள்ளன. அதன் சிலிர்த்த பிடரிமயிர் வேலைப்பாடு மிக நேர்த்தியானது.

## பொது அமைப்புகள்

முதலிலேயே பெருந்தூண்களைத் தேர்வு செய்து இத்தகு அழகிய சிற்பங்களைச் செதுக்கிப் பின் தூண்களை நிறுத்தி யுள்ளனர். தூணோடு இணைந்த சிற்பமே தவிர தனிச்

சிற்பத்தைத் தூணோடு பொருத்தவில்லை. இவ்வெழிலார்ந்த கலைச் சிற்பங்கள் நாயக்கர்காலக் கலை வரலாற்றின் சின்னங்களாகத் திகழ்கின்றன. மதுரை, தாடிக்கொம்பு, திருவில்லிப்புத்தூர், திருநெல்வேலி போன்ற ஊர்களிலுள்ள நாயக்கர் காலச்சிற்பங்களோடு ஒப்புமைபடப் பேசத்தக்கவை இவ்வெழில் மிகு சிற்பங்கள்.

## அனுமனடி மண்டபச் சிற்பங்கள்

**கூர்ம அவதாரம் :** பாதி மனித வடிவும், மீதி ஆமை வடிவும் கொண்ட சிற்பம். கிரீட மகுடம். நான்கு கரங்கள். வலது மேல்கரம் சக்கரம், இடக்கரம் சங்கு கொண்டும், முன் கரங்கள் அபயம், வரதம் முத்திரை காட்டியும் அமைகின்றன. ஆமைக்கு நான்கு சிறு கால்கள் காட்டப்பட்டுள்ளன.

**வராக அவதாரம் :** நின்ற நிலையிலுள்ள சிற்பம். கிரீட மகுடம். மத்சய குண்டலம். தோள்களில் வாகுமாலை. பாதம் வரை பீதாம்பர ஆடை. கால்களில் காப்பும், வீரக்கழலும் உண்டு; கைகளில் வளையல்கள். இச்சிற்பம் மிக நுண்ணிய வேலைப்பாடு கொண்டது.

**கல்கி அவதாரம் :** ஒரே தூணில் வடக்கு நோக்கிக் கல்கி என்ற பெயரிடப்பட்ட மனித உருவமும், கிழக்கு நோக்கி குதிரை வீரன் ஒருவன் குதிரை மீது அமர்ந்த நிலையிலும் வடிக்கப் பட்டுள்ளனர். கல்கி என்ற பெயர் பெற்ற சிற்பம் ஒரு மனித உருவச்சிலையே. இடது காலைச் சற்று முன்வைத்து, இரண்டு கரங்களை கூப்பியநிலையில் இருக்கிறார். தலையில் வட்டமான குடுமி, தொங்கும் காதுகள்; முறுக்கிவிடப்பட்ட மீசை. பாதம் வரை உள்ள ஆடை; அதன் கொசுவம் இடது தொடையில் விழுகிறது.

**குதிரைவீரன் :** குதிரைமீது வீரன் ஒருவன் இறுமாப்புடன் அமர்ந்துள்ளான். அவனது சிகை அலங்காரம் முன் நோக்கி நீண்டுள்ளது. காதுகள் இரண்டிலும் இரட்டைக் குண்டலங்கள் அணிந்துள்ளான். கூரிய நீளமான மூக்கு, முறுக்கிவிடப்பட்ட மீசை. கைகளில் வளைகள், விரிந்து, பரந்தமார்பு, கம்பீரமான தோற்றம். இடது கையில் கடிவா

ளத்தைப் பிடித்துக் கொண்டு வலது கையால் வாளை ஓங்கிய வண்ணம் காட்சி தருகிறான். குதிரை மிக இளமையான முறுக்கான தோற்றம் கொண்டது. கடிவாளம் நன்கு பூட்டப் பட்டுள்ளது. கழுத்தில் ஒரு முறுக்கிய கயிறு, இரும்புச் சங்கிலி ஆகிய இவ்வனைத்தும், மணிமாலையும் உள்ளன. கடிவாளத்தில் இரும்பு வளையங்கள் ஒன்றுக்குள் ஒன்று நுழைந்துள்ளது, கல்லில் அழகாகக் காட்டப்பட்டுள்ளன. குதிரையின் முதுகில் அமர்வதற்கென அழகிய துணி விரிக்கப்பட்டுள்ளது, நாயக்கர் கலைப்பாணியில் உள்ள இக்குதிரையின் தோற்றம் திருவரங்கம் கோயிலில் உள்ள குதிரைகளின் எழில் அமைப்பில் சற்றும் குறைத்து மதிப்பிட முடியாதது.

**பூச்சி நாயக்கர் :** நின்று வணங்கிய நிலையில் உள்ள இவ்வுருவம் நாயக்கர் காலத் தலைவன் ஆகும். பெயர் பூச்சி நாயக்கர் என எழுதப்பட்டுள்ளது. மதுரை நாயக்கர்களால்[1] கி.பி. 17ஆம் நூற்றாண்டில் மருங்காபுரி பாளையக்காரனாக பூச்சி நாயக்கன் என்பவன் நியமிக்கப்பட்டான். இச்சிற்பம் அவனுடையதாக இருக்கலாம். வட்டமான குடுமி, அதில் மாலை சுற்றப்பட்டுள்ளது. நீளமான மூக்கு, முறுக்கியமீசை, காதுக்கும் கீழாக வளைந்த கிருதா, மார்பில் ஒருமணியாரம் ஆகியன இவனை அணி செய்கின்றன.

**விபீடணன்:** இதுவரை கண்ட சிற்பங்கள் நாலடி உயரமே இருக்க, இது சுமார் ஏழடி உயரமுள்ள சிற்பம். மிக உயரமான திடமான உருவம் இது. உயரமான கிரீட மகுடம். நெற்றியில் நாமம் இடப்பட்டுள்ளது. வாகுமாலை. மார்பில் ஒரு மணி யாரமும், மற்றொரு மாலையும் உள்ளன. இரண்டு தோள்களி லும் இரண்டிரண்டு வளையல்கள், இரண்டு முன்கைகளிலும் ஒவ்வொரு வளையல்கள் உள்ளன. மார்பில் வீரச்சங்கிலி, வலது கையைத் தலைக்கு மேல் உயர்த்திச் சிறுவாளை ஓங்கிப் பிடித்த நிலை. இடது கையைத் தொடையின் மீது வைத்துள் ளான்.

1. A General History of Pudukkottai State. p. 96.

**மன்மதன்:** இத்தூணில், உள்ள சிற்பம் மன்மதன் என்று உறுதியாகக் கூறவியலாது. மன்மதன் என்று பெயர் எழுதப்பட்டுள்ளது. ஆனால் கிளியின் மீது அமர்ந்த இரு சிறிய வீரர்களின் சிற்பமே இது. கிளியின் இருபுறமும் இரண்டு வீரர்கள் அமர்ந்துள்ளனர். வலதுபுறம் அமர்ந்துள்ள வீரன், வலது கையால் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு, இடது கையை உயரத் தூக்கிய நிலையில் அமர்ந்துள்ளான். இடதுபுறம் அமர்ந்துள்ள வீரனும் இடதுகையில் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, வலதுகையால் அக்கால ஓலைச்சுருள் ஒன்றைப் பிடித்துள்ளான். முன்னவன் போன்ற அதே அணிகளுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளான். கிளியின் மீது விரிக்கப்பட்டுள்ள அழகிய துணியில் இவ் வீரர்கள் அமர்ந்துள்ளனர்.

**சுக்ரீவன்:** ஏழடி உயரமுள்ள நின்ற நிலையில் இருக்கும் சிற்பம். நீண்ட கிரீட மகுடம். உடல் நேராகவும், முகம் சற்று இடதுபுறம் திரும்பியும் உள்ளது. காதுகளில் உருண்டையான குண்டலம். தோள் முடிச்சுகளுடன் கூடிய மாலை. இம் மாலை, கழுத்தைச்சுற்றி வருகிறது. மாலையின் இரண்டு முனைகளும் பெரிதாக வாழைப்பூ வடிவத்தில் உள்ளன. ஒரு கையைத் தலைக்கு மேல் உயர்த்தியும், இடதுகையைத் தொடையிலுமாக வைத்திருக்கும் நிலை. தொடைவரையே உள்ள ஆடை. அதன் கொசுவம் முழங்காலில் விழுகிறது.

**மச்சாவதாரம்:** இச்சிற்பம் உடலின் மேல்பாதி மனித வடிவும், கீழ்பாதி மீன் வடிவும் கொண்டது. மனித வடிவத்தில் கிரீட மகுடம், கீழ்ப்பகுதியில் மீனின் செதில்கள் (Fins) காட்டப்பட்டுள்ளன. நான்கு கரங்கள். மேலிரண்டு கரங்களில் சக்கரம், சங்கு பெற்றும், கீழ் இரண்டு கரங்களில் அபய, வரத முத்திரை காட்டியும் அமைந்துள்ளன.

**நரசிம்மாவதாரம்:** முகம் மட்டும் சிம்ம வடிவும், உடல் மனித வடிவு கொண்ட இச்சிற்பம் நின்ற நிலையில் உள்ளது. கிரீட மகுடம். சிம்மம் வாயைப் பிளந்தவாறு நிற்கிறது. பாதம் வரை உள்ள பீதாம்பர ஆடை.

**குதிரைவீரன்:** மூன்றாம் தூணிலும் எதிர்ப்புறம் உள்ளது போலவே தெற்குப் பார்த்தவாறு ஒரு மனித உருவமும், கிழக்குப் பார்த்தவாறு ஒரு குதிரை வீரனும் வடிக்கப்பட்டுள்ளனர்.

**திருமலை நாயக்கர்:** பெயர்ப்பலகையில் திருமலை நாயக்கர் என்று எழுதப்பட்டிருப்பினும், திருவரங்கம் திருவில்லிபுத்தூர் கோயில்களில் உள்ள திருமலை நாயக்கரின் சிற்பத்தோடு இதை ஒப்பு நோக்கும்போது இது மாறுபட்டுக் காணப்படுகிறது. எனவே இது வேறு ஒரு நாயக்கர் தலைவன் சிற்பமாக இருக்கலாம். நின்று வணங்கிய நிலையில் உள்ளது. இடது புறம் சாய்த்து முடியப்பட்டுள்ள குடுமி. நெற்றியில் முப்பட்டை சிவச்சின்னம். கூர்மையான மூக்கு, முறுக்கி விடப்பட்ட மீசை, காதுகளில் உருண்டைக் குண்டலங்கள், மார்பில் இரட்டைவட மணிமாலை ஒன்று வட்டமான பதக்கத்துடன் தொங்குகிறது.

**அனுமன்:** மக்கள் பெரும்பாலும் சுற்றிவந்து வணங்கிச் செல்லும் சிற்பம் இதுவே. இது இம்மண்டபத்தில் இருக்கும் காரணத்தால்தான் அனுமனடி எனப் பெயர் பெறுகிறது. சுமார் ஏழு அடி உயரமுள்ள கம்பீரமான சிற்பம். இடது காலைச் சற்று முன்னும், வலது காலைப் பின்னுமாக வைத்து நின்ற நிலை. வலது கையைத் தலைக்குமேல் தூக்கி ஓங்கியவாறும் இடக்கையை இடது தொடையில் வைத்துக் கொண்டும் உள்ள நிலை. வால் பின்புறம் உயரமாகச் சென்று நுனியில் வளைந்துள்ளது. நுனியில் மணி ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவ்வனுமானின் உடல் முழுவதும் காவி பூசி வைத்துள்ளனர்.

**கிளி மீது வீரர்கள்:** எதிர்த்தூணில் உள்ள சிற்பத்தைப் போன்றே கிளி ஒன்றில் இரண்டு வீரர்கள் அமர்ந்துள்ளனர். மன்மதன் என்று பெயர்ப்பலகை தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது. கிளியின் வாயிலிருந்து புறப்படும் பூவேலைப்பாடு யானையின் தூக்கிய துதிக்கையில் படுகிறது. துதிக்கையின் மேல் கால் ஊன்றிக் கிளி நிற்கிறது. கிளியின் மேல் அமர்ந்திருக்கும் வீரர்களின் உருவம் எதிர்ப்புறம் உள்ளதைப் போன்ற வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன.

**வாலி:** சுக்ரீவனுக்கு எதிரில் உள்ளமையால் வாலி எனக் கொள்வதில் தவறில்லை. இடது காலை முன்வைத்தும் வலது காலைப் பின்னாகவும் வைத்து நின்ற நிலை. வலக்கையைத் தலைக்கு மேல் தூக்கி ஓங்கியவாறும், இடக்கையைத் தொடை

யில் வைத்தும் நிற்கிறான். தலையில் நீண்ட மகுடமும், காதுகளில் உருண்டையான குண்டலமும் உள்ளன. இருபுறமும் தொங்கும் சடைமுடி, தோளில் கழுத்தின் பின்னாகத் தொங்கும் மாலை, மார்பில் ஒரு பதக்கச் சங்கிலி; பதக்கம் இலை வடிவில் உள்ளது. தோளிலும், முன்கையிலும் கனத்த வளைகள், இடையில் மணிகள் பதித்த அணி, அதனுடன் இணைத்துக் கட்டப்பட்ட சிறுவாள். கால்களில் வீரக்கழல்; கொசுவம்; பாதம்வரைத் தொங்கும் உடை, வலது கையில் வட்டமான துளையுடைய ஆயுதம் ஏந்தியுள்ள தோற்றம். இதுவே வாலி.

## பொது அமைப்பு

பிரமாண்டமான தூண்களைத் தேர்ந்தெடுத்துச் சிற்பங்கள் செதுக்கியுள்ளனர். அனைத்தும் 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்களே. வசந்தமண்டபச் சிற்பங்களை விட இவை அழகு குறைந்தவை. அவற்றோடு ஒப்பிடும்போது வேலைப்பாடு ஏதும் இல்லாத மிகச் சாதாரணச் சிற்பங்களே இவை எனலாம்.

எனினும் இவ்விரண்டு மண்டபங்களிலும் உள்ள இச் சிற்பங்கள், நாயக்கர்களின் அரிய கலைப் படைப்புகளுள் ஒன்றென வைத்து எண்ணத்தக்கவை. பல ஊர்களிலும் உள்ள நாயக்கர் காலச் சிற்பங்களில் சில செயற்கையான உடல் வளைவுகள் இருக்கும். ஆனால் இச் சிற்பங்கள் அத்தகைய செயற்கைத்தன்மை ஏதும் இன்றி இயற்கையாக, இயல்பாக அமைந்துள்ளன. இவை குடுமியான்மலையில் கிடைத்த சிற்பச்செல்வங்கள் என்றால் அது தவறாகாது.

# கல்வெட்டுக்கள்

"புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுக்கள்" (Inscriptions of Pudukkottai State என்னும் தொகுதியில் 113 கல்வெட்டுகளைப் படியெடுத்துக் குடுமியான்மலைக் கல்வெட்டுக்களாக வெளியிட்டுள்ளனர். இக்கல்வெட்டுக்கள் மேலைக் கோயிலிலும், குடுமிநாதர் கோயிலிலும், அகிலாண்டேஸ்வரி அம்மன், சவுந்திர நாயகியம்மன் கோயில்களிலும், இன்னும் சில தம்பிக்கிணறு, செங்கழுநீர் ஓடை, பிறபாறைகள் முதலியவற்றிலும் வெட்டப்பட்டுள்ளன. அவையாவன : மேலைக்கோயில் - 40, குடுமிநாதர் கோயில் - 48 ,அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயில் - 9, சௌந்திரநாயகி அம்மன்கோயில் - 4, பாறைகளில் - 12 ஆகக் 113 கல்வெட்டுக்கள் ஆகும்.

இக்கணக்கில் சேராத இன்னும் இரண்டு கல்வெட்டுக்கள் மேலைக் கோயிலில் உள்ளன என்று S. I I. Vol. XIII இல் வெளியிட்டுள்ளனர். புதுக்கோட்டை வரலாறு என்னும் (A General History of the Pudukkottai State) புத்தகத்தில் இங்கு மொத்தம் 117 கல்வெட்டுகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. முற்காலப்பாண்டியர், சோழர், முத்தரையர், இருக்குவேளிர், பிற்காலப் பாண்டியர், வாணாதிராயர், பல்லவராயர், தொண்டைமான் போன்றவர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. இரண்டுகல்வெட்டுக்கள் (இசைக்கல்வெட்டுக்கள்) கிரந்தத்திலும், ஒன்று தெலுங்கிலும், ஏனையவை தமிழிலும் உள்ளன. தெலுங்கில் (பு. கோ. க. 890) உள்ள கல்வெட்டின் படி அப்படியே கிரந்தத்திலும் எழுதப்பட்டுள்ளது.

# இசைக் கல்வெட்டு

குடுமியான்மலை மேலைக் கோயிலுக்குத் தென்புறமாக அமைந்துள்ள ஒரு பாறையில் பல்லவ கிரந்த எழுத்துக்களாலான ஒரு பெரும் கல்வெட்டு தமிழ் இசை இலக்கணத்தையும் யாழினையும் உணர்த்தி நிற்கிறது. அதன் அமைப்பையும், காலத்தையும், பொருள் விளக்கத்தையும் அறிவதற்கு முன்னால் தமிழ் இசை பற்றியும், யாழ், வீணை போன்ற இசைக்கருவிகளின் வளர்ச்சி பற்றியும் சிறிதளவு அறிந்து கொள்வது இக்கல்வெட்டை புரிந்து கொள்ள உதவும்.

## தமிழ் இசை

இசை என்றால் மக்கள் உள்ளத்தோடு பொருந்துவது, ஒருவரை ஒன்றோடு இசைவிப்பது என்று பொருள். இசை இனிமையான ஒலிகளின் சேர்க்கையேயாகும். இது உயிர்களின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. இனிமை மிக்கது. எழில் வாய்ந்தது. தமிழன் த்ன் மொழியை இயல், இசை, நாடகம் என மூவகையாகப் பிரித்தான். தன் இசையை மெல்லிசை, சமனிசை, வலிவிசை என்ற மூவிதப் பாகுபாடுகள் உடையதாக உருவாக்கினான். அவன் தன் வாழ்வுக்கு வேண்டிய கருப்பொருள்களாகக் கொண்ட சிலவற்றுள், யாழ் என்னும் இசைக் கருவியும் இடம் பெற்றது. தொல்காப்பியம்,

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப" (பொருள். 986)

என்று கூறும்.

## யாழின் தோற்றமும்-வளர்ச்சியும்

பழங்காலத்தில் வேட்டைக் கருவியாக வில் இருந்தது. அதைப் பயன்படுத்தும் போது எழும் இனிய ஓசையை மக்கள் அறிந்து அதையே ஒரு இசைக் கருவியாக மாற்றினர். அது வில்யாழ் என்று அழைக்கப்பட்டது.[1] குறிஞ்சி நில மக்களிடம்

காணப்பட்ட இவ்யாழ், முதல் யாழாக, தாய் யாழாக அமைந்து ஐந்நிலங்களுக்கும் தனித்தனி யாழ் உருவாக வழிகாட்டியது. இதன் அடுத்த வளர்ச்சியே சீறியாழ், பேரியாழ், செங்கோட்டு யாழ், மகரயாழ், சகோடயாழ் என்பனவாகும். நரம்புகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு யாழ் பல பெயர்களைப் பெற்றது.

## சங்க காலத்தில் இசை

இசை ஆய்வு நடத்தக் கண்ணகனார், கண்ணன் நாகனார், கேசவனார், நல்லச்சுதனார், நந்நாகனார், பித்தாமத்தார், பெட்டகனார், மருத்துவன் நல்லச்சுதனார் முதலிய இசைப் புலவர்கள் இருந்தனர். சங்ககாலத்தில் இருந்த இசை நூற்களாக அடியார்க்குநல்லார் பல நூற்களைக் குறிப்பிடுவார். அவையாவும் அழிந்துபட்டுப் பெயர் மட்டுமே நம்மால் அறியக் கூடிய நிலையில் உள்ளன. அகத்தியம், இசை நுணுக்கம், இந்திரகாளீயம், குணநூல், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், தாளவகையோத்து, நூல், பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பரத சேனாபதியம், பரதம், பெருங்குருகு, பெருநாரை[2] என்னும் பல நூற்கள் அன்றைய இசை நூற்பட்டியலில் அடங்கும். இத்தகு நூல்கள் இருந்துள்ளன என்பதையும், இத்தனையையும் கற்றுத் துறைபோகிய இசைவேந்தர்களும் இருந்தனர் என்பதையும், இளங்கோவடிகளின் கூற்று மேலும் உறுதிப்படுத்துகிறது. இசையாசிரியன் பற்றிக் கூற வந்த அவர்,

"யாழும் குழலும் சிறுமிடறுந்
தாழ்குழற் றண்ணுமை யாடலொ டிவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னோசைகடைப் பிடித்துத்
தேசிகத் திருவி னோசை யெல்லா
மாசின் றுணர்ந்த வறிவின னாகிக்
கவியது குறிப்பு, மாடற் றொகுதியும்
பகுதிப் பாடலுங் கொழுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபின் இசையோன்" (சிலம்பு : அரங் 26-36)

1-2. இசையும் யாழும் - பக். 7., பக் 95-99.

பதிப்பித்துள்ளார். பல்லவ கிரந்த எழுத்துக்களாலான கல்வெட்டிது. இது அமைந்துள்ள பரப்பு 13'x14' அடி ஆகும். மிகத்தெளிவான நிலையில் இருக்கும் இக்கல்வெட்டு, மழையால் பழுதுபட்டு விடாமல் இருக்க இன்றைய மத்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர், ஒரு சிறு மண்டபத்தை மலையோடு சேர்த்துக் கட்டியுள்ளனர்.

## கல்வெட்டின் காலம்

இக் கல்வெட்டை வெட்டுவித்த மன்னன் யார் என்ற கேள்விக்கு இன்னும் முடிவான விடையைக் கண்டறிந்தவர் இல்லை. பலரும் பலவிதமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். கல்வெட்டின் எழுத்தமைதியும், அமைப்பும் கொண்டு இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர். கல்வெட்டைப் பதிப்பித்த பண்டார்க்கர் அவர்கள், "இக் கல்வெட்டுக்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு எழுத்துக்களால் ஆனது என்றும் முற்காலச் சாளுக்கியரின் எழுத்தை ஒத்துள்ளன"[8] என்றும் கூறுவர். ஆனால் டாக்டர் மீனாட்சி அவர்கள், "இது 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் கல்வெட்டே என்பார். திருச்சி மகேந்திரனின் குடைவரைக் கோயிலின் எழுத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்து இக் கல்வெட்டும் மகேந்திரன் காலத்ததுவே" என்பார் அவர்.[9] மாமண்டூர்க் கல்வெட்டையும், அதில் சுரம், வர்ணம் முதலியவற்றை வகுத்த வான்மீகி பற்றிய குறிப்பையும், மகேந்திரவர்மனால் எழுதப்பட்ட சங்கீர்ண ஜாதி பற்றிய குறிப்பையும், குடுமியான் மலைக் கல்வெட்டையும், திருச்சி குகைக்கோயில் எழுத்துக்களையும் நன்றாக ஆராய்ந்து அறிந்த அறிஞர்கள் பலர் குடுமியான்மலைக் கல்வெட்டு முதல் மகேந்திரவர்மனின் ஆணையின்படி வெட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்துக் கொண்டுள்ளனர்.[10]

திருமெய்யம், மலையடிப்பட்டி முதலிய இடங்களில் காணப்படும் இசைக் கல்வெட்டுக்களையும் ஆராய்ந்த டாக்டர் மீனாட்சி அவர்கள், அதில்

8. Epigraphia Indica vol. XII
9. Administration and Social life under the Pallavas. p. 245.
10. History of the Pallavas of Kanchi - P. 33.

"குணசேன பிரமாணஞ் செய்த
வித்யா பரிவாதினி கற்க"

என்னும் செய்தியை ஆழமாக ஆராய்கிறார். குடுமியான்மலை, திருமெய்யம் ஆகிய இடங்களில் உள்ள இக் கல்வெட்டு இரண்டுமே சிவன் கோயிலில் வெட்டப்பட்டிருப்பதாலும், அதே போன்ற மலைப்பாறையில், அதே பரிவாதினி என்ற எழுத்துக்களுடன் பொறிக்கப்பட்டுள்ளதாலும் இரண்டும் புதுக் கோட்டைக்கு மிக அண்மையில் இருப்பதாலும், இரண்டும் ஒரு காலத்தது ; ஒருவரால் ஆக்கப்பட்டது என்பார் அவர். மேலும் குணபரன், குணதரன் என்பன போன்ற பல பட்டப்பெயர் களை மகேந்திரன் கொண்டிருந்தான். எனவே "குணசேனன்" என்னும் பெயரும் அவனது பட்டப்பெயர்களில் ஒன்றாக இருக்கலாம் என்றும் அவர் வலியுறுத்துகிறார். ருத்ராச் சாரியார் என்பவர் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ருத்ரதர் என்பவராக இருக்கலாம் என்றும், அவரே மகேந் திரனின் இசையாசிரியராக இக் கல்வெட்டில் குறிக்கப்படு கிறார் என்றும் கூறி, இக் கல்வெட்டு மகேந்திரன் வெட்டு வித்ததே என்னும் கருத்துக்கு அரண் சேர்க்கிறார் டாக்டர் மீனாட்சி.[11] இன்னும் சிலர் இங்குள்ள குடைவரைக் கோயி லும் மகேந்திரன் கலைப்பணியே எனக்கொண்டு இசைக் கல்வெட்டும், அதுவும் சம காலத்தில் மகேந்திரவர்மனால் உருவாக்கப்பட்டது என்று கருத்துகொண்டுள்ளனர்.

## மகேந்திரன் அல்ல

இக்கல்வெட்டை உருவாக்கியவன் மகேந்திரன் அல்ல என்று பல அறிஞர்கள் கருத்துக் கொண்டுள்ளனர். திரு. கோபி நாதராவ் அவர்கள், திரு. ஜி.ஜே. டுப்ரேய்ல் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் "இக்கல்வெட்டு மகேந்திரனின் சமகாலத்ததாக இருந்த போதிலும், அவனால் அமைக்கப்பட்டதல்ல"[13] என்று குறிப்பிட்டுள்ளார். திருவாளர் வெங்கையா அவர்கள் "இக் கல்வெட்டு மகேந்திரனால் வெட்டப்பட்டதல்ல என்று நாம்

11. Administration and Social life under the Pallavas. p. 253.
12. Dr. Premalatha, Seminor on Inscriptions-p. 30

சந்தேகம் கொள்ளலாமே தவிர, அது பற்றி உறுதியாகக் கூற முடியாது"[14] என்று கூறுகிறார். "குடுமியான்மலை இசைக் கல்வெட்டு 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதும் உண்மை. ஆயின் குடுமியான்மலை மகேந்திரனின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்தமைக்கான எவ்வித சான்றும் அங்கு காட்டப்படவில்லை"[15] என்று கூறுகிறார் டுப்ரேய்ல் அவர்கள். பேராசிரியர் டி. வி. மகாலிங்கம் போன்றவர்கள், "குடுமியான் மலை இசைக்கல்வெட்டு 'பரம மாஹேஸ்வரன்' என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒருவனால் உருவாக்கப்பட்டது. இப்படி ஒரு பெயர் மகேந்திரனுக்கு இல்லை. ஆனால் மகேந்திரனால் கேலிக்குள்ளாக்கப்பட்ட பாசுபத காளாமுகப்பிரிவினரின் மைய இடமாகக் குடுமியான்மலை இருந்துள்ளது. பரம மாஹேஸ்வரன் என்னும் பெயர் அவர்களிடம் பரவலாக வழங்கி வந்தது. எனவே இக்கல்வெட்டுக்கும் மகேந்திரனுக்கும் தொடர்பு இல்லை" என்கிறார். ஆனாலும் இதன் ஆசிரியர் யார் என்று முடிவு செய்வது அவ்வளவு எளிமையான வேலை அல்ல என்றும் கூறிச்செல்கிறார்.[16] ருத்ராச்சாரியார் எனப்படும் காளாமுக அல்லது மாஹேஸ்வர தலைவரோ, குணசேனன் எனப்படும் சமணப் பெரியவரோ எந்த வகையிலும் மகேந்திரனோடு தொடர்புடைய ஒருவர் என்று வாதிடப்பட முடியாதவர்கள். எனவே இப்பெயர்களைக் கொண்டுள்ள இசைக் கல்வெட்டு மகேந்திரனால் உருவாக்கப்பட்டதல்ல என்பார் திரு. கே. ஆர். சீனிவாசன் அவர்கள்.[17]

## ஒரு பாண்டிய மன்னன்

மேற்கண்ட இரண்டுவித கருத்துக்களையும் அறிபவர்கள் சற்று தெளிவில்லாத நிலையையே அடைய நேரிடும். ஆயினும் வரலாற்றுப் பின்னணியையும், ஏற்றுக்கொள்ளத்தக்க சில கருத்துக்களையுங் கொண்டு இதன் காலத்தை நிர்ணயிப்

13-14. G.J. Dubreil-The Pallavas.
15. G.J. Dubriel Pallava Antiquities. p. 43.
16. Kancheepuram in early South Indian History p. 74.
17. K.R. Srinivasan, Damilica. Vol. I P. 87.

பது நலம். குடைவரைக்கோயில் பாண்டியர்களால் எட்டாம் நூற்றாண்டு வாக்கில் குடையப்பட்டது என்பது பல அறிஞர் களின் முடிவு. இங்குள்ள குடைவரைக் கோயிலில் எட்டாம் நூற்றாண்டின் பாண்டியர் கல்வெட்டுக்கள் உள்ளன. பல்லவர் என்று குறிப்பிடும் கல்வெட்டுக்கள் இல்லை.

மகேந்திரன் இசையில் விருப்பம் உடையானாகவோ, சங்கீர்ண ஜாதி போன்ற பட்டங்கள் கொண்டவனாகவோ இருக்கலாம். ஆனால் இதே காலத்தில் பாண்டியரோ, மற்ற மன்னர்களோ இசையில் மோகம் கொண்டவர்களாக இருந்திருக்கக் கூடாது என்பதில்லை. ஏனெனில் பராந்தக நெடுஞ்சடையனுங்கூட (முதலாம் வரகுணன்) வேள்விக்குடிச் செப்பேட்டில் "கீதகிந்நரன்" என்று புகழப் பெறுகிறான்.

ருத்ராச்சாரியாரின் மாணவன், குணசேனன் போன்ற பெயர்களை மகேந்திரனோடு ஒப்பிட்டுக் கூறுவது முழுமையும் ஏற்புடைத்தன்று. குணபரன், குணதரன் போன்ற பட்டங்களோடு குணசேனன் என்ற பெயரையும் அவனோடு இணைத்து முடிவு கட்டுவது பொருத்தமன்று. ஏனெனில் குணசேனன் என்ற பெயர்களில் ஈழ மன்னர்களும், சமண முனிவர்களும் கூட வாழ்ந்துள்ளனர்.

பரிவாதிநி என்னும் வீணை அவனால் கண்டுபிடிக்கப் பட்டு பயன்படுத்தப்பட்ட காரணத்தால் தான் அது கல்வெட்டு களில் இடம் பெற்றது என்பதும் பொருந்தாது. ஏனெனில் காளிதாசனின் ரகுவம்சம், புத்ததத்தரின் அமரகோஷம் ஆகியவற்றிலும் கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் எழுந்த பரதமுனியின் நாட்டிய நூலிலும் "பரிவாதிநி" இடம் பெற்றுள்ளது.[18] எனவே மகேந்திரனுக்கு முன்பாகவே பரிவாதிநி இருந்துள்ளது.

மேற்கண்ட காரணங்களைக் கொண்டு இவ்விசைக் கல்வெட்டு மகேந்திரன் காலத்தது அல்ல, அவனால் உருவாக்கப்பட்டதல்ல என்றும், பாண்டியர்களும், பல்லவ கிரந்த எழுத்துக்களைக் கையாண்டிருப்பதாலும், அவர்கள் இதே காலத்

18. இசையும் யாழும் - பக். 329. & Dr. C. Meenakshi-Ibid.

தில் இப்பகுதியில் பல கலைப்பணிகள் செய்துள்ளமையாலும், திருமெய்யம், மலையக்கோயில், திருக்கோகர்ணம் போன்ற இசைக்கல்வெட்டுள்ள கோயில்கள் அவர்களின் ஆட்சி எல்லைக் குள் அடங்கியுள்ளமையாலும், குடுமியான்மலை இசைக் கல்வெட்டும் பாண்டிய மன்னன் ஒருவனால் வெட்டுவிக்கப் பட்டிருக்க வாய்ப்புண்டு என்று கருதலாம். இதற்குக் காலமும் அதன் வளர்ச்சியோடு போட்டியிடும் ஆய்வும் விரைவில் விடையிறுக்கும் என நம்பலாம்.

## இசைக் கல்வெட்டுச்செய்தி

கல்வெட்டின் தொடக்கம் "சித்தம் நமச்சிவாய" என் னும் சிவ வணக்கத்தோடு அமைகிறது. அடுத்து 7 பிரிவுகள் உள்ளன. இவற்றின் தலைப்புகள் இடது ஓரத்தில் தனித் தனியே எழுதப்பட்டுள்ளன. அவை:

1. மத்ய க்ராமே சதுஷ் பிரஹார ஸ்வராகமா:
2. ஷட்ஜக்ராமே சதுஷ் பிரஹார ஸ்வராகமா:
3. ஷாதவே சதுஷ் பிரஹார ஸ்வராகமா:
4. ஸாதாரிதே சதுஷ் பிரஹார ஸ்வராகமா:
5. பஞ்சாம சதுஷ் பிரஹார ஸ்வராகமா:
6. கைசிக மத்யமே சதுஷ் பிரஹார ஸ்வராகமா:
7. கைசிகே சதுஷ் பிரஹார ஸ்வராகமா:

என்று பெயர் பெற்றுள்ளன. இக்கல்வெட்டைப் பதிப்பித்த பண்டார்க்கர் அவர்கள் "இவ்வேழு பகுதிகளும் அக்காலத்தில் நிலவிய ஏழு வகை ராகங்களைக் குறிக்கின்றன[19] என்பார். ஆனால் டாக்டர் மீனாட்சி அவர்கள்," இவ்வேழு பகுதிகளும் ராகங்களின் ஸ்வரங்களைக் கூறவில்லை என்றும், கிராமம் ஜாதி என்ற தென்னிந்திய இசையின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பற்றிக் கூறுகின்றன." என்றும் கூறுவார். மேலும் இந்த ஏழு பகுதிகளுள் முதல் இரண்டு பகுதிகள் ஷட்ஜ கிராமம், மத்ய கிராமம், காந்தாரகிராமம் என்று பிரசித்தி பெற்ற கிராமங்கள் மூன்றனுள் முதலிரண்டு கிராமங் களைத் தங்கள் தலைப்பிலே உணர்த்திக் கொண்டிருக்கின்றன என்பதைத் தம் கருத்துக்கு ஆதரவாக எடுத்துக் காட்டினார்.

19. Epigraphia Indica. vol. XII p. 227.

அன்றியும் ஸ்வர முடிவாகக் காணப்படும் உயிர் எழுத்துக்கள் ஸ்வர பேதத்தை உணர்த்துவதற்காகக் கையாளப் பட்டவையே என்றும் ஆராய்ந்தார். "சதுஷ் பிரஹார ஸ்வாரகமா" என்று ஒவ்வொரு பகுதியிலும் காணப்படும் தலைப்பு "நரம்புக் கருவியில் இசைப்பதற்குரிய பாடம்" என்று பொருள் கொள்ளத் தக்கது என்றார் அவர்.[20] ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் 'ஸமாப்த ஸ்வராகமா" என்ற வாக்கியத்தால் அப்பகுதி முற்றுப் பெற்றமை கூறப்படுகிறது.

## கல்வெட்டாசிரியன் யார்

"ருத்ராச்சார்ய சிஷ்யேண பரம மாஹேஸ்வரேண
ராக்ஞா சிஷ்ய ஹிதார்தம் க்ருதா ஸ்வராகமா"

என்னும் கல்வெட்டால் "ருத்ராச்சாரியனின் சிஷ்யனும் பரம மாஹேஸ்வரனுமான மன்னன் ஒருவன் மாணவர்களின் பயன் கருதி இவ்விசைக் கல்வெட்டை வடித்தான்" என அறிகிறோம். அம் மன்னன் யார் என்பதை முன்னரே விளக்கமாக ஆராய்ந்தோம். இங்கு குறிப்பிடப்படும் ருத்ராச்சாரியர் பற்றிய உண்மையைச் சற்று விரிவாகக் காணலாம்.

ருத்ராச்சாரியர் என்பவர் மகேந்திரனின் இசை ஆசான் என்று பலரும் கருத்து கொண்டுள்ளனர். "பிருகத்தேசியை" ஆக்கிய மாதங்கர் என்பவர் ருத்ரதர் என்னும் ஒருவரைக் குறிப்பிடுகிறார். மாதங்கருடைய காலம் கி. பி. 9ஆம் நூற்றாண்டு என்பர் அறிஞர். கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அபிநவ குப்தர், என்னும் இசை வல்லுநர் மாதங்கரைப் புகழ்ந்து பேசுகிறார்.[21] கி.பி. 10, 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசைமேதைகளால் பாராட்டப் பெறுபவர் மாதங்கர். எனவே இம்மாதங்கரின் காலம் 9-ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். ஆனால் இந்த "மாதங்கரால் குறிக்கப்படும் ருத்ரதரும், கல்வெட்டில் வரும் ருத்ராச்சாரியனும் ஒருவரெனக் கொள்ள முடியாது"[22] என்பார் பண்டார்க்கர் அவர்கள்.

---

20. 21. Administration and Social life under the pallavas P. 256.
22. Epigraphica Indica. vol. XII. P. 231.

## எட்டிற்கும் ஏழிற்கும்

கல்வெட்டின் இறுதியில் "எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய" என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. இதனைப் பல அறிஞர்கள் பலவித விளக்கங்கட்கு உட்படுத்தியுள்ளனர். ஏழு தந்தியுள்ள வீணையிலும், எட்டுத் தந்தியுள்ள வீணையிலும் மேற்கண்ட இசையை இசைக்கலாம் என்பது பொதுவாகப் டலர் கொண்ட கருத்து. இசைப் பேராசிரியர் இராமநாதன் அவர்கள், எட்டு என்பது யாழ் வாசிப்பில் பேசப்படும் எட்டுவிதக் கரணங்களைக் கூறுவது என்பார். சிலப்பதிகாரத்தில் கூறப் படும் பண்ணல், பரிவத்தனை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கைவுள், குறும்போக்கு என்னும் எண் கரணங் களையே இது குறிப்பிடுகிறது[23] என்பது அவரது கருத்து.

"எட்டிற்கும் ஏழிற்கும் உரிய" என்னும் சொற்றொடர்க்கு ஏழு நரம்பு அல்லது எட்டு நரம்பு கொண்ட இசைக் கருவியில் பயில்வதற்கு உரியது என்று கருத்துக் கொள்வது அவ்வளவு பொருத்தம் இல்லை. ஆனால் குறிப்பிட்ட ஒரு தாளத்திற்கு மட்டுமின்றி வேறொரு தாளத்திற்கும் ஒத்து வரும் என்பதைப் புலப்படுத்தும் சொற்றொடர் எனக் கொள்ளத்தகும்"[24] என்பார் கம்பன் அடிப்பொடி அவர்கள்.

## பாட்டிற்கும் யாழிற்கும்

திரு. கே. ஆர். சீனிவாசன் அவர்கள் திருமெய்யம், மலையக் கோவில் ஆகிய இடங்களிலுள்ள இசைக் கல்வெட்டுக்களைக் கொண்டு சற்று புதுமாதிரியான சுவையான விளக்கம் கொடுத் துள்ளார். திருமெய்யம் கல்வெட்டில், "முக்கண் இருவர்க்கும் உரித்து". என்னும் தொடர் காந்தர்வ வித்தையின் மூன்று பிரிவு களை உணர்த்தி நிற்கிறது என்பார். கண்டம், கருவி, அவிநயம் என்னும் மூன்று வகையிசையையும் அது குறிக்கும் என்பார். அதே கண்கொண்டு குடுமியான்மலைக் கல்வெட்டை நோக்கி னால் "எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய" என்பது "பாட்டிற் கும் யாழிற்கும் இவை உரிய" என்று கொண்டு ஆராய்வது சுவை பட விளங்கும்[25] என்பது அவரது கருத்து.

23. Seminar on Inscriptions. P. 35. Music from Inscription- S. Ramanathan.

24. கலைமகள் ஜூலை. 56, பக். 92.

25. Damilica. P. 88.

பரிவாதிநி என்பது அழகிய பெரிய வீணை என்றும் தந்தமும், மணிகளும் பதிக்கப்பட்டிருக்கும் என்றும், 7 அல்லது 8 பொன் தந்திகளால் ஆனது என்றும், இதற்கு வீணை, வல்லபி, விபஞ்சி என்ற பெயர்கள் உண்டு என்றும் அமரகோசம். ரகுவம்சம், புத்தசரிதம், அரிபத்து நாவலர் எழுதிய 13 ஆம் நூற்றாண்டு பரத சாஸ்திரம் முதலியவற்றால் அறியலாம்.

## தமிழ் இசையே

கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் எழுந்த பரத முனிவரின் இசை நூலுக்கும். கி. பி. 13- ஆம் நூற்றாண்டில் எழுந்த சங்கீத ரத்னாகரத்திற்கும் இடைப்பட்ட காலகட்டத்தின் இசை நிலையைத் தெளிவுபடுத்த வல்லது குடுமியான்மலை இசைக் கல்வெட்டு என்பது பல இசை வல்லுநர்களின் கருத்து. யாழ்நூல் என்னும் இசை நூல் கண்ட விபுலானந்த அடிகள், குடுமியான்மலைக் கல்வெட்டு கூறும் இசை, தமிழ் இசையே என்பார். "சார்ங்க தேவர் சொல்லுகின்ற சுத்தவுருவம், காகலியோடு கூடிய உருவம், அந்தரத்தோடு கூடிய உருவம், காகலி அந்தரத்தோடு கூடிய உருவம் எனும் நான்கினுள் காகலியோடு கூடிய உருவம் இக்கல்வெட்டில் கொள்ளப் பட்டிலதாதலின், கல்வெட்டினைப் பொறித்த ஆசிரியர் முற்றிலும் பழந்தமிழ் மரபினைக் கையாள்கிறார் என்பது தெளிவாகிறது"[26] என்று குறிப்பிடுகிறார் அவர்.

இந்த வகையில் இந்தியாவிலேயே இசைக்கு இலக்கணம் வகுத்த இக்கல்வெட்டு இன்னும் நுணுகி ஆராயத் தக்கது. இசைப் பயிற்சி ஏதும் அறியேனாதலின் பல அறிஞர்களின் கருத்தைப் படித்துத் தொகுத்தளிக்க ஓரளவு முயன்றுள்ளேன்.

26. யாழ் நூல் - பக். 339.

# அரசகுலம்

குடுமியான்மலைக் கல்வெட்டுக்களில் முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர் போன்ற பேரரசர்களும், முத்தரையர், இருக்குவேளிர், வாணாதிராயர், பல்லவராயர், தொண்டைமான் போன்ற சிற்றரசர்களும், அவர்தம் அரசியர் சிலரும், அதிகாரிகள் பலரும் குறிப்பிடப்படுகின்றனர். வரலாற்றுப் பின்னணி என்ற தலைப்பில் தரப்பட்ட செய்திகள் தவிர பிறசெய்திகள் இங்கு தரப்படுகின்றன.

**அதலையூர் நாடாள்வான்**

பல்லவர்களை வென்று கங்க அரசனோடு மண உறவு கொண்டு கொடுமுடிக்குச் சென்று வணங்கிய தேர்மாறன் எனப் படும் ராஜசிம்மன் காலத்தியதாகக் கருதக்கூடிய சடையன் மாறன் கல்வெட்டில் அதலையூர் நாடாள்வானாயின கடம்பன் எட்டி, நொந்தாவிளக்கு எரிக்க $7\frac{1}{2}$ கழஞ் சுட்டோன் கொடுத்தான் என்று கூறப்பட்டுள்ளது (பு.கோ.க.-238).

**சோழ மன்னர்கள்**

**ஆதித்தன் :** கி.பி. 871-907 வரை அரசாட்சி செலுத்திய வன். காவிரியாற்றின் இருமருங்கிலும் சிவாலயங்கள் எடுப்பித் தான். தில்லைக்குப் பொன் வேய்ந்தான். எழுத்தமைதியைக் கொண்டு இங்குள்ள இரண்டு கல்வெட்டுக்கள் இவன் காலத் தவையாகக் கருதப்படுகின்றன.

**முதலாம் பராந்தகன் :** கி.பி. 907-953 வரை ஆண்டவன். மதுரை கொண்ட பரகேசரி என்றும், மதுரையும் ஈழமும் கொண்ட பரகேசரி என்றும் அழைக்கப்பட்டவன். இவனும் தில்லைக்குப் பொன் வேய்ந்தான். இவன் பாண்டியன் ராஜ சிம்மனோடு நடத்திய வெள்ளூர்ப்போர் குறிப்பிடத்தக்கது. இவன் இங்குள்ள கல்வெட்டுக்களில் மதுரை கொண்ட கோப்பர கேசரி என்றே குறிப்பிடப்பெறுகிறான் (பு.கோ.க.-78,79,80).

**இராஜாதித்தன் :** பராந்தகனின் மகன். இளவரசனாய் இருந்தபோதே போருக்குச் சென்று, இராட்டிரகூடர்களுடன்

போரிட்டு யானைமேல் இருந்தபடியே இறந்ததால் யானைமேற் றுஞ்சிய தேவர் என அழைக்கப்பட்டான் இங்குள்ள கல்வெட்டுக் களில் இவன் கோதண்டராமன் என்றும், பராந்தகனின் மகன் (பு.கோ.க.-80) என்றும் குறிக்கப்படுகிறான்.

**இரண்டாம் இராசராசன்** கி.பி. 1146 முதல் 1163 வரை ஆட்சிசெலுத்தியவன். வேங்கிநாடு, கொங்கு நாடு, கங்க நாடு முதலியவை இவன் ஆளுகைக்குட்பட்டிருந்தன. போர்களே இல்லாது அமைதியான ஆட்சி நடத்தியுள்ளான். "மன்னுயிர் கட்குயிராக" இருந்து அரசு நடத்தியவன் என்று இவன் மெய்க் கீர்த்திகள் கூறும். இவன் கல்வெட்டுக்கள் பல இங்கு உள்ளன (பு.கோ.க.-135, 181, 182,). சில "திருமாது விளங்க" என்னும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகின்றன.

**மூன்றாம் குலோத்துங்கன்:** கி பி. 1178 முதல் 1218 வரை ஆண்டவன். இவனது பல கல்வெட்டுக்கள் இங்குள்ளன. சில "புயல் வாய்த்து மண் வளர" என்னும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகின்றன (பு.கோ.க.-166)

### பிற்காலப் பாண்டியர்

**முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் :** கி. பி 1216 முதல் கி. பி. 1238 வரை ஆண்டவன். பாண்டிய நாட்டை நன்னிலைக்குக் கொணர்ந்தவன். சோழ நாட்டை வென்றதால் சோழநாடு கொண்ட தேவன் என்றும், பின் அதைத் தோற்ற மூன்றாம் ராசராசனுக்கே திரும்பக் கொடுத்ததால் சோழநாடு வழங்கியருளியதேவன் என்றும் குறிப்பிடப்பெறுகிறான். இவன் காலத்துப் பல கல்வெட்டுக்கள் குடுமியான்மலைக் கோயிலில் இருக்கின்றன.

**2-ஆம் சடையவர்மன் வீரபாண்டியன்:** கி.பி. 1253 முதல் 1268 வரை ஆண்டுள்ளான். இங்குள்ள கல்வெட்டுக்களில் ஈழம், கொங்கு, சோழமண்டலம் ஆகிய பகுதிகளை வென்றான் என்று குறிப்பிடப்படுகிறான். இவன் காலத்தில் தான் மேலைக் கோயி லில் அருவுடை மலைமங்கை அம்மன் ஆலயம் எழுந்தது (பு.கோ.க.-366).

**முதல் மாறவர்மன் குலசேகரபாண்டியன்:** எம்மண்டலமும் கொண்டருளிய திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலசேகர பாண்டியன் என்று இங்குள்ள கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்ற முதல் மாறவர்மன் குலசேகரனது காலக் கல்வெட்டுக்கள் பல இக்கோயிலில் உள்ளன.

**சடையவர்மன் சுந்தரபாண்டியன்:** இவன் காலக் கல்வெட்டுக்களும் இங்கு சில உள்ளன. இவன் எம்மண்டலமுங் கொண்டருளிய சுந்தரபாண்டியன் எனப் பெயர் பெறுவான். சில கல்வெட்டுக்களில் சுந்தரபாண்டியதேவன் என்று மட்டுமே இருப்பதால் இது எந்த சுந்தரபாண்டியனைக் குறிக்கிறது என்று அறிய முடியவில்லை.

**விக்கிரமகேசரியின் தாய்:** பெரும்பிடுகு முத்தரையன் என்னும் ஒரு மன்னன் இங்குள்ள கல்வெட்டொன்றில் குறிக்கப் படுகின்றான். இவன் சுவரன் மாறனாக இருக்கலாம். இவன் மனைவி நங்கை என்பவள் இக்கோயிலில் நொந்தாவிளக்கு வைத்துள்ளாள். இவள் விக்கிரமகேசரியின் தாய் என்றும் எறாவக் கோமகளின் சகோதரி என்றும் இதில் குறிக்கப்பட்டுள் ளாள் (பு.கோ.க-731).

**மானதொங்கலார்:** இன்னொரு கல்வெட்டு முத்தரையர் நம்பி மானதொங்கலார்[1] என்ற ஒரு மன்னனைக் குறிப்பிடுகிறது. இவன் யாரென்று அறிய முடியவில்லை. இவன் மகள் விக்கிரமகேசரிக்காகப் பெரும்பிடுகு முத்தரையனின் மனைவி நங்கை தயாநிதியார் விளக்கு வைத்தாள். இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இது முதல் ஆதித்தன் காலம் எனக் கணக்கிட்டுள்ளனர். எனவே நம்பி மானதொங்கலார் என்னும் முத்தரையன், 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாக இருக்கலாம்.

## இருக்குவேளிர்

**செம்பியன் இருக்குவேள்:** பூதி விக்கிரமகேசரியின் மகன். முதல் பராந்தகன் காலத்தில் ஆண்ட புகழ்மிக்க சிற்றரசன். பராந்தகன் பெயர் கொண்டு பூதி பராந்தகன் என்னும் செம்பி

1. S. I. I. XIII 288.

யன் இருக்கு வேளார் என அழைக்கப்பட்டான். இவனுக்கு ஐந்து மனைவியர். முத்தரையர் மகளையும், சோழ இளவரசியையும் மணந்தான். கி. பி. 913 முதல் 927 வரை ஆண்டான். சோழ மன்னர்களோடு நல்லுறவு கொண்டு ஆற்றல் வாய்ந்த மன்ன னாக விளங்கினான்.[2] இங்கு வரகுணனாட்டி, நங்கைநந்தேவி யார் என இவனது இருதேவியர் கொடையளித்ததைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன (பு.கோ.க.-45, 52).

**மகிமாலைய இருக்குவேள் :** செம்பியன் இருக்கு வேளா ரின் மூன்று மகன்களில் ஒருவன். இவன் கி. பி. 958-965-ல் சுந்தரசோழன் காலச் சிற்றரசனாக ஆட்சி புரிந்தான். இவன் காலத்தில் குதிரை அம்மான் சந்தையன் என்பான் கொடை கொடுத்த கல்வெட்டுள்ளது (பு.கோ.க.-22).

**வீரசோழ இளங்கோ வேளான் :** செம்பியன் இருக்கு வேளாரின் மகன். சுந்தரசோழன் ஆட்சியில் முக்கிய அதிகாரி யாக இருந்தான். இவன் ஈழப்படையெடுப்பின் போது தலைமை யேற்றுச் சென்முன். அப்போது குடுமிநாதர் கோயிலுக்கு யாத் திரை தானமாக ['ஈழ மறியபோகின்றேன்'] என்று கீழ்மண நல்லூரில் நிலம் கொடுத்துள்ளான் (பு.கோ.க.-255).

**விக்ரமகேசரி :** இவன் செம்பியன் இருக்கு வேளாரின் தம்பியான செம்பியன் இளங்கோவேளானின் மகன். இவன் குடைவரைக் கோயில் இறைவனுக்கு நிவந்தங்களுக்காக நிலமும் ஊரும் கொடுத்த செய்தியைக் கூறும் கல்வெட்டுக்கள் இங்குள்ளன (பு.கோ.க-63,65).

**மதுராந்தக இளங்கோ :** இங்குள்ள அவனது கொடையைக் குறிக்கும் கல்வெட்டில் (பு.கோ.க.-191) இரண்டாம் ராஜராஜன் காலத்திய படைத்தலைவனாகக் குறிப்பிடப்படுகிறான்.

**மல்லப்ப பல்லவராயன்:** வழுந்தூர்ச் சீர்மையை ஆண்ட பல்லவராயர்களுள் மல்லப்பப் பல்லவராயன் ஒருவன். கி. பி. 1615ல் ஆண்டவன். கல்வெட்டில் அச்சுதபல்லவராயன் மகன் மல்லப்பன் எனக் குறிப்பிடப்படுகிறான். இவன் தன் காலத்தில் குடுமியான்மலை அந்தணர்களுக்கு மனைநிலம் வழங்கினான் (பு.கோ.க.-866).

2. Early chola temples. S. R. B. P. 120.

**பிள்ளைப் பல்லவராயன் :** கி.பி.1446-இல் மி(வி)ழிச்சர் பிள்ளைப் பல்லவராயன் என்பவன் குறிக்கப்படுகிறான். இவன் குளத்தூர் கோயிலுக்குத் தானம் வழங்கினான் என்று அவ்வூர் கல்வெட்டுக்கள் கூறும். இங்கு குறிப்பிடப் பெறும் பிள்ளைப் பல்லவராயரும் அவராகவே இருக்கலாம் (பு.கோ.க 903.).

**ஸ்ரீரங்கநாத பல்லவராயன் :** இவன் கல்வெட்டில் வென்று மாலையிட்ட பல்லவராயனின் மகன் எனக் குறிப்பிடப் படுகிறான் (பு.கோ.க.1090. இவன் பெருங்குளூர் பகுதியை ஆண்டவன். திருவரங்குளம் கல்வெட்டொன்று புதுக் கோட்டைக்கு அருகிலுள்ள திருக்கட்டளை என்னும் கோயி லுக்குத் தினப்படி பூசைக்குக் கொடையளித்தான் எனக்கூறும்.[4] இவன் கி. பி. 1462-ல் ஆண்டான்.

**தீராவினை தீர்த்தாரான வீரநரசிங்கராய நாயக்க பல்ல வராயன் :**

இவன் கல்வெட்டு (பு.கோ.க.626) வீரபிரதாப தேவராயர் காலத்தது. இவன் கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்தவன். இவனுக்கு அதிகாரியாகக் கவிகுஞ்சரம் மண்டலமுடையான் என்பவன் குறிக்கப்படுகிறான்.[5]

**சிவந்தெழுந்த பல்லவராயன் :** பல்லவராயர் மரபின் இறுதி அரசன். மல்லப்ப பல்லவராயனின் மகள் வயிற்றுப் பிள்ளை. இவன் தந்தையின் பெயர் பெரிய பெருமாள் என்பது. இவன்மேல் உலாவும், பிள்ளைத் தமிழும் பாடப்பட் டுள்ளன. இவன் சிறந்த சிவபக்தன். இன்று புதுக்கோட்டைக்கு அருகில் சேந்தமங்கலம் என்று வழங்கும் ஊர் பிராமணர்களுக்கு இவனால் தானமளிக்கப்பட்டது. அன்று சிவந்தெழுந்த மங் கலம் என்று மன்னன் பெயர்கொண்டு வழங்கியது. பாப்பான் வயல் என்னும் ஊர் பெருங்குளூர்க்கருகில் உள்ளது. இதைச் சிவந்தெழுந்த புரம் என்னும் பெயரில் அந்தணர்கட்கு வழங்கினான்.[6] இராமநாதபுரம் கிழவன்சேதுபதியின் மகனால் காளையார் கோயிலுக்கு அருகில் இம்மன்னன் கொல்லப் பட்டான்.

---

3. 4. A General History of the Pudukkottai State. P, 100
5. கல்வெட்டு - இதழ்; ராட்சச - ஆடி - பக். 12
6. A General History of the Pudukkottai State P. 103

## தொண்டைமான்கள்

**விஜயரகுநாதஜயா :** தொண்டைமான்கள் மரபில் கி. பி. 1789-ல் ஆட்சிக்கு வந்தவர். இவர் காலத்தில் லிங்கப்ப சேர்வைகார் மகன் ரகுநாத சேர்வைகார் என்பவன் படைத் தலைவனாக இருந்தான். இவன் செங்கழுநீர் ஓடைக்குப் படிக் கட்டினான் எனக்கல்வெட்டு கூறும் (பு.கோ.க 957).

**ரகுநாதராய தொண்டைமானார் :** முதன் முதல் தொண்டை மான் அரசராகப் பொறுப்பேற்றவர். இவருக்குப் பின்னும் பலர் இப்பெயரைக் கொண்டிருந்தனர். மேலைக் குடைவரைக் கோயிலுக்குப் படிக்கட்டு கட்டியவர் இவராகவே இருக்கக் கூடும் (பு. கோ.க 1089).

**ராமச்சந்திர மகாராஜா :** தொண்டைமான்கள் மரபில் கி. பி. 1839-ல் ஆட்சிக்கு வந்தவர். 1886 ல் மரணம் அடைந்தார். கி. பி, 1865-ல் குடுமியான் மலைக் கோயிலில் குட முழுக்கு விழா நடத்தினார்.

## அதிகாரிகள்

சில முக்கிய அதிகாரிகளும் குடுமியான் மலைக் கல்வெட்டுக் களில் குறிக்கப்படுகின்றனர்.

**மயிலை திந்தன் என்னும் அவந்திய கோவபல்ல வரையன் :** முதல் பராந்தகன் காலக்கல்வெட்டில் (பு. கோ.க. 70) ஒரு அதிகாரியாகக் குறிப்பிடப்படுகிறான். கண்டரா தித்தன் காலத்திலும் இவன் ஒரு ஆணத்தியாகக் குறிப்பிடப் படுகிறான். இக்கல்வெட்டு அல்லூர் பசுபதீஸ்வரர் கோயிலில் உள்ளது. சுந்தர சோழன் காலத்திலும் இவன் ஓர் அதிகாரி யாக இருந்தான். பலகொடைகள் அளித்துள்ளான்[7] என்று தெரிகிறது.

**அரையன் ராசேந்திரன் என்ற குலோத்துங்க சோழ கடம்பராயன் (பு. கோ.க 135) :** இரண்டாம் ராசராசன் காலத்தில் புதுக்கோட்டைப்பகுதியில் இருந்த ஓர் அரசியல் அதிகாரி இவன். இக்கடம்பராயர் மரபு பிற்காலத்தில்

7. Ealy chola Temples - P. 14

தொடர்ந்து இப்பகுதியை ஆண்ட 7 சிற்றரசர்களின்[8] மரபில் ஒன்றாய் மாறியது.

**சகர அரையன் தன்னன் எதிரிலாப் பெருமாள் என்னும் குலோத்துங்க சோழ கடம்பராயன் (பு. கோ. க. 151):**

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஒரு அதிகாரியாக இருந்தவன். இக்கோயிலுக்கு இரண்டுமா நிலம் கொடையளித்தான். கி. பி. 1163-ல் இவன் உரத்தூர் உடையார் திருப்பெருமானாண்டார் கோயிலுக்குப் பிரகாரம்,[9] மதில் முதலியவற்றையும், ஆடலரங்கையும் நிர்மாணித்தான்.

**ஆற்றூருடையான் பொன்னன் காங்கேயராயன் (பு.கோ.க.248, 255) :** முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் வாழ்ந்த, இப்பகுதியை ஆண்ட, ஒரு தலைவன். இவன் காலத்தில்தான் குடுமியான் மலைக்கோயில் பலசீர்திருத்தங்களைப் பெற்றது. முதல் திருச்சுற்றுமாளிகை, நடராசர் மண்டபம் முதலியவை கட்டினான். முதல் கோபுரவாயிலைச் செம்மைப் படுத்தினான். வசந்த மண்டபம் இவன் பெயராலேயே காங்கேயராயன் மண்டபம் என்று கல்வெட்டிலும் அழைக்கப் பட்டது.

**சங்கரன் கண்டனான கலிகடிந்த பாண்டிய தேவன் :** முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் குளத்தூர் பகுதியில் வாழ்ந்த ஒரு பெரிய நிலப்பிரபு இவன். இக்கோயிலுக்குப் பல நிலக்கொடைகள் அளித்து, நந்தவனங்கள் எடுக்க ஏற்பாடு செய்தான். பல நிலங்கள் பொது ஏலத்தில் விடப்பட்ட போது அதை வாங்கிக் கோயிலுக்குக் கொடுத்தான் இவன் (பு. கோ. க 290, 301).

---

8. A General History of the Pudukottai State. P. 61
9. கலைமகள், Feb. 56. பக். 218-219.

# சிறப்புச் செய்திகள்

இங்குள்ள பல கல்வெட்டுகள் பல சுவையான செய்திகளைக் கூறி நிற்கின்றன. நிலக்கொடைகள், நிலவிற்பனைகள், விழாக்கள், விழாக்களில் அன்னதானம், கோயிலில் திருட்டுச் செய்திகள், ஊர்ச்சபை முடிவுகள், கோயில் புதுப்பிக்கப் பட்டமை, ஏலத்தின் மூலம் நிலவிற்பனை,வரிகள், வரிஏய்ப்புகள், வரிச்சுமைகள், கோயில் பண்டாரம் வங்கியாகச் செயல்பட்ட முறை, கோயில் நிலங்களைக் குடியானவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து, வீட்டுமனைகள் இலவசமாகப் பெற்றது, போன்ற எண்ணற்ற செய்திகள் பல கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன. அவற்றை இங்கு ஓரளவு நிரல் படக் காணலாம்.

**நிலக்கொடைகள்**

ஏற்கனவே குறிக்கப்பட்டவர்கள் தவிர மேலும் பலரால், பல்வேறு உபயோகத்திற்காகப் பல்வேறு காலங்களில் நிலக் கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை இங்கு தொகுத்துத் தரப்படுகிறது. இரண்டாம் ராஜராஜனின் 16 ஆம் ஆட்சியாண் டில் சிகாநல்லூரரைச் (குடுமியான்மலை) சேர்ந்த முனையிலா தித்தன் கோதண்டன் என்பவன் இரண்டுமா நிலம் கொடை யளித்தான் (பு. கோ. க. 139). மூன்றும் குலோத்துங்கன் தன்னுடைய 34-ஆம் ஆட்சியாண்டில் ஒரு நேரடி ஆணை மூலம் எட்டுவேலி நிலம் தேவதானமாகக் கொடுத்தான் (பு. கோ.க 166). குலோத்துங்கனின் 15-ஆம் ஆட்சியாண்டில் சாந்திக் கூத்தாடும் பெரிய நாட்டாசாரியன் மகள் நாச்சிமலையாழ்வி விசலூரில் நிலம் வாங்கித் தேவதானமாகக் கொடுத்தாள் (பு. கோ. க. 219.) குலோத்துங்கனின் 45-ஆம் ஆட்சியாண்டில் இடையாற்றூர் வேளான் பொற்காமனான உத்தம சோழ மூவேந்த வேளான் நிலம் கொடையளித்தான் (பு. கோ.க 2-9).

முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் ஏழாவது ஆட்சியாண்டில் காரையூர் சோழ திவாகர மூவேந்த வேளான் என்பவன் கோயில் நந்தவனத்துக்கென இரண்டுமா

நிலம் கொடையளித்தான் (பு. கோ. க 266). இவ்வரசனது 14-ஆம் ஆட்சியாண்டில் குளத்தூர் சங்கரன் கண்டனான கலிகடிந்த பாண்டியதேவன் இக்கோயில் இறைவனுக்கு திருவேட்டைத் தோப்பாக நிலம் கொடுத்தான் (பு. கோ. க 290.) இம்மன்னனின் 17-ஆம் ஆட்சியாண்டில் சார் அரையன் தெற்றன் அரைசன் களஞ்சப்பிறந்தானான கடம்பராயன் ஆவணித் திருநாளுக்கென நிலமும், குளமும் தேவதானமாகக் கொடுத்தான். இத்திருநாள் சங்கரன் கண்டனான கலிகடிந்த பாண்டிய தேவனால் துவக்கப்பட்டது (பு. கோ. க - 304).

சடையவர்மன் வீரபாண்டியனின் 11-ஆம் ஆட்சியாண்டில் மேல்மணநல்லூர் நிலம் சவுந்திரநாயகி அம்மன் கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுக்கப்பட்டது (பு.கோ.க. - 366).

ஸ்ரீ கிருட்டிணதேவ மகாராயன் காலத்தில் கி. பி . 1527-ல் குன்றிடங்கொண்ட நாயனார் கோயிலில் நின்றுபோன வழிபாட்டை மீண்டும் தொடர்வதற்காக நிலம் தானமாக வழங்கப்பட்டது (பு. கோ. க. - 741). வீரப்பிரதாப சதாசிவராயன் காலத்தில் கி. பி. 1551-ல் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த ஒருவன் நிலக் கொடையளித்துள்ளான் ( பு. கோ. க. - 753).

## நில விற்பனை

கோயில் நிலம் பிறர்க்கு விற்கப்பட்டதையும், பிறர் கோயிலுக்கு நிலத்தை விற்றதையும், தனிப்பட்ட இருவர் அவர்களுக்கிடையே கோயில் தொடர்பாக நிலம் விற்றுக் கொண்டதும் கல்வெட்டுகளில் கூறப்படுகின்றன. இரண்டாம் இராசராசனின் 8ஆம் ஆட்சியாண்டில் கோயிலுக்கு ஒரு நிலம் 50 காசுக்கு விற்கப்பட்டது (பு.கோ.க. - 188). முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 7ஆம் ஆட்சியாண்டில் கோயில் நிலம் காரையூர் தேவன் கிழவனான சோழ திவாகர மூவேந்த வேளானுக்கு 1260காசுக்கு 320 குழி நிலம் விற்கப்பட்டது (பு.கோ.க. - 266). இம்மன்னனின் 22ஆம் ஆட்சியாண்டில் மேல் மணநல்லூர் ஊரார் திருநலக்குன்றத்து தேவரடியாள் உமையாள்விநாச்சிக்கு 5 மா மூன்று காணி நிலத்தை 25 பழங்காசுக்கும், 19 கலம் நெல்லுக்கும் விற்றனர் (பு கோ.க. - 319). ஜடாவர்மன் வீரபாண்டியனின் 13ஆம் ஆட்சியாண்டில் கோயிலைப் புதுப்பிக்கும் பொருட்டு வேறு

வகையில்லாமல் கோயில் நிர்வாகத்தினர் இலுப்பைபக்குடி தேவ தான நிலத்தை இவ்வூர் தேவரடியாளளான துக்கையாண்டார் மகள் நாச்சிக்கு 73,300 புதுக்காசுக்கு விற்றனர் (பு.கோ.க.-367). மூன்றாம் சுந்தரபாண்டியன் காலத்தில் கோயில் கோபுரத் திருப் பணிசெலவுக்கென்று திருச்சிராப்பள்ளி உடையார் நாகஜயதுங்க ராயனுக்குக் கோயில் நிலம் விற்கப்பட்டது (பு.கோ.க. -521). பிள்ளை பல்லவராயன் காலத்தில் கோயில் நிர்வாகிகளால் அறந்தாங்கிப் பாற்று நிலம் ஒன்று சேற்றூரைச் சேர்ந்த ஒருவ னுக்கு விற்கப்பட்டது. அவன் அந்நிலத்தைத் திரும்பவும் கோயிலுக்கே கொடுத்தான். (பு. கோ. க. - 903). மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகள் கொண்டு நோக்க இடைக் காலத்தில் கோயில் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றுத் திருப்பணிகளுக்குக் கூட கோயில் நிலங்களை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்பது புலனாகிறது.

## ஏல விற்பனை

நிலங்களைப் பொது ஏலத்தின் மூலம் விற்பதென்பது தமிழ் நாட்டில் நெடுநாட்களாக இருந்து வரும் பழக்கமாயுள்ளது. இன்றைய நாளில் ஏலம் விடும்போது ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம் என்று கூறி ஏலத்தை முடிப்பது போல, அன்றும் ஒருகால், இரண்டுகால், மூன்றுகால், (முக்கால்) என்று கூவி ஏலத்தை முடித்துள்ளனர்.

இரண்டாம் இராஜராஜனின் 15ஆம் ஆட்சியாண்டில் மேல் மணநல்லூர் ஊரில் ஏலத்தில் கூறப்பட்ட ஒரு ஏலத்தைச் சிகா நல்லூர் வேளான் கோதண்டன் என்பவன் 25 காசுக்கு வாங்கி னான் ( பு. கோ. க. - 190).

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் மூன்றாம் ஆட்சி யாண்டில் சிகாநல்லூர் வேளார் நால்வர் தங்கள் புன்செய் நிலத்தை ஏலங் கூறுகையில் ஆற்றூரைச் சேர்ந்த நம்பி பொன்னம்பலக் கூத்தனான உடையார் காங்கேயராயன் அதை $2\frac{1}{2}$ அன்றாடு நற்காசுக்குப் பெற்றான் (பு. கோ. க. - 249).

இதே மன்னனின் 16ஆம் ஆட்சியாண்டில் விசலூரைச் சேர்ந்த ஒருவனுடைய நிலத்தை அவ்வூரார் ஏலத்தில் கூவிய

போது மலைமண்டலத்துக் குளத்தூர் சங்கரன் கண்டனான் கலிகடிந்தபாண்டியதேவன் அந்நிலத்தை 200 காசுக்கு வாங்கினான் (பு. கோ. க. 301).

மாறவர்மன் குலசேகரனின் 4ஆம் ஆட்சியாண்டில் கோயிலுக்குச் சொந்தமான தரிசு நிலத்தையும், குளத்தையும் கோயில் நிர்வாகத்தினர், ஏலங் கூவிய போது, கோயிலில் வேலை செய்யும் சுப்பிரமணியப்பட்டரும், நம்பு செய்வார் பட்டரும் 30 பணத்திற்கு அதை வாங்கினர் (பு.கோ க. - 383). இம்மன்னனின் இதே ஆட்சியாண்டில் புன்னங்குடி ஊரார் ஒரு நிலத்தையும், குளத்தையும் பொது ஏலத்தின் மூலம் கஞ்சமலைத்தேவன் பெரிய உடையானான தென்னவ்வரையனுக்கு 150 செண்பகக் குழிகைப் பணத்திற்கு விற்றனர் (பு. கோ. க. - 384). இம்மன்னனின் 26-ஆம் ஆட்சியாண்டில் குளத்தையும், மேநெல்வேலி சொக்கனார்க்கும் அவர் குடும்பத்தார்க்கும் ஏலத்தின் மூலம் 25 வராகன் பணத்திற்கு விற்றனர் (பு.கோ.க.-406). இந்நிலத்தைச் சீர்செய்து விளைநிலமாக்கிக் கொள்ளவேண்டும் என்றும் கிராமத்திற்குண்டான கடமை வரியையும் செலுத்தவேண்டும் என்றும் ஊரார் நிபந்தனை விதித்தனர்.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் 13ஆம் ஆட்சியாண்டில் திருநலக் குன்றத்து ஊராரும் கோயில் நிர்வாகிகளும் தரிசு நிலம் ஒன்றை ஏலத்தின் மூலம், சேந்தனேரி கைக்கோளன் பொன்னம் பலவன் உய்யவந்த பெருமாளான காங்கேயனுக்கு விற்றனர். (பு. கோ. க.-486). வீரபாண்டியனின் 7-ஆம் ஆட்சியாண்டில் வயலக நாட்டுப் புல்வயல் கிராமத்தைச் சேர்ந்த அரசு களஞ்சப் பிறந்தானான அயிலையராயன் தன் நிலத்தையும் ஐந்து களையும் பொது ஏலத்தின் மூலம் திருநலக்குன்றத்துத் தேவ கன்மி கிணறு கோயிற் கணக்கர்க்கு விற்றான் (பு.கோ.க - 603.)

**விழாக்களில் அன்னதானம் :** கோயிலில் பல மாதங்களில் நிகழ்ந்த பல விழாக்களும், அவ்விழாக்களின் போது அந்தணர்க்கு அன்னதானம் செய்தமையும் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன. திருஆவணித் திருநாள், திருமார்கழித் திருநாள், மாசிமகம் விழா, திருப்பங்குனி உத்திர விழா போன்ற விழாக்கள் ஆண்டு தோறும் நிகழ்ந்தன. பரகேசரிவர்மனின்

14-ஆம் ஆட்சியாண்டில் மாசிமகத் திருவிழாவின் போது, அது நிகழும் ஏழுநாட்களிலும் தினம் 15 மாஹேஸ்வரர்க்கு உணவு அளிக்கப்பட்டது (பு.கோ.க.57). பரகேசரியின் 22 ஆம் ஆண்டில் பங்குனி உத்திரவிழா நிகழும் ஏழு நாட்களிலும் நாள் ஒன்றுக்கு 20 அந்தணர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. (பு.கோ.க. 67). குலோத்துங்கன்(?) காலத்திலும் மாசி மகம் பங்குனி உத்திரம் ஆகிய விழா நாட்களில் அந்தணர்கட்கு உணவு அளிக்கப்பட்டது. (பு.கோ.க.22)

**மடங்கள்:** குலோத்துங்கச் சோழன் காலத்தில் கோனாடன் திருமடம் (பு.கோ.க.22) என்ற ஒரு மடமும், சடையவர்மன் வீர பாண்டியன் காலத்தில் நாற்பத்தெண்ணாயிரவர் திருமடம் (பு.கோ.க. - 366) என்ற ஒருமடமும் இருந்துள்ளன. இம்மடங் களில் விழா நாட்களில் அந்தணர்களுக்கு அன்னதானம் இடப் பட்டது. இம்மடத்தில் பணி செய்வதற்கென்று ஆட்களும், அவர் களுக்கு ஊதியமாக நிலமும் ஏற்பாடு செய்யப்பட்டன. மடத்தை மெழுகுவோன், கலம் இடும் குயவன், அடுவோன் (சமையற்காரன்), விறகிடுவோன் போன்ற ஊழியர்கள் இருந் தனர். அவர்களுக்கு ஆளுக்கு அரை மா நிலம் கொடுக்கப்பட்டது. வணிகர்கட்கு ஐந்நூற்றுவர் என்று பெயர் இருப்பது போல அந்த ணர்க்கு நாற்பத்தெண்ணாயிரவர் என்று பெயர் இருந்திருக்க லாம். ஏனெனில் இக்கோயிலிலேயே உள்ள இன்னொரு கல் வெட்டில் "நாற்பத்தெண்ணாயிர நம்பி" என்னும் ஓர் அந்தணன் குறிக்கப்படுகிறான்.

### ஊர்ச்சபை கூடிய இடம்

ஒவ்வொருஊரிலும் ஊர்ச்சபை இருந்து ஊர் செயல் முறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தியுள்ளன. அச்சபை கூடுவதற்கென்று தனியிடமும் உண்டு. மானூர், உத்திரமேரூர்க் கல்வெட்டுக்கள் ஊர்ச்சபை கோவர்த்தனத்தில் கூடியதைக் குறிக்கின்றன. அது போன்று குடுமியான்மலையிலும் நாட்டுச் சபை, ஊர்ச்சபை முதலியவை இருந்து செயல்பட்டுள்ளன. அதன் கூட்டம் இன்று வசந்த மண்டபம் என்று அழைக்கப் பெறும் காங்கேயராயன் மண்டபத்தில் நடந்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது (பு.கோ.க. 601).

## வெற்றிலைக்குத் தரகு

முதல் குலோத்துங்கனின் 36-ஆம் ஆட்சியாண்டில் இரட்டப்பாடி கொண்ட சோழவளநாட்டார் இங்கு கூடி, வெளியூர்களிலிருந்து இங்கு வந்திறங்கும் வெற்றிலைக்குத் தரகு விதித்தனர். அத்தரகுப் பணத்தைக் காப்புக்குடி சிராஞ்சிமலை இனியநின்றான் சகஸ்ரனும், வேதை கோம்புரத்து அருளாள சகஸ்ரனும் வசூலித்துக்கொள்ள உரிமையளித்தனர். அதற்குப் பதிலாக அவ்விருவரும் இக்கோயிலுக்கு ஆண்டொன்றுக்கு ஃ0,000 பாக்கும், 750 கட்டு வெற்றிலையும் கொடுக்கவேண்டும் என்று நிபந்தனை விதித்தனர். மேலும் அன்றிலிருந்து 12 ஆண்டுகட்குப் பிறகு, அதாவது குலோத்துங்கனின் 48 ஆம் ஆட்சியாண்டிலிருந்து அவ்விருவரும், திருமேற்பூச்சுக்கென மாதம் 5 திரமா வீதம் ஆண்டொன்றுக்கு 60 திரமா கோயிலுக்குக் கொடுக்கவேண்டும் என்று கட்டளையிட்டனர் (பு.கோ.க. 125). கூட்டத்தில் நாட்டாரும், மூன்றுபடைப் பொற்கோயிலரும், பழியிலி ஐநூற்றுவரும் கலந்துகொண்டனர்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 13-ஆம் ஆட்சியாண்டில் இந்நாட்டு மக்கள் அனைவரும் கூடி கோயில் சீரமைப்புக்கும், திருப்பணிக்கும் வரிவிதித்து வசூலித்து நடத்துவதென்று தீர்மானித்தனர். இக்கோயிலில் இருந்து நாலாபுறமும் 24 காத தூரம் உள்ளவரை வாழும் மக்கள் அனைவரும் வரி கொடுக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. கோயில் நிர்வாகிகளுக்கு வரி வசூலிக்கவும், நன்கொடைகள் பெறவும் அனுமதியளிக்கப்பட்டது. ஒவ்வொரு சாதியினர்க்கும், அவர்கள் பொருளாதார நிலைக்குத் தக்கபடி வரி விதிக்கப்பட்டது. வரிகொடுக்க மாட்டாதவர்களிடத்தில் அவர்களது வெண்கலப் பொருட்களைப் பறிமுதல் செய்யவும், மண் கலங்களை உடைக்கவும் உரிமை வழங்கப்பட்டது (பு. கோ. க. 285).

## மூன்று படைப் பொற்கோயில் கைக்கோளர் யார்?

மேலே கண்ட ஊர்ச்சபைக் கூட்டம் பற்றிய கல்வெட்டு ஒன்றில் மூன்று படைப் பொற்கோயில் கைக்கோளரும், பழியிலி ஐநூற்றுவரும் பங்கெடுத்துக்கொண்டனர்

என்பதைக் கண்டோம். இவர்கள் யார் என்பதைச் சற்று விரிவாகத் தெரிந்துகொள்வது நலம்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து படையினரில் கைக்கோளர் என்ற பிரிவினர் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் ஏன் கைக்கோளர் என்று அழைக்கப்பட்டனர் என்று தெளிவாகத் தெரியவில்லை. கைக்கோளர் என்னும் சொல் கை கொள்வார் என்னும் பொருளில் வந்திருக்கக் கூடுமா என்ற ஐயம் உள்ளது. அரசன் தன் சிறந்த வீரர்களுக்குக் கை கொடுப்பது மரபு போலும். அரசனது கை கொள்ளும் பேறு பெற்றமையால் கைக்கோளர் எனப் பெயர் பெற்றனரோ என ஐயுற வேண்டியுள்ளது. சோழர்களின் ஆட்சியில் ஆதித்த சோழத் தெரிஞ்ச கைக்கோளர், மதுராந்தகத் தெரிஞ்ச கைக்கோளர், பராந்தகத் தெரிஞ்ச கைக்கோளர், சிங்களாந்தகத் தெரிஞ்ச கைக்கோளர், கரிகால சோழத் தெரிஞ்ச கைக்கோளர், கோதண்டராமத் தெரிஞ்ச கைக்கோளர், அருள்மொழித்தேவர் தெரிஞ்ச கைக்கோளர் என்று பல கைக்கோளர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.[1] எனவே இந்த மரபு குலோத்துங்கன் காலம்வரை இருந்துள்ளது என்பது தெளிவாகிறது.

### நாட்டுப்படை பழியிலி ஐநூற்றுவர்

இப்பகுதியில் பல்லவர்களது இறுதிக் காலத்தில் சாந்தம் பழியிலி என்பவன் சிற்றரசனாக இருந்து நார்த்தாமலையில் கோயில் எடுத்துள்ளளான். அவன் பெயரால் இப்படை வந்திருக்கலாம். நாட்டுப் படை என்பது உள்துறைப் பாது காப்புப்படை எனக்கொள்ளலாம். பழியிலி என்பது குற்ற மற்ற என்ற பொருளில் கொண்டால், இவர்கள் நிர்வாகச் சீர்மைக்காக இன்று பயன்படுத்தப்படும் கண்காணிப்புப் படை எனக்கொள்ளலாம்.

### கல்வெட்டுப் படிமாற்று

பொதுவாகப் பழைய கோயில்கள் புதுப்பிக்கப்படும் போது அவ்விடங்களில் உள்ள கல்வெட்டுகளை அப்படியே படி எடுத்து வேறு இடங்களிலோ அல்லது புதிதாகக் கட்டப் பட்ட அதே இடத்திலோ திரும்பப் பொறிப்பது கல்

1. யாவரும் கேளிர். பக். 137—138.

வெட்டுப் படிமாற்று எனப்படும். இம்மரபு பரவலாகத் தமிழகத்தில் காணப்படுகிறது.

குடுமியான் மலையில் முதல் மாறவர்மனின் ஆட்சிக்காலத்தில் இப்படிக் கல்வெட்டுக்கள் திரும்ப எழுதப்பட்டுள்ளன. அவனது மூன்றாம் ஆட்சியாண்டில் இக்கோயிலின் தவன மண்டபம் இடிபாடு கண்டதால் அதைத் திருத்தி, நடராசர் மண்டபம் (இப்போதைய சபாமண்டபமாக இருக்கலாம்) கட்டினார்கள். இக்காரியத்தைச் செய்தவன் இப்பகுதியின் குறுநிலத் தலைவனாய் அன்றிருந்த ஆற்றூருடையான் பொன்னன் காங்கேயன் என்பவன். அவனது ஆணைப்படி இங்கிருந்த முதல் குலோத்துங்கனின் 35-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இரண்டாம் பிரகாரத்துத் தென்சுவரில் பொறிக்கப்பட்டது (பு. கோ. க. 248).

இதே மன்னனின் 4-ஆம் ஆட்சியாண்டில் அதே ஆற்றூருடையான் பொன்னன் காங்கேயராயன் என்பவன் இரண்டாம் பிரகாரத் திருவாயில் இடைஞ்சலாய் இருக்கிறதெனக் கருதி அதை இடித்துத் திருமாளிகையும், வாயிலும் கட்டுவித்தான். அப்போது அங்கிருந்த பரகேசரியின் 33-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டை மடைப்பள்ளியின் கிழக்குச் சுவரில் எழுதுவித்தான் (பு.கோ.க. - 255). அதே ஆண்டில் சேதிராயன் மண்டபம் சீர்திருத்தம் செய்யப்பட்டபோது அங்கிருந்த குலோத்துங்கனின் 12-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மடைப்பள்ளியின் கிழக்குச் சுவரில் எழுதப்பட்டது (பு.கோ.க. - 506).

## ஒரே நிலம் இரண்டு முறை தானம் ஆனது

வேள்விக்குடிச் செப்பேடு, தளவாய்ப்புரச் செப்பேடு ஆகியன ஒரே தானத்தை, அதன் பிடிபாட்டை இழந்துவிட்ட அதே தானத்தார்க்கு இரண்டாம் முறையாகக் கொடுத்ததைக் கூறுகின்றன. அத்தகு செய்தி இங்கும் ஒரு கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. பாண்டிய மன்னன் ஒருவன் காலத்தில் விழுமியான் என்ற புவன முழுதுடைய பல்லவதரையனுக்கு மருங்கூர் கிராமத்தில் நிலம் விற்கப்பட்டது. அவன் அதை நெடுநாட்கள் பயன்படுத்தாமல், வெளியேறிவிட்டபடியால் அது கோயிலுக்குத் தேவதானமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

TAMIL NADU ... LIBRARY Acc No 1177 Date MADRAS-28

பின் சில காலம் கழித்து அவன் மக்கள் வந்து கேட்டபடியால், பழைய பிடிபாட்டைக் கண்டு, மீண்டும் அவர்களுக்கே அந்நிலம் கொடுக்கப்பட்டது (பு. கோ. க. 517).

## முன் தேதியிட்டுச் செயல்பட்ட ஆணை

இன்றைய அரசினர் சில சட்டங்கள் இயற்றும்போது அதன் முதல் தேதி ஒன்றிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவருவதாக அமைக்கின்றனர். இம்மரபு தொன்றுதொட்டு வருவது என்பதற்கு இங்கு சில கல்வெட்டுச் சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. இரண்டாம் இராசராசனின் 16ஆம் ஆட்சியாண்டில் தேவதானமாக விடப்பட்ட நிலம் ஒன்று இறையிலி ஆக்கப்பட்டது. இவ்வாணையை 11ஆம் ஆட்சி ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்துமாறு கட்டளையிடப்பட்டது (பு. கோ. க. 182). சோழ அரசன் ஒருவனின் 16ஆவது ஆட்சியாண்டில் சிலர் கோயிலுக்குப் பொன்தானம் அளித்தனர். அதை 9ஆவது ஆட்சியாண்டிலிருந்து அளிப்பதாகக் கூறி அப்படியே கொடுத்தனர் (பு. கோ. க. 234). இவ்விரண்டு கல்வெட்டுகளும் முன் தேதியிட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட செய்திகளாக நமக்குத் தெரிகின்றன.

## கோயிலில் திருட்டு

அக்காலத்தில் கோயில்கள் சிறந்த பொருளாதார மையமாகச் செயல்பட்டுள்ளன. சில நேரங்களில் இதன் உடைமைகள் பலராலும் கவர்ந்து செல்லப்பட்டுள்ளன. "அன்புணர்வோடு பழகி அறநெறியாலும், ஒழுக்கத்தாலும் மக்களின் மனதைக் கவர்ந்த அந்தணர்களும் கூடச் சில கோயில்களில் அணிகலன்களையும், சொத்துக்களையும் கவர்ந்ததால் உரிமைகள் பறிக்கப்பட்டவர்களானார்கள்.[2]

## கொழு உருவிப் பிரத்தியம் செய்தல்

வீரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டில் இக்கோயில் நகைகள் களவு போயின. ஊர்மக்கள் காங்கேயராயன் மண்டபத்தில் கூடி இக்கோயில் வழிபாடு செய்யும் சிவபிராமணனை விசாரித்தார்கள். அப்போது குன்றன் செருந்திவனப் பெருமாளான எதிரிலி சோழபட்டன் என்னும் சிவபிராமணன் ஒருவன் "நானும் இவ்வூர்க் கற்றச்சனும் அறுபது

2. யாவரும் கேளிர், பக். 227.

பொன் எடுத்துக் கூறிட்டுக் கொண்டோம்" என்று சொன்னான். மற்ற பிராமணர்கள் "நாங்கள் இதுபற்றி அறிந்திலோம்" என்றனர். ஆனால் செருந்திவனப் பெருமாள் தான் எடுத்த அறுபது பொன் ஒழிய நீக்கியுள்ள பொன் இவர்கள் எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னான். எனவே, குற்றத்தை மறுப்பவர்கள் பிரத்தியம் செய்யவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஒரு இரும்பைப் பழுக்கக் காய்ச்சி குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன் நீட்டினர். அவர்கள் அதை உருவும்போது நால்வர் கை புண்ணானது. குற்றத்தை ஒப்புக்கொண்டவர்கள் கொழு உருவ வேண்டியதில்லை எனவே புண்ணானவர்கள் குற்றம் செய்தவர்கள் என்றுமுடிவு செய்யப்பட்டு அவர்களைச் சிவத் துரோகிகளாகக் கொண்டு தண்டனை கொடுத்தார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கோயில் நிலம் பறிமுதல் செய்யப்பட்டது. பூசை செய்யும் உரிமையும் மறுக்கப்பட்டது. மற்ற சிவபிராமணர்களும் சரியாகக் காவல் காக்காது "காவல் சோர்வுக்கு" உடன்பட்டமையால் அவர்களது உரிமைகளும் மறுக்கப்பட்டன. (பு. கோ. க. 601).

இச்செய்தி கொண்டு அன்றைய நாளில் குற்றவாளிகள் எவ்விதம் கண்டுபிடிக்கப்பட்டனர், தண்டிக்கப்பட்டனர் என்பதை அறிகிறோம். நேரடி சாட்சியங்கள் இல்லாத, குற்றத்தை மறுக்கிற குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கொழு உருவுதல் போன்ற இயற்கைக்கு மாறான செயல்கள் வழக்கத்தில் இருந்துள்ளன. "பிரத்தியம்" செய்தல் என்பது சத்தியத்தில் இன்னொரு வகை போலும். இன்றுங் கூட எரியும் கற்பூரத்தைக் கையில் ஏந்துதல், தாம் பெற்ற பிள்ளையைத் தாண்டிக் குற்றத்தை மறுத்தல் போன்ற வழக்கங்கள் மக்களால் பேசப்பட்டு வருகின்றன. செட்டி நாட்டில் "பிரத்தியம்" என்னும் சொல் இன்னும் வழங்கி வருகிறது என்பார் கம்பன் அடிப்பொடி அவர்கள்[3].

**நாடு கடத்திய தீர்ப்பு:** கி. பி. 1616-இல் கோயில் நகைகளைத் திருடன் ஒருவன் கவர்ந்து சென்றான். ஊர்ச்சபை கூடியது. திருடன் சபை முன் நிறுத்தப்பட்டான். அவனைச்

3. கலைமகள். நவம்பர் '56. பக். 627.

சிறையில் தள்ளவும், ஒருகையை வெட்டவும் முடிவு செய்யப் பட்டது. அவனது நிலம், பிறசொத்துக்கள் பறிமுதல் செய்யப் பட்டு விற்று நகைக்குப் பதிலாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இறுதியில் அவன் ஊரைவிட்டு வெளியேற்றப்பட்டான். அவனுக்கு உதவி செய்தவர்களும் தண்டனைக்குள்ளானார்கள். திருடனைப் பிடிக்கத் துப்பு கொடுத்தவர்களுக்கு பரிசு வழங்கப் பட்டது[4] என்ற ஒரு செய்தியும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

**தேவரடியாரின் திருப்பணிகள்** குடுமியான்மலையில் குலோத்துங்கனின் 15-ஆம் ஆட்சி யாண்டில், சாந்திக் கூத்தத் திருக்கொடுங்குன்றம் உடையாளான பெரிய நாட்டாசாரியன் மகள் நாச்சிமலையாழ்வி என்பவள் விசலூரில் நிலம் விலைக்கு வாங்கி குடுமிநாதர் கோயிலுக்கென பத்துமா நிலம் கொடை யளித்தாள் (பு. கோ. க. 219). இவள் கோயிலில் சாந்திக் கூத்தாடுபவள்[5] என்பது குறிப்பிடத் தக்கது. சாந்திக் கூத்து பற்றிப் பின்னர் விளக்கப்படும்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 22 ஆம் ஆட்சி யாண்டில், மேல்மணநல்லூர் ஊராரிடம், திருநிலக்குன்றத்துத் தேவரடியாள் உமையாள்வி பெரியநாச்சி என்பவள் ஐந்துமா நிலத்தை 25 பழங்காசுக்கும், 11 கலம் நெல்லும் விலையாகக் கொடுத்துப் பெற்றாள் (பு.கோ.க.319)

ஜடாவர்மன் வீராபாண்டியனின் 11 ஆம் ஆட்சியாண்டில் இவ்வூர் தேவரடியாளான துக்கையாண்டிமகள் நாச்சி என் பாள் மேலைக்கோயிலில் அருளுடை மலைமங்கையம்மன் கோயிலைக் கட்டினாள் (பு கோ.க. 366). இவளே இரண் டாண்டுகள் கழித்துக் கோயில் நிர்வாகத்தினர் சீரமைப்புக்கென கோயில் நிலத்தை விற்க முனைந்த போது 73,300 காசு கொடுத்து அதை வாங்கினாள் (பு.கோ.க. 367)

சுந்தரபாண்டிய தேவனின் 21-ஆம் ஆட்சியாண்டில் மேல்மணநல்லூர் ஊரார் இன்னொரு நிலத்தைத் திருநலக் குன்றத் தேவரடியாள் பெரியநாச்சி துக்கைக்கு 3200காசுக்கு விற்றனர். (பு. கோ. க. 529)

---

4. 1 P. S. 867;

5. யாவரும் கேளிர்-பக். 254 சாந்திக் கூத்து, பிற கூத்துகள் பற்றிய விரிவான செய்திகளுக்கு காண்க.

இச்செய்திகள் இத்தேவரடியார்கள் அன்றைய சமுதாயத்தில் எவ்வித இடம் பெற்றிருந்தனர், பொருளாதாரத்தில் எத்தகைய ஏற்றம் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. அவர்கள் கோயில் எழுப்பியதையும் காணும் போது அவர்களின் செல்வச் செழிப்பு மட்டுமின்றி இறை பணியும் புலனாகின்றது. இத்தகைய உயரிய செல்வநிலையை அவர்கள் பெற்றிருந்தமையால்தான்,

"செந்நூ ணிணந்த சித்திரக் கம்மத்து
வெண்கா லமளி விருப்பி னேற்றி" (பெருங் 1: 35: 98-99)

பரத்தையர் அன்று வாழ்ந்தனர் என்று கொங்குவேளிர் குறிப்பிடுகிறார். இது உயர்வு நவிர்ச்சியல்ல என்பதற்கு மேற்கண்ட கல்வெட்டுகள் சான்றாய் அமைகின்றன. இவர்கள் அருங்கலைகள் பயின்று தேறிக் கோவிலில் இறைபணி செய்து வந்தனர்.

### கல்வெட்டில் சாதிப் பிரஸ்டம்

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மல்லப்பப் பல்லவராயனின் ஆட்சிக் காலத்தில், குடுமியான்மலையின் குன்றுசூழ் நாட்டு முத்திரையன், கோனாட்டு முத்திரையன் என்னும் இருவர், இவ்வூர்ச் சாவு காரியங்களில் கட்டையிடல், முக்காடு இடல், தீச்சட்டிக் கொண்டு சென்று சுளுந்து கொளுத்தி சவங்காத்தல் போன்ற இழிவான காரியங்கள் செய்தனர். அவர்களை இத்தகு காரியம் செய்ய வேண்டாம் என்றும், மங்கல நிகழ்ச்சிகளில் மட்டும் கலந்து கொள்ளும்படியும் பிற வலையர்கள் வேண்டிக் கொண்டனர். (பு.போ.க. 906) ஆனால் அவர்கள் அக் காரியங்களைத் தொடர்ந்து செய்துவந்தனர். எனவே மற்றவலையர்கள் கூடி அவ்விருவரையும் சாதியை விட்டு நீக்கி வைத்தனர். மல்லப்ப நாயக்கப் பல்லவரையரும் அவர்களை இவ்வித காரியங்களில் ஈடுபடவேண்டாம் என ஆணையிட்டார். (பு.கோ.க. 926) இக் கல்வெட்டுக்கள் அன்றைய சமுதாயத்தில் வழங்கிய சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளைக் கூறுகின்றன. "யார் யார் என்னென்ன தொழில்கள் செய்யவேண்டும் என்று மனுவின் தர்ம சாஸ்திரம் கூறுகிறது. திருக்கோயிலூரிலுள்ள ராஜராஜனின் கல்வெட்டு ஒன்று அவ்வூர் செக்கு வணிகர் உரிமை மறுக்கப்பட்டு ஊரரரால் ஒதுக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது.[6]

6, கல்வெட்டு - இராட்சச - தை - பக். 23. திரு. இரா. நாகசாமி,

## சமாதான உடன்படிக்கை

இரண்டு குழுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு கொலை, கொள்ளை முதலியவற்றில் ஈடுபட்டார்கள். பரம்பூர் செருந்தா நம்பு செய்வார், பாண்டியனார் மகன் வன்னியர், திருச்சிராப்பள்ளி உடையார் உதையப் பெருமாள் இந்த மூவர்க்கும் உள்ளிட்ட உறவினர் ஒரு குழுவாக நின்றனர். கீழைக்குறிச்சி மாவலிவாணாதிராயன், சோழகோன்பறையர் மகன் சூறாண்டார் இந்த இருவரும், இவரோடு உள்ளிட்ட உறவினர்களும் ஒரு குழுவாக நின்றனர். இவ்விரு குழுவினரும் நெருஞ்சிக்குடி, சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் சண்டையிட்டுக் கொண்டனர். இதில் இரு தரப்பிலும் சிலர் இறந்து விட்டனர். மாடு, கன்றுகள் கவர்ந்து செல்லப்பட்டன. இறுதியில் இதற்கு ஒரு முடிவு கட்டும் வகையில் இரு குழுவும் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு அதை குடுமிநாதர் கோயிலிலும் கல்வெட்டில் பொறித்தனர் (பு.போ.க. 960). இது வன்னியர், அந்தணர் முதலான மேல் சாதியினர்க்கும், பறையர், பள்ளர் உள்ளிட்ட கீழ்ச்சாதியர்க்கும் இடையே ஏற்பட்ட ஒரு சாதிக் கலவரமாகத் தெரிகிறது.

## இலவச மனை நிலம் வழங்கல்

கி. பி. 1615ஆம் ஆண்டில் அச்சுதப்பல்லவராயனின் மகன் மல்லப்பப்பல்லவராயன் வைத்தூர் சீமையை ஆண்டான். அக்கால் அவன் சிகாநல்லூர் வாசிகளிடம் 30 பொன்னுக்கு நிலம் வாங்கி, அதைக் கோயிலுக்குக் கொடுத்து, கோயிலில் உள்ள அந்தணர்களுக்கும் சூத்திரர்களுக்கும் இலவசமாக மனைநிலம் வழங்கும்படி ஆணையிட்டான்(பு.கோ.க.866).

## கல்வெட்டில் வரிகள்

மன்னர்கள் தம் குடிமக்களிடம் பல்வேறு விதமான வரிகளை வசூல் செய்துள்ளனர். இராசராசன் காலத்தில் 27 வகையான வரிகள் இருந்தன என்று லெய்டன் செப்பேட்டால் அறிகிறோம். குடுமியான் மலைக் கல்வெட்டுகள் பலவற்றில் அங்கு நடைமுறையிலிருந்த வரிகள் கூறப்பட்டுள்ளன. "அந்தராயம், அதரவிநியோகம், அச்சுவரி, கடமை, கற்பூர விலை, காரியவாராட்சி, பஞ்சு பீலி, சந்து, விக்ரஹப்பேறு,

தறிஇறை, தட்டாரப்பாட்டம், பாசிப்பாட்டம், இனவரி, ஈழம், செக்கிறை, பொன்வரி, இலாஞ்சினைப்பேறு, வெட்டிப்பாட்டம், இடைவரி, ஆட்தேவை, ஊர்ப்புரவு, சில்வரி, பெருவரி, வெட்டி முட்டாவாள்'' என்ற பலவகையான வரிகள் அங்கு வழக்கி லிருந்தன என்று பல கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.

### வரிச்சுமை

வீரபாண்டியன் தன்னுடைய 15 ஆம் ஆட்சியாண்டில் விசலூர் கிராம மக்களுக்கு வைப்பூருடையான் என்ற குறுநில மன்னன் ஒரு குறைந்த பட்ச வரியை நிர்ணயித்தான். ஆனால் அவனுக்கு அடுத்து வந்த வாணதிராயர், காங்கேயராயர் என்ற இருவர் அவ்வூர் மக்களுக்கு அதிகபட்ச வரியை விதித்தனர். அம்மக்களால் அவ்வரியைச் செலுத்த முடியாது போனதால் மூன்றுவேலி நிலத்தை விற்றுச் செலுத்தினார்கள் (பு. கோ. க. 375). ஸ்ரீ வீரப்பிரதாபராயனின் ஆட்சிக்காலத்தில் கி. பி. 1510-ல் வழுத்தூர்ச் சீமையை, தீராவினை தீர்த்த வீரநர சிங்கப் பல்லவராயர் என்பவர் ஆண்டார். அவர் தனக்கு விதிக்கப்பட்ட வரியைப் பேரரசுக்குச் செலுத்த வேறு வழி யில்லாமல் பரம்பையூர் பற்றில் புதுவூர் என்னும் ஊரைக் குடி நீங்காத் தேவதானமாகத் திருநலக் குன்றம் கோயிலுக்கு விற்று 30 பொன் பெற்று வரியைச் செலுத்தினார் (பு. கோ. க.726). இவ்விரண்டு கல்வெட்டுகளும் வரிச்சுமையினால் தங்கள் உடைமையினையும் விற்கவேண்டுடியநிலை யிருந்ததைக் கூறு கின்றன.

### வரி ஏய்ப்பு

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் தன்னுடைய 16ஆம் ஆட்சியாண்டில் அன்னவாயில் கூற்றத்து விசலூரைச் சேர்ந்த ஆழ்வாந்தேவன் என்பவன் தனக்கு விதிக்கப்பட்ட வரியை நெடுநாள் செலுத்தாமல் இருந்து, பின் ஊரைவிட்டே ஓடிவிட்டான். அரசு அதிகாரிகள், ஊராரிடம் வந்து அவ்வரி யைச் செலுத்துமாறு நிர்ப்பந்தித்தனர். ஆழ்வாந்தேவனுக் காகப் பொறுப்பேற்கும் "நாதகரும்" யாரும் இல்லை. எனவே ஊரார் அவனுக்குச் சொந்தமான நிலத்தைப் பொது ஏலத் தில் விற்று 2000 காசு பெற்று வரியைச் செலுத்தினர் (பு. கோ. க. 301).

### நீர்ப்பாசனம்

அரசர்கள் தங்கள் குடிமக்களுக்கு பல்வேறு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்துள்ளனர் என்பது பல கல்வெட்டு களாலும் அறியப்படும் உண்மை. நிலத்தை விற்பனை செய் யும் போதும், அந்நிலத்திற்கு உரிய நீர்ப்பாசன வசதிகளை யும் குறிப்பிட்டே சாசனம் செய்தனர். மன்னர்களிடம் மக்கள் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கும்படி வேண்டியுள்ள னர். குடுமியான்மலைக் கல்வெட்டு ஒன்றில் "இரண்டு கரை நாட்டு நாட்டவரும் நாடு பிடித்த வைப்பூருடையாரைக்கூட்டி எங்கள் குளமும் வெட்டி, வரம்பும் ஏறிட்டு வெள்ளாற்றை யும் குளத்திலே விலக்கிக் குடுத்து உமக்கு உழவாகக் ஙகைக் கொள்க" (பு. கோ. க. 375.) வென்று வேண்டிக்கொண்டனர். பல கல்வெட்டுகளில் இவ்வூரைச் சுற்றிலும் இருந்த ஏரி, குளங் கள் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. அவை: "பெற்றா னேரி, பிடாரன் ஏரி, ஊறல் குளம், தேவநார்குளம், கச்சா குளம், உமையாண்டி ஊருணி, அதிய மங்கலங்குளம், தட்டாங் குளம், பெரியகுளம், சுந்தர சோழன்குளம், புதுக்குளம், சுடுகாட் டுக்குளம் முதலியனவாகும்.

### வழங்கிய காசுகள்

அக்காலத்தில் பலவகையான காசுகள் வழக்கத்தி லிருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. திரமா, காசு, கழஞ்சு, பொன், துளைப்பொன், மா, பழங்காசு, புதுக்காசு, அன்றாடு வழங்கும் சக்கரம் பணம், அன்றாடு வழங்கும் குளிகைப்பணம், அன்றாடு செண்பகக் குளிகைப்பணம், வராகன்பணம் என்ற பெயர்களில் பலவகைக் காசுகள் வழங் கப்பட்டன.

### அளவைகள்

கல்வெட்டுகள், செப்பேடுகள், பலவற்றில் பலவித அளவைகள் குறிக்கப்பட்டுள்ளன. முகத்தலளவை, நீட்ட லளவை, நிறுத்தலளவை என்ற மூன்று அளவுகளும் உள்ளன. முகத்தலளவைகளாக கேரளாந்தகன் உழக்கு, கேரளாந்தகன் படி, கேரளாந்தகன் மரக்கால், கடமைக்கால், சூலக்கால், நாழி, கலம் என்ற அளவைகள் குறிப்பிடப்படுகின்றன. நீட்டல

ளவையாகக் காதம் குறிக்கப்படுகின்றது. நிலம் அளக்க 16 அடிக் கோல் பயன்படுத்தப்பட்டது. 'கைத்தடி' என்ற ஒன்றும் வழங்கி வந்தது. நில அளவைகள் விரிவுக்குத் தகுந்து குழி, மா, காணி, வேலி என்று பெயர் பெற்றன. 256 குழி = 1 மா என்று வழங்கியுள்ளது (பு. கோ. க. 383).

## அதிகாரிகள்

பல்வேறு விதமான அரசியல் விவகாரங்களையும் கவனிக்க தனித்தனி அதிகாரிகள் இருந்தனர். ஓலை, திருமந்திரஓலை, திருமந்திரஓலை நாயகம், காணநாயகம், முகவெட்டி, உடன் கூட்டம் என்ற பல அதிகாரிகள் கூறப்பட்டுள்ளனர்.

## கல்வெட்டில் நோய்

கோப்பரகேசரியின் 6 - ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு 'குடுத்தார் குடுத்தபசு கள்ளி கொள்ள காக்க மாட்டாமையால்' விற்கப்பட்டதைக் குறிக்கிறது. (பு. கோ. க. - 44) கள்ளி கொள்ள என்பது ஒரு நோயாகத் தோன்றுகிறது. 'கள்ளிப்பூ கிரந்தி' ஒருகொடிய மேகநோய் என்று லெக்சிகன் மூலம் அறிகிறோம்.

## கற்றளி செய்வதாய்

கொங்கும், ஈழமும் கொண்ட வீரபாண்டியனது கல்வெட்டில் (பு. கோ. க. 375) விசலூர் ஊரார் கோயிலுக்கு விற்ற நிலத்திற்கு "விலைப்பொருள் இந்நாயனார் ஸ்ரீபண்டாரத்து திருக்கற்றளி செய்ய இருந்த காசாய் முதலிகளுக்கு நாங்கள் குடுப்பிச்ச காசு 50,000மும் பிறகாசுகளும் கொண்டு விலைப் பிரமாணம் செய்து கொடுத்தோம்" என்று குறிக்கின்றனர். கற்றளி செய்யக் கொடுத்த காசு நிலமாக மாறியது, இடைக்காலத்தில் நிலங்களுக்கும், விவசாயத்துக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை நன்கு காட்டுகிறது.

கோபுரத் திருப்பணி செய்வதற்காகப் பொருள் சேர்த்ததை மற்றொரு கல்வெட்டு (பு. கோ. க. 521) குறிக்கிறது.

# கல்வெட்டுப் பாடல்கள்

கல்வெட்டுக்களில் பாடல்கள் இடம் பெறுவது பல்லவர்கள் காலத்திலிருந்து இருந்து வந்துள்ளது. பாடற் கல்வெட்டுக் களைத் தொகுத்தும், பகுத்தும் ஆய்ந்து, மயிலை சீனி. வேங் கடசாமி, மு. இராகவய்யங்கார் போன்றவர்கள் நூல் வடிவில் கொடுத்துள்ளனர். தமிழ்ப் பாடற் கல்வெட்டுக்களை ஆய்வ தற்கு முற்பட்ட ஆய்வாளர்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் அதிகமான பாடல் கல்வெட்டுக்கள் எழுந்தன என்று குறிப்பிட்டுள்ளார்கள்.[1] இதற்குக் காரணம் அக்கால வேந்தர்கள் இத்தகு பாடல்களுக்கு அதிக ஆதரவு அளித்ததே என்பது அவர்கள் கருத்து.

குடுமியான்மலைக் கோயிலின் முன்கோபுர வாசலிலும், பின்புறமுள்ள மலைப் பாறையின் பல இடங்களிலும் கல்வெட்டுப் பாடல்கள் கிடைக்கின்றன. சுமார் 12 பாடற் கல்வெட்டுக்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவை பாண்டியர் 6, வாணாதிராயர் 5, கோளிவீரராயன் (பல்லவராயன்) 1, ஆக 12.

## பாண்டியர் காலம்

தென்னவன் செய்ய பெருமாள் என்னும் பாண்டிய மன்னன் ஒருவன் ஒரு கல்வெட்டில் இடம்பெறுகிறான் (பு.கோ.க. 651). இவன் யார் என்று அறிய இயலவில்லை. இவன் சோழர் களுக்கு அச்சத்தைத் தரும் மன்னன் என்றும், அவர் மனைவியர் தம் தாலியின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவன் என்றும் சிறப்பித்துப் பேசப்படுகிறான்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனைப் புகழ்கிறது இன்னொரு பாடல் (பு.கோ.க. 652). இப்பாடலை அவன் அவைக்களப் புலவர் காரணை விழுப்பறையர் பாடினார் என்பர்.[2] திருப்பத்தூர் வட்டம், பெருச்சிக் கோயிலில் உள்ள

1. கல்வெட்டு - ராட்சச ஆடி-பக். 30.
2. கலைமகள். மார்ச் '57. பக். 283.

கல்வெட்டில் இப்புலவர் குறிக்கப்படுகிறார்.[3] இவர் சுந்தர பாண்டியனின் வீரத்தையும், கொடைத்தன்மையையும், வஞ்சப் புகழ்ச்சி யாகப் பாடிப் புகழ்கிறார். அவன் சோழ நாட்டை வென்று பாணர்க்குக் கொடுத்ததை அவர் புகழு மாற்றான் இவன் மலை முகட்டில் கயல் சின்னம் பொறித்த வீரம் கொண்டவன், வைகை உடைப்பெடுத்தபோது சிவபெரு மானையே மண் சுமக்கச்செய்து அணைக்குக் கரை போட்ட வன், எனவே யாருக்கு எதைக் கொடுக்கவேண்டும் என்று தரம் அறியாது கொடுக்கிறான் என்று பழிப்பதுபோலப் புகழ் கிறார்.

மற்றொரு பாடற் கல்வெட்டு (பு. கோ. க. 653) பாண் டிய மன்னன் ஒருவனை, தெலுங்கரை வென்றவன், இந்திரனை வென்றவன், கடல்வற்றிப் போகும்படி வேல் விட்டவன், வெற் பில் மீன் சின்னம் பொறித்தவன் என்று கூறுகிறது. இன்னு மொரு பாடல் சோழர்களை வென்றான் என்று பாண்டிய மன்னன் ஒருவனைப் புகழ்கிறது (பு. கோ. க. 654). மற்றொரு பாடற் கல்வெட்டுப் பாண்டிய மன்னன் சேவடிகளில் மாற் றரசர்கள் வந்து பணிவது மிக அதிகமாக உள்ளது. அவன் சேவடிகளில் மற்றவர்களின் முடிகள் பட்டு அவனைக் கரிகாலன் போன்று ஆக்கிவிடுகிறது என்று கூறுகிறது (பு. கோ. க. 655).

இன்னொரு பாடற் கல்வெட்டு பாண்டியர் ஆட்சியில் இப்பகுதியின் தலைவராக விளங்கிய சாமந்தனார் என்பவர் முன்னிலையில் இக்கோயிலிலேயே ஆதிநாதர் என்பவரால் பாடப்பட்டது என்பர்[4]. இப்பாடல் இக்கோயில் இறைவனைப் பார்த்து உமை அன்னை நகைப்பதாகவும், அதற்குக் காரணம் கங்கையை முடியில் ஒளித்து வைத்துக் கொண்டிருந்த இறைவ னது மிகுதியான முடிபோய், சிறிய குடுமி அளவில் ஆகிவிட் டதே, இனி அவர் கங்கையை எங்கே கொண்டு மறைப்பார் என்று எண்ணி நகைப்பதாகவும் கூறுகிறது.

**வாணாதிராயர் காலம்:** வாணாதிராயர்களைப் புகழ்ந்து பேசும் பாடல் கல்வெட்டுகள் 5 இங்குள்ளன. ஒரு பாடல் வாணாதிராயன் ஒருவன் உலகம் ஓங்கிய கொற்றக்குடையை

3. பாண்டியர் வரலாறு. பக் 122.
4. கலைமகள். ஜனவரி. 57, பக். 43.

உடையவன் என்றும், திருவுத்திராட நாளில் பிறந்தவன் என்றும் சிறப்பித்துக் கூறுகிறது (பு. கோ. க. 673).

இன்னொரு பாடல் மாவலி வாணாதிராயன் என்பவனை யும், அவனது கொடியாகிய கருடக் கொடியினையும் புகழ்ந்து பேசுகிறது (பு. கோ. க. 674). சோழனுடைய புலிக்கொடியை யும், பாண்டியனின் மீன்கொடியையும், சேரனுடைய விற் கொடியையும் காட்டிலும் சிறந்தது வாணாதிராயனுடைய கருடக்கொடி என்கிறது. இவர்கள் கருடனைச் சின்னமாகக் கொண்டவர்கள். தங்கள் காசுகளிலும் கூட கருடனைப் பொறித் தனர். அழகர்மலை அண்ணலிடம் பெரும் பக்தி கொண்ட வர்கள். கருடகேதனன் என்ற சிறப்புப் பெயர் கொண்டவர் கள்.[5] என்பதற்கு இம்மாவட்டத்தில் இருக்கும் இன்னும் சில கல்வெட்டுகள் சான்றாக நிற்கின்றன.

இன்னொரு பாடல் (பு. கோ.க.675) வாணன், அயிராவதம் என்னும் யானை கொண்டவன். அவன் வருகையை அறிந்த மதுரையாளும் பாண்டியர் தங்கள் அரண்மனைக்குள் புகுந்து ஒளிந்து கதவைத் தாளிட்டுக் கொள்வர் என்று கூறுகிறது. எனவே பாண்டியர்களை வென்றவன் என்பது இதிலிருந்து பெறப்படுகிறது.

இன்னொரு பாடல் (பு. கோ. க. 676) வாணன் ஒரு வனை வடுகெறிந்தவன் என்று கூறுகிறது. பாண்டி நாட்டில் தஞ்சாக்கூர் என்னுமிடத்தில் வாழ்ந்த ஒருவன் வாணகோவ ரையன் என்பவன். இவன் கலிங்கப் போரில் கருணாகரத் தொண்டைமானுடன் சென்று போரிட்ட மூன்று படைத் தலைவர்களில் ஒருவன். இவன் மீதுதான் தஞ்சைவாணன் கோவை பாடப்பட்டது. இவன் தன்னோடு அப்போருக்குத் தன் இளவரசனான வாணகுலராயனையும் அழைத்துச் சென்றான். அவனது தோள் வலியும், வாள்வலியும் கண்டோரை வியக்க வைத்தது. அவனைப் புகழ்ந்துரைப்பதே இப்பாடற் கல் வெட்டு என்பர் அறிஞர்[6]. இவன் வென்ற வடபுலத்து மன் னர்கள், மீண்டும் இவன் படையெடுத்து வரக்கூடும் என்

5. கல்வெட்டு. ராட்சச. ஆடி. பக். 3.
6. கலைமகள். ஏப்ரல். '56, பக். 412.

றெண்ணி அச்சத்தால் அமைதியிழந்து உறக்கம் கொள்ளா திருக்கின்றனர் என்று குறிப்பிடுகிறது ஒரு பாடல். மற்றொரு பாடல் வீர மாகதன் பொன்பரப்பினான் ராசராசதேவன் என்னும் வாணனைப் பற்றிப் பாடுவது (பு.கோ.க. 678). இவனும் பாண்டியர்களை வென்றான் எனப் புகழப்படுகிறான்.

**கோளிவீரராயன் :** மாற்றரசர் தம் தேவியரின் மங்கல நாணின் தலைவிதியை நிர்ணயிப்பவன் இவனே என்று ஒரு பாடற் கல்வெட்டு கூறுகிறது (பு.கோ.க.679). கோளிவீரராயன் என்று பெயர் பெறும் இவன் பல்லவராயர் மரபைச் சேர்ந்தவன். பல கல்வெட்டுக்களில் பெருங்குளூர் என்பது கோளிப்பதி என்றும் கோளி என்றும் அழைக்கப்படுகிறது.[7] எனவே இப்பாடலில் குறிக்கப்படும் வீரராயன் கோளிப்பகுதியில் ஆண்ட பல்லவராயனே எனக்கொள்வது பொருந்தும்.

7, A General History of the Pudukkottai State. Appendix. P, V.

# பூசைகள், விழாக்கள்

குடுமிநாதர் கோயிலில் சிவ ஆகம முறைப்படி தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறும். அந்த ஆறுகால பூசைவேளையின் போதும் மத்தளம், சங்கம், தாளம், நாதசுரம் போன்ற இசைக்கருவிகள் முழங்கும். தினமும் காலையில் சுமார் 5-30 மணியளவில் திருவனந்தல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். பள்ளியறையில் துயில் கொள்ளும் அண்ணலையும், அம்பாளையும் திருப்பள்ளியெழுச்சி பாடி எழுப்புவர். பால் நிவேதனம் செய்து தீபாராதனை காட்டி, பள்ளியறைச் சொக்கரைச் சுவாமி சந்நிதிக்குக் கொண்டு வருவர். பின் திருமஞ்சனம் புறப்பட்டு, அனைத்து இசைக் கருவிகளும் முழங்கநான்கு திருவீதிகளிலும் வலம் வந்து நந்தி கேஸ்வரர்க்கு அபிசேகம் செய்யப்படும். அடுத்து சிறுகாலைச் சந்தி, விழா பூசை, காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை அர்த்தஜாமம் என்று பூசைகள் நிகழ்கின்றன.

**விழாக்கள்**

ஆண்டின் 12 மாதங்களிலும் இக்கோயிலில் விழாக்கள் உண்டு. இவற்றில் ஆடிப்பூர உற்சவமும், பங்குனி உத்திர விழாவும் இன்றும் சிறப்பான முறையில் நடைபெறுகின்றன. வைகாசி மாத வசந்தவிழாவும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும், அமாவாசையிலும் இரவில் சுவாமி, அம்பாள் வீதியில் எழுந்தருளல் வழக்கம்.

**கோயில் வாகனங்கள்**

வாகனங்கள் யாவும் மரத்தால் ஆனவை. இவை வசந்த மண்டபத்தின் தென்புறம் எப்போதும் வைக்கப்பட்டிருக்கும். ரிசப வாகனம் 3, அன்ன வாகனம் 1, யாளி வாகனம் 2, கைலாச வாகனம் 1, பூதவாகனம் 1, கிளிவாகனம் 1, மயில்வாகனம் 1, சர்ப்பவாகனம் 1, பல்லக்கு2, குதிரை வாகனம் 1, கேடகம் 12, சகடசப்பரம் 2 ஆக மொத்தம் 28 வாகனங்கள் உள்ளன. இம் மண்டபத்தில் இவ்வாகனங்களின் அருகில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் பலவித இசைக் கருவிகள் உள்ளன. அங்குள்ள ஒரு மரப் பெட்டியின் மூடியின் மேல் புறம்,

1. "ஸ்ரீ ஜயந்தவனேசுவரர் 12 கட்டளை மன்மத ஹூ
2. தை மீ 5 உ மணியம் மலையப்பன் ஸதா சேர்வை"

என்று எழுதப்பட்டுள்ளது. மன்மத வருடம் கி.பி. 1895, 1835, 1775 ஆகிய வருடங்களில் வருகிறது.

## கோயில் பணியாட்கள்

கோயிலின் பல பணிகளுக்கும் பல பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கோயில் மானியங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பூஜகர் 3, அத்யானபட்டர் 1, சமையல் பரிசாரகர் 3, திருமாலை கட்டி 1, ஓதுவார் 1, அறைக்காரர் 1, நட்டுவனார் 1, தாளகிரி 1, முட்டு 2, தவளச்சங்கு 1, பாடுவார் 1, நாதசுரம் 3, கவிராயர் 1, தவில் 2, ஒத்து 2, தாளம் 2, கங்காணி 1, சித்துடல் 1, துத்தி 1, நகரா 1, மணி 1, திருவிளக்கேற்றி 1, தளங்கூட்டி 1, நெட்டிவேலை 1, விடுதி 1, நிர்வாகி 7, ஊழிய வலையர் 7, கொல்லர் 10, தச்சர் 10, வண்ணார் 1, நாவிதர் 1, குயவர் 1, வீதி செதுக்கி 1, தேர் ஊழியர் 10, நல்லூர் ஊழியர் 1, கட்டியம் 1, ஸ்ரீ பாதந்தாங்கிகள் 32, அம்பாள் தூக்குவோர் 22, லலிதா சகஸ்ர நாமம் இசைப்போர் 1, திருசதை 1, ஒத்துச் சங்கு 1, வைராவி 1, சம்புரதையர் 1, கொல் நாயுடு 1 என மொத்தம் 145 பேர் இருந்துள்ளனர். இவர்களில் பலர் இப்போது இல்லை.

## விளக்குகளில் எழுத்துக்கள்

இறைவன் சந்நிதியிலும், அகிலாண்டேஸ்வரி அம்மன் சந்நிதியிலும் கருவறை வாயிலில் இரண்டு சரவிளக்குகள் தொங்குகின்றன. அவற்றை இருபுறமும் இரண்டு அன்னங்கள் தாங்குகின்றன. இவ்விளக்குகளின் கீழ்த்தட்டில் இன்னார் கொடுத்தது என்றும், ஒவ்வொரு விளக்குக்கும் ஒவ்வொரு எண்ணும் இட்டு 19 ஆம் நூற்றாண்டுத் தமிழில் எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன. தமிழகக் கோயில்களில் விளக்குகளில் இப்படி எழுத்துக்கள் உள்ளதை அறியலாம். எடுத்துக் காட்டாக இராமேசுவரம் அம்மன் சன்னதிக்கு முன்னால் உள்ள இரண்டு நிலை விளக்குகளில் இப்படி எழுத்துக்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஏழு விளக்குகள் உள்ளன. அவற்றின் எடைகள் தமிழ் எண்களில எழுதப்பட்டுள்ளன.

## சுவாமி கோயில் விளக்கு

அன்னத்தில் "கு அஉ" என்று எழுதப்பட்டுள்ளது. 'கு' என்பது குடுமியான் மலையையும் அஉ = 82 என்றும் கொள்ளலாம். அவ்வன்னம் உள்ள வட்டமான தட்டின் விளம்பில் சுற்றிலுமாக 1. "உ ஸ்வஸ்தஸ்ரீ கலி 4987 பார்த்திப ஹூ வைகாசி மீ க உ ஸ்ரீ அகிலாண்டெசுரி அம்மன் மகாமண்டபத்தில் திருவளருச்சி கால கட்டிளை பித்தளைமகரவிளக்கு". இது கி.பி. 1886 ஐச் சேர்ந்ததாகும். இதில் சூலக்குறி கடைசியாக உள்ளது. 2. "உ மணியம் சேரப் பெருமாள் நல்லூர் சிதம்பரய்யன் குலதிய மலையப்பயனென்று பெயர் விளங்கிய அரிகரய்யன் சதா சேர்வை (உபையம்)" என்று எழுதப்பட்டுள்ளது.

இரண்டாவதாக உள்ள 'சேரப்பெருமாள் நல்லூர் மணியம்' என்று எழுதப்பட்ட விளக்கு கொடை கொடுத்தவரின் பெயரைத் தெளிவாகக் கூறுகிறது. இன்று வெள்ளாற்றின் தென்கரையில் உள்ள சேரனூர்தான் சேரப்பெருமாள் நல்லூர் என அன்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

## அம்மன் சன்னதி விளக்குகள்

அம்மன் சன்னதி விளக்குகளில் தென்வரிசையின் அடித்தட்டில், விளிம்பைச் சுற்றிலும்,

"குஅ கலி 4980 சாதாருண ஹூ அற்பிசி மீ 3 உ ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மன் திருவருச்சிக் காலக் கட்டிளை கெருப்ப கிரகம்" என்று எழுதப்பட்டுள்ளது. தட்டின் மேற்பரப்பில் சில எண்களின் குறியீடுகள் எழுதப்பட்டுள்ளன. இதன் பொருளை அறிய இயலவில்லை. இவ்விளக்கில் அன்னத்தில் உ' என்ற எண் உள்ளது. விளக்குகளில் சஎ, சங, எ, சக, ஙக, சரு, ௰க, ஙஎ என்ற எண்கள் உள்ளன.

வடக்கு வரிசை விளக்கின் அடித்தட்டின் விளிம்பில் சுற்றிலும். "உ மணியம் பாவயல் மலையப்பன் சதா சேர்வை" என்றும், முன்னது போலவே ஒவ்வொன்றிலும் பல்வேறு எண்கள் இடப்பட்டும் உள்ளன.

### தேர்கள்

இக்கோயிலுக்கென இரண்டு மரத்தேர்கள் உள்ளன. ஒன்று பெரியது; மற்றொன்று சிறியது. இரண்டுமே இன்று பழுது பட்டுப் பயன்படாத நிலையில் உள்ளன. அவற்றில் பல அழகான மரச்சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன. இதில் சிறிய தேர் செய்து சுமார் 40 ஆண்டுகள் ஆகின்றன என் றும், திருவிடைமருதூர் ஆசாரிகளால் செய்யப்பட்டது என் றும் கூறுகின்றனர். பெரிய தேர் செய்த காலம் தெரியவில்லை. பெரியதேர், சிறிய தேருக்கும் கொஞ்சம் காலத்தால் முற்பட்ட தாக இருக்கும்.

# ஊரைச்சுற்றி....

குடுமியான்மலையில் சமணர் குகைகள், படுக்கைகள், அண்ணன் கிணறு, தம்பிக் கிணறு, செங்கழுநீர் ஓடை, அறுபத்து மூவர் சிற்பங்கள், சில மண்டபங்கள், தீர்த் தங்கள் போன்ற சில வரலாற்றுத் தொடர்புடைய இடங் களைப் பற்றிய தொகுப்புரையாக இத்தலைப்பின் கீழ் காண லாம்.

**சமணர் படுக்கைகள்**

மலைமேலுள்ள முருகன் கோவிலுக்குச் செல்லும் மலைப் பாதை தென்மேற்குச் சரிவில் உள்ளது. அதன் வழியாகச் சென்றால் சற்று உயரத்தில் சமணர் பாழிகள் உள்ளன. இப்படுக்கைகளிலோ, குகைகளிலோ எழுத்துக்கள் ஏதும் இல்லை. எனினும் இவை சமணர்படுக்கைகளே என்பதில் ஐயம் இல்லை.

**தம்பிக்கிணறு:** மலைக்குத் தென்மேற்கேயுள்ள ஒரு சதுரமான கிணறு இது. இதன் கிழக்குச் சுவரில் கிழக்கு நோக்கியே ஒரு வழியுள்ளது. இதில் படிக்கட்டுகள் கட்டி யுள்ளனர். இப்போது இவ்வழி அடைக்கப்பட்டுவிட்டது. இக் கிணறு இன்று குடிநீர்க் கிணறாகப் பயன்படுகிறது. பெயர்க் காரணம் தெரியவில்லை. உள் புறம் மேற்குச் சுவரில் ஒரு கல்வெட்டு 17ம் நூற்றாண்டில் சிவந்தெழுந்த பல்லவராயன் காலத்தில் திருச்சி சிவனாண்டை செட்டியார், செவந்தி நாத செட்டி வெள்ளய்யப்பன் கல் கட்டிடம் கட்டி பதினெட்டு படி யமைத்தார் எனக்கூறுகிறது (பு. கோ. க. 968).

**செங்கழுநீர் ஓடை**

மலைக்கு வடகிழக்கே உள்ளது. அகலமான குளம். மக்கள் செங்கழனி ஓடை, செங்கனோடை என்றெல்லாம் அழைக்கின்றனர். அல்லி மலர்கள் நிறைய மலர்ந்துள்ளன. கிழக்கில் உள்ள படித்துறை ஒன்றில் ஒரு கல்லில் கல்வெட்டு

ஒன்று உள்ளது. இக் கல்வெட்டு இக்குளத்திற்கு லிங்கப்பன் சேர்வைகார் மகன் ரகுநாத சேர்வைகார் இதற்குப் படிகள் கட்டினான் என்று கூறுகிறது (பு. கோ. க. 956). இவன் கி. பி. 1773ல் தொண்டைமானிடம் படைத் தலைவனாக இருந்தான் என்பதும் இவன் தந்தையே இக்குளத்தை வெட்டினார் என்றும் வரலாறு கூறுகிறது.[1]

**அறுபத்து மூவர்:** குகைக் கோயில் உள்ள மலைப்பாறையில் அதற்கு மேலாக அதிக உயரத்தில் மிகவும் அபாயகரமான சரிவில் இறைவன் ரிசாபாரூடராய்க் காட்சியளிக்க இருபுறமும் 63 நாயன் மார்கள் நின்று வணங்குகின்றனர். ரிசபாரூடருக்கு மேல் திருவாசி செதுக்கப்பட்டுள்ளது. இவ் விடத்திற்குப் போவதற்கு ஒடுக்கமான படிகள் வெட்டப்பட்டுள்ளன. அங்கு கல்வெட்டுகள் ஏதும் இல்லை. இவை பிற்காலப் பாண்டியர் படைப்புகளாகக் கருதலாம். இமயத்தில் இறைவன் போல இச்சிற்பங்கள் காட்சி தருகின்றன. வெள்ளாற்றங்கரை மண்டபம் ஊருக்குத் தெற்கே சுமார் ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு தைப்பூசம் சமயத்தில் குடுமிநாதர் வந்து தீர்த்தம் ஆடுவார். அதற்கு வசதியாக இம்மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இது கி பி. 17,18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் கால மண்டபமாகும்.

**ஆண்டப்பன் ஊரணி**

குடுமியான்மலை புதுக்கோட்டை சாலையில் ஊரை ஒட்டி ஒருபர்லாங் தூரத்தில் சாலைக்கு வடக்காக ஒரு பழைய இடிபாடுற்ற தெப்பக்குளம் உள்ளது. தொண்டைமான்கள் காலத்தில் ஆண்டக்குளம் ஆண்டப்ப மன்னவேளார் என்று ஒருவர் இருந்துள்ளார். இவர் பெயரில் ஆண்டப்ப மன்ன வேளார் குறவஞ்சியும் உள்ளது.[2] ஒருவேளை இவராலோ அல்லது இவர்காலத்தில் கட்டியதாலோ இப்பெயர் ஏற்பட்டதுபோலும். குளத்தின் மைய மண்டபத்தில் இரண்டு நாயக்கர் தலைவர்களின் உருவச்சிலைகள் உள்ளன. மண்டபம் உயரமானது.

1. A General History of the Pudukottai State. P. 175.
2. Ibid, P. 331.

**அரண்மனைக் கொல்லை:** குடுமிநாதர் கோவிலுக்கு எதிரில் அலுப்புமண்டபத்தை ஒட்டி தெற்காக உள்ள சிறிய வெளியிடம் அரண்மனைக் கொல்லை எனப் பெயர் பெறுகிறது. இவ்விடத்தில் தொண்டைமான் அரசர்களின் அரண்மனை இருந்ததென்றும் சுமார் 100 வருடங்களுக்கு முன்தான் அது முற்றாகச் சிதைந்தது என்றும் கூறுவர். அக்காரணத்தாலேயே இது இன்றும் அரண்மனைக் கொல்லை என்று அழைக்கப்படுகிறது.

**வைரவன் முடுக்கு** மூலைகளையும், திருப்பங்களையும் கிராம மக்கள் முடுக்கு என்று அழைப்பர். கோயில் உள்ள தெருவின் வடக்குத் திசையில் தெரு கிழக்காகத் திரும்புகிறது. அவ்விடமே வைரவன் முடுக்கு எனப்படுகிறது. அங்கு முன்பு வைரவர் கோயில் சிறிய அளவில் இருந்தது என்றும், அது சிதைந்து விட்ட காரணத்தால் அக்கோயில் சிலையை மட்டும் எடுத்து அகிலாண்டேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வைத்தனர் என்றும் மக்கள் கூறுகின்றனர்.

**புள்ளத்தோப்பு** ஊரின்தெற்கேயுள்ள இச்சிறு நந்தவனம் புள்ளத்தோப்பு எனப்படுகிறது. இதுவே பல கல்வெட்டுகளிலும் கூறப்படும் திருவேட்டைத் தோப்பாக இருக்குமோ என ஐயம் எழுகிறது.

**ஊர் மக்கள்:** குடுமியான் மலையில் கோயிலைச் சுற்றியும், மலையைச் சுற்றியும் முன்பு வீடுகள் இருந்தன. இன்று மலையின் மேற்குப் பகுதியில் வீடுகளே இல்லை. முத்துராஜாக்களும், இசை வேளாளர்களும், மற்றும் முஸ்லிம்கள், வேளார்கள், பள்ளர், பறையர், வகுப்பினரும் வாழ்கின்றனர். முஸ்லிம்களைத்தவிர மற்ற இனத்தவர் யாவரும் ஏதாவது ஒருவகையில் கோயிலோடு தொடர்பு கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களாகவே உள்ளனர்.

பெரும்பாலான மக்கள் அடிக்கடி "கோயில் வழங்கினால் குடிவழங்கும்" என்ற பழமொழியைக் கூறிக் கொண்டு தங்கள் ஊர்கோயிலும் முன்பு போல் வழங்கவில்லை; தங்கள் வாழ்வும் துலங்கவில்லை என்று ஆதங்கப்படுகிறார்கள்.

# சிறு தெய்வங்கள்

பெரிய அளவில் கோயில் எடுத்துத் தெய்வங்களை வழிபட்டு வந்தபோதிலும், நம்நாட்டு மக்கள் தங்கள் சிற்றூர்களில் சிறுசிறு தெய்வங்களை வைத்து வழிபடுவதையும் விட்டு விடவில்லை. அவர்கள் பல சிறு தெய்வங்களைத் தங்கள் குலங்காக்கும் காவல் தெய்வங்களாகக் கொண்டுள்ளனர். இவற்றின் சீற்றத்தால் தம் வாழ்வுக்கு சோதனைகள் நேருகின்றன என்று எண்ணி, அவற்றிற்கு உரியமுறையில் வழிபாடுகள் செய்தும் வருகின்றனர். இத்தகு சிறு தெய்வங்களுக்குத் தாங்கள் உண்ணும் புலால் போன்ற உணவுகளையும், மதுவையும் படைத்து வழிபடுகின்றனர். இந்த அடிப்படையில் குடுமியான் மலையிலும் பிடாரி, தேரடிக்கருப்பன், ஐயனார், முன்னடியான், அங்காளம்மன், கஸ்தூரி வாசர் போன்ற சிறு தெய்வங்களை மக்கள் வழிபடுகின்றனர்.

**பிடாரியம்மன் கோயில்:** ஊருக்கு வடக்கே மலைச்சரிவில் பாறையின் மீது கட்டப்பட்ட சிறிய கற்கோயில் இது. ஒரு கருவறை, ஒரு அர்த்த மண்டபம், ஒரு வெளி முன்மண்டபம் இவையே உள்ளன. கருவறையில் அம்மன் அமர்ந்த நிலையில் உள்ளாள்.

சேரிவாழ் மக்கள் இப்பிடாரி அன்னையின் கோலத்தைப் பாட்டாக இசைக்கின்றனர்.

"சொளு சொளுனு மழை பொழிய
துப்பட்டி தண்ணி அலை மோத

சொகுசு காரியாம் நல்லபிடாரி
தோகை மயிலேறி வாராளாம்.

ஓட்டற தட்டி ஒழுங்கலிட்டு
ஓடுற தண்ணிய காவல் வச்சி

சட்டஞ் செலுத்திய பிடாரி ஆயி
சவாரி வாரத பாருங்களே"

**அங்காளம்மன் :** ஊரின் கிழக்கே ஊரை ஒட்டியே அமைந்துள்ளது இக்கோயில். செங்கற்களால் சற்றுப் பெரிய அளவில் கட்டப்பட்டிருந்த இக்கோயில் இன்று பெரும்பகுதி சிதைந்து இடிபாடுற்று கிடக்கிறது. மலையாளத்துச் சின்னக் கருப்பன், பெரிய கருப்பன் சிலைகளும், சில சுடுமண் பொம் மைகளும், மசான புத்திரன், காட்டேரி, பேச்சியம்மன், மதுரை வீரன், பொம்மியம்மா, வெள்ளையம்மா, வீரபத்திரர், இரு ளப்பன், ராஜேஸ்வரி சிலைகளும் இருக்கின்றன.

இக்கோயிலின் பூசாரி வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர். மார்கழி முப்பது நாட்களும் பூசை நிகழும். திருச்சி, மதுரை, திண்டுக்கல், பெரியகுளம், சினயகுளம் (கீரனூர் அருகில்), மேலூர், துவரங்குறிச்சி, பாலார் சிகம்பட்டி, சொரக்காபட்டி முதலிய ஊர் மக்கள், இங்குவந்து மாசி சிவன்ராத்திரி விழா எடுக்கின்றனர். ஆண்டப்பன் ஊரணியில் 'சூலாடுகுத்தும்' பூசையுடன் விழா முடிவடைகிறது.

**முன்னடியான் :** ஊரின் மத்தியில் கடைத்தெருவில் ஒருசிறு பீடம் கட்டி அதில் சுட்டமண் பொம்மையை வைத்து முன்னடியான் என்று பெயரிட்டு வணங்குகின்றனர். தேரடிக் கருப்பன் விழாவின் போது இதற்கும் பூசை நடக்கும். மக்கள் இத்தெய்வத்தின்மீது பாடல்கள் பாடுகின்றனர்.

"கருப்புக் குதிரையாம் கண்ணாடி மட்டமாம்
கண்ணாங்குடிசிலை கட்டி நிக்கும்
ஏறியடிப்பாரும் முன்னடியான்
எலைகுலுங்காத நேரத்திலே
சித்திர வித்தார கண்டாங்கி சிறு
செப்புக் கொடத்திலே போட்டடச்சி
எடுத்துடுத்துவா கொன்னையூரம்மா
ஏகாந்தம் போடுவான் முன்னடியான்"

என்ற பாடல்களில் முன்னடியான் வாழ்கிறான்.

## கஸ்தூரி வாசகர்

ஊருக்குத் தெற்கே இருக்கிறது இக் கோயில். கருவறை யும், நீண்ட முன் மண்டபமும் உள்ளன. கருவறையில் பிடி

மண்ணை வைத்து வணங்குகின்றனர். பிடிமண்ணின் இருபுறங்களிலும் சங்கு சக்கரம் ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

வைத்தூர், வளநாடு, இடையப்பட்டி முதலிய ஊர்களிலிருந்து கௌரா நாயுடு வகுப்பினர் வந்து வணங்குகின்றனர். இவர்கள் அனைவரும் ஒவ்வொரு ஆண்டும் ஆடி பத்தாம் நாள் இக்கோயிலில் கூடுகின்றனர்.

## தேரடிக் கருப்பன்

ஊருக்குக் கிழக்கே அன்னவாசலுக்குப்போகும் சாலையில் சுமார் 1 கி.மீ. தொலைவில் சாலைக்கு வடக்கே இருக்கிறது இக்கோயில். கட்டிட அமைப்பு ஏதும் இல்லை. சிறிதும் பெரிதுமாக நான்கு மரங்கள் அருகில் நிற்கின்றன. பெரிதும் சிறிதுமாக நூற்றுக்கணக்கான மண்குதிரைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கருப்பன் கழுத்தில் மொந்தையான பூமாலை கல்லிலேயே செதுக்கப்பட்டுள்ளது.

குதிரை வைக்கும் விழா ஒவ்வொரு ஆண்டும் ஆடி அல்லது ஆவணி மாதத்தில் நிகழும். குதிரையை இவ்வூர் வேளார்கள் செய்வர். இவர்களுக்கு இதற்கென மானியம் உண்டு. குதிரையின் கண் திறப்பு என்பது இன்னொரு நாள் நிகழும். கோழி பலி கொடுத்து, கண் திறப்பர். அன்று வள்ளித் திருமணம் அல்லது பவளக்கொடி போன்ற நாடகம் நடக்கும்.

சேரிவாழ் மக்கள் தாங்கள் பாடும் நாட்டுப் பாடல்களில் இக்கருப்பனைப்பற்றியும் பாடிமகிழ்கின்றனர்.

"முத்து குத்திய பாறையிலே நல்ல
முப்பது பண்ணி யடைகாக்க

தப்புன பண்ணியச் சரியாக் குத்துர
சாமிகருப் பண்ணன் வாராரே

வெள்ளக் குதிரையா வெடிவாலு மட்டமாம்
விண்ணிச் செடியிலே கட்டிநிக்கும்

ஏறியடிப்பானாம் தேரடிக் கருப்பரும்
எரனுத்தி முன்னுத்திக் காததூரம்"

# பாமரர் பாடல்கள்

"தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே"

என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா(233) நமக்கு பாமரர் பாடலுக்கு வழி காட்டுகிறது. தெரிந்த மொழி என்பதை சேரிமொழி என்னும் பாடபேதமாகக் கூறுவர். எட்டு வகை வனப்புகளுள் ஒன்றான புலன் என்பது நாட்டுப்புறப் பாடல்களுக்கு ஒத்த இலக்கணத்தைக் கொண்டது என்று இதன் மூலம் நாம் அறிகிறோம்.

**குடுமிநாதர் பாடல்**

தம் ஊரின் சிறப்பான கோவில் உறை இறைவனைப் பாடும் ஒரு பாடற் பகுதி வருமாறு:

"சுரைய சுரைய பாருங்களே நல்லா
    சுத்திப் படந்ததப் பாருங்களே
சொகுசுக் காரரு குடுமிநாதரு
    துப்பட்டி மின்னலப் பாருங்களே"

இதன் மூலம் இறைவனுக்கு மக்கள் வழங்கும் பெயரையும், 'சொகுசு' என்னும் அழகுத் தமிழ்ச் சொல் இப்பகுதியில் சாதாரண மக்களிடம் வழங்கி வருவதையும் அறியலாம்.

**அகிலாண்டேஸ்வரி பாடல்**

அருள் சுரக்கும் இவ்வன்னையைப் புகழ்ந்து சேரிவாழ்ப் பெண்கள் எண்ணற்ற பாடல்கள் பாடுகின்றனர்.

"மஞ்சச் சீலையாம் மாரப்பா(ம்)
    மடிநெறஞ்ச தாளம் பூவா(ம்)
கொண்டபெருத்த அகிலாண்டேஸ்வரி
    கோதி முடிவாளே கொண்டையிலே"

"திண்ணய திண்ணய பாருங்களே(ன்)
தெருவு திண்ணய பாருங்களே
கோலமெழுதிய அகிலாண்டேஸ்வரி
கொலுவுத் திண்ணையப்பாருங்களே."

"ஈஞ்சு முத்தி இறகு முத்தி
ஈனாத வாழை குறுத்தோடி
பாஞ்சு முத்திய அகிலாண் டேஸ்வரி
பல்லு வரிசையப் பாருங்களே(ன்)"

"அஞ்சு பணுக்கு மிஞ்சு பண்ணி
ஆயிரம் பொன்னுக்கு அரும் பேத்தி
காலுலெ போட்டா கனக்கு துன்னாளே
காரியக்காரி அகிலாண்டேஸ்வரி"

என்றெல்லாம் அவர்கள் தேவியைப் பாடுகின்றனர்.

இவ்வூரில் உள்ள குளம், தோப்பு, ஊரணி போன்றவற்றின் மீதுள்ள பாடல்களிலும் அம்மனைப் போற்றுகின்றனர்.

"ஆளளகாம் நெல்லிக்குளம் நல்ல
அரசளகாம் செங்களோடை
பூவளகாம் புள்ளத் தோப்பு நல்லா
பொருந்தியிருக்கு அகிலாண்டாளுக்கு"

## கும்மிப்பாட்டு

இதோ குடுமியான்மலை தெய்வத்தையே நம்பி வாழும் மக்களின் கும்மிப் பாடல் :

"தெருவக் கூட்டிமணல் பரப்பித்
தென்னம்பூக் கொண்டு பூச்சூடி
தெருவிருக்கிற சிங்காதனத் தத்தான்
திரும்பிப் பாரடி மாரியம்மா
வாசலக் கூட்டிமணல் பரப்பி
வாழப்பூ கொண்டு பூச்சூடி

வலவிருக்கிற சிங்காதனத் தத்தான்
வந்து பாரடி மாரியம்மா
மின்னலெ மின்னலெ பாருங்களே
மூக்குத்தி மின்னலெ பாருங்களே
அம்மா இருக்கிற சிம்மாசனத்துலே
அட்டிய மின்னலெ பாருங்களே''

என்று கும்மி கொட்டி அன்னையின் அலங்காரம் கண்டு பாடுகின்றனர். விழாக் காலங்களில் புதுமணல் பரப்பி வீட்டையும் தெருவையும் அலங்கரிக்கும் வழக்கம் இதன் மூலம் அறியப்படுகிறது. சிலப்பதிகாரம், 'இந்திர விழாவின் போது புதுமணல் பரப்பப்படுவதாகக் கூறும் மரபு அழியாமல் தொடர்கிறது இன்னும்.

## ஓயில் பாட்டு

ஒரே மாதிரியான ஆடை அணிந்து, கைகளில் கைக்குட்டை பிடித்து, கால்களில் சதங்கை கட்டி, அடி தவறாமல் சீராக ஆடும் ஆட்டம் ஓயில் எனப்படும். இது ஆடவர்க்கே உரியது. இந்த ஆட்டத்தின்போது பாடும் பாடல்களில்புராண, இதிகாசக் கதைகளே கருவாக அமைந்திருக்கும். இவ்வாட்டத்தின் இலக்கணத்தையே ஒரு பாடல் கூறுகிறது.

"அரியோம் நன்றாக குருவாழ்க குருவேதுணை
அரியென்ற அச்சாரம் நான் மறவேன்
குருவே வணங்கி அடிபணிந்தோம்
கும்பிட்டு அன்பாச் சிலாம் இடுங்கோ''

என்று ஆசிரியனை வணங்கி ஆட்டம் தொடங்குகிறது.

"மேலோட மேலு ஒரசிடாமெ
வேறுவத் தண்ணியுஞ் செதறிடாமெ
ஆளோட ஆளு ஒரசிடாமெ
ஆளுக்கு ஒருமொழந் தள்ளி நின்னு
காலோட காலு ஒரசிடாமெ
கைப்பிடி லேஞ்சி தவறிடாமெ
முப்பத்து முக்கோடி தேவர்கள் பாத்திட
மூவர்கள் ஆனந்தம் பாடிடவே''

என்று வரும் வரிகள் மூலம் இவ்வாட்டத்தின்போது ஆடுவோர் எவ்விதம் அணிவகுத்து நிற்கவேண்டும் என்ற நெறிமுறை புலனாகின்றது.

வைகையில் அழகர் இறங்குவது, தென்பாண்டி மண்டல மக்களின் சிறப்புமிக்க விழாவாகும். அந்நிகழ்ச்சியை ஒயில் பாட்டாகப் பாடுகின்றனர்.

"பந்தயக் குதிரை பளபளங்க நல்ல
பாங்கான தல்லா குளந்தன்னிலே
ஆத்துக்குள்ளேபோயி மாயன் எறங்கவும்
ஆயிரம் பேர்கள் கைதட்டினா"

---

பாடல் பாடி உதவிய தாய்மார்கள்: 1. நீலியம்மாள் 3. கண்ணாத்தாள். 3. தெய்வயானை. 4. அகிலாண்டம்.

# கல்வெட்டுகள்

**மேலைக் கோயிலின் கீழ் சுவரில் வாசற்படிக்கு இடதுபுறமுள்ள கல்வெட்டு** *(பு. கோ. க. 78):*

1. *ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கொப்பரகேசரி பன் மற்கு யாண்டு 15 ஆ*
2. *வதுகுன்றியூர் நாட்டுத் திருநலக்குன்றத்து திருமூலட்டானப் பெரு*
3. *மானடிகளுக்கு பிள்ளையார் கோதண்ட மடைப்பள்ளிப் பெண்டிர்*
4. *பன்றியூர் நாட்டு மங்கல வாசல் குடியன் காடுகான் நொந்தா விளக்*
5. *கொன்றுக்கு வைத்த துளைப்பொன் எழு கழஞ்சரை = பிள்ளையார் கோதண்டர்க்கு சாந்திமக்கிற முனைப்பாடி*
6. *அதியரைமங்கலத்து ஓலை வீரட்டன் திருமெற்றளிப் பெருமானடிகளுக்குப் பகல் விளக்கொன்றுக்கு வைத்த துளை*
7. *ப்பொன் 3 ம் ॥ பன்மாஹேஸ்வர ரக்ஷை*

**குடைவரைக் கோயில் வடதூண் மேல்முகத்திலுள்ள கல்வெட்டு** *(பு. கோ. க. 80):*

1. *ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்கு யா*
2. *ண்டு ௰௫ ஆவது குன்றியூர் நாட்டு தி*
3. *ருநலக் குன்றத்து திருமூல*
4. *ட்டானத்துப் பெருமானடிகளுக்கு*
5. *மதிரை கொண்ட பரகேசரி பன்*
6. *மராயின சோழப் பெருமானடிக*
7. *ள் ஸ்ரீ பிராந்தகர் மகன் ஸ்ரீ கோ*
8. *தண்டராமன் நொந்தாவிளக்கிர*
9. *ண்டுக்கு வைத்த துளைப்பொன்*
10. *15 ம் ॥ இது புன்னங்குடியூரார் கொண்டு*

**மேலைக் கோயிலின் முன் மண்டபத்து கீழ்ப்புறம் சுவரில் உள்ள கல்வெட்டு** *(பு. கோ. க. 125):*

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாதுவிளங்க ஜயமாது விரும்ப நில மகள் நிலவ மலர்
2. மகள்புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீனவர் நிலை கெட வில்
3. லவர் குலைதர ஏனைமன்னவரி ரியலுற் றிழிதர திக்கனைத் துன் தன்
4. சக்கர நடாத்தி வீரஸிம்ஹாஸநத்து அவனி முழுதுடை யாளோடும்
5. வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பன்மரான சக்கரவத்தி கள் ஸ்ரீகுலோ
6. த்துங்கசோழ தேவர்க்கு யாண்டு 36 ஆவது இரட்டப் பாடிகொண்ட சோழ
7. வளநாட்டு நாட்டோம் திருநலக்குன்றமுடைய மஹா தேவர்க்கு இந்நாட்டு
8. ப்ரஹ்மதேயங் காப்புக்குடி சிராஞ்சிமலை இனிய நின்றான் ஸஹஸ்ரனும் ே
9. வதைகொம்புறத்து அருளாளஸ்ஹஸரனும் இவ்விருவரும் இந்நாட்டில்
10. வந்திறங்கின வெற்றிலைக்கு தரகு கொண்டு முப்பத் தாறாவது முதல் இ
11. தவற்கு அடைக்காயமுதுக்கு ஆட்டு முப்பதினாயிரம் பாக்கும் வெற்றிலைக்
12. கட்டு எழுநூற்றைம்பதும் இவிருவரும் இவர்கள் வர்க்கத் தாருமேசந்திராதித்தவற்
13. இடக் கடவர்களாகவும் ॥ இதுக்கழிவு செய்த...செய்தா
14. னாகவும் இது நாட்டோமும் மூன்றுபடை பொற் கோ யிலாரும் இந்நா
15. ட்டுப்படை பழியிலி ஐந்நூற்றுவருமே இது நிலை நிறுத்தக்கடவோமா
16. கக் கல்வெட்டுவிச்சோம் ॥ இதுக்கஹிதம் நினைப்பான் வழியறுவான் ॥ இதுபந்மாே

17. ஹஸ்வரரகெ்ஷ ॥ முன்பு கல்வெட்டின திருமலையும் அரு ளாளனும் இவ்விருவ

18. ரும் செம்பாகமும் தாமோதிரன் ஸ்ரீகிருஷ்ணான சிறுத் தொண்டநம்பி செம்பாகமு

19. ங்கொண்டு திருநலக் குன்றத்திலே யிருந்து பறிமாறித் திருநலக்குன்றமுடையார்க்கு

20. இப்படியாலுள்ளது செலுத்தக் கடவர்களாகவும் இதழிவு செய்வார்விரைக்க

21. இதுபந்மாஹேஸ்வரரக்ஷை உ இக்கல்வெட்டுப்படியுள்ள அடைக்காயமுதும் இ

22. லையமுதும் இட...ர் திருமெய்ப் பூச்சுக்கு 48 ஆவது முதல் திங்களஞ்சு திரமமாக

23. ஆட்டறுபது திரமமும் இறுக்கக் கடவார்களாகவும் கல்வெட்டு வித்தோம் நாட்டோ

24. மும் கைக்கொள ரோமும் பழியிலி ஐந்நூற்றுவரோமும் இதுக்கு அழிவு செய்வான்.

25. வற்க மறுவான் ॥ இது பன்மாஹேஸ்வரரகெ்ஷ.

**குடைவரைக் கோயிலின் தென்தூண்** *(பு.கோ.க. 238)*

1. (ஸ்வஸ்திஸ்ரீ) கோச்சடைய
2. மாற(ற்)கு யாண்டு (உ இத) னெதி
3. ராண்டி னெதிராண்டு குன்றியூ
4. ர் நாட்டுத் தேவதானந் திருநலக்
5. குன்றத்து திருமூலட்டானத்து மாதேவர்
6. க்கு பராந்தக அதளையூர் நாடா(ள்)வானாயின
7. கடம்பனெட்டி நொந்தா விளக்கொன்றுக்கு
8. வைத்த துளைப்பொன் $7\frac{1}{2}$ எழுக(ழ)ஞ்ச
9. ரை புள்ளங்குடி யூரு(ரா)ரும் ரகெ்ஷ.

**சிகாநாதசாமி கோயில் மடைப்பள்ளி கிழக்குச்சுவர் கல்வெட்டு** *(பு.கோ.க. 255)*

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோழநாடு கொண்ட சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 4-வது

2. இத்திருக்கோயில் இரண்டாம் பிரகாரத்து திருவாயில் இடைஞ்சலாயிருக்கையாலே ஆற்றூருடையா
3. ன் பொன்னன் காங்கேயராயர் இதுவாங்கி திருமாளிகையும், திருவாயிலும் பெருக்கச் செய்ய இதில் கல்வெட்டு
4. படி எடுத்து படி எடுத்தபடியே வெட்டுகவென்று உடையார் காங்கேயராயர் அருளிச்செய்ய வெட்டினபடி யாவது கோ
5. ப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு 33-வது திருநலக்குன்றத்துப் பரமேசுரர்க்கு பராந்தகன் குஞ்சர மல்லனான வீர சோழ இளங்கோ
6. வேளானேன் ஈழமெறியப் போகின்றேன் கீழ்மணநல்லூரில் கொடுத்த நிலம் வேலிச் செய்யும் திருவின்தினை செயமனா வே
7. யாகியர்க்கும் திருவமுதுக்குமாக இந்நிலஞ் செய்து கொடுத்தேன் பராந்தகன் குஞ்சரமல்லனான வீரசோழஇளங்கோ வேளா
8. னேன் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை ‖.

**மேலைக் கோயில் மலை மங்கை அம்மன் கோயில் தென் சுவர்க் கல்வெட்டு** *(பு.கோ.க. 366).*

14. ......ஸ்வஸ்திஸ்ரீ கோ
15. ச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சிரி வீரபாண்டிய தேவற்கு யாண்டு 11 வது நாள் 173 னால் கோநாட்டுக் காரையூரில் எழுந்தருளியிருக்க இந்நாட்டுத் திருநலக்குன்றத்து உடையார் திருநலக்குன்
16. ற முடைய நாயனார் கோயில் தானத்தார் கண்டு இக்கோயிற் திருமேற்றளியுடைய மகாதேவற்கு இவ்வூர் தேவரடியாரில் துக்கையாண்டி மகள் நாச்சி எழுந்தருளுவித்த திருக்காமக் கோட்டத்து நாச்சியார் அருவுடை
17. மலை மங்கையர்க்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் வேண்டும் நிமந்தங்களுக்கும் உடலாக இந்நாட்டு மேல்மண நல்லூர் நான்கெல்லை உள்ளகப்பட்ட குளமும் குளப்பரிப்பும் நத்தமும் நத்தப்பாழும்

* 1-14. வரிகளில் "திருமகள் வளர்முலை திருமார்பு" என்ற மெய்க்கீர்த்தி உள்ளது.

18. நன்செய் புன்செய் தோட்டமும் உட்பட்ட நிலத்தில் இவ்வூர் திருவிக்ரம சோளீஸ்வரமுடைய நாயனார்க்கு குடிக்காடு அகவயல் உட்பட நிலம் அரையும் திருநலக் குன்றமுடைய நாயனார் கோயில் நாற்பத்தெண்ணாயி

19. ரவன் திருமடத்துக்கு மடப்புறம் நிலம் அரையும் ஆக நிலம் வேலி நீக்கி நிலத்தில் பழந்தேவதானம் நீக்கி நீக்கி உள்ள நிலத்துக்கடமை, கற்பூரவிலை, காரிய வாராட்சி, பஞ்சுபீலி, சந்து விக்ரஹப்பேறு, தறிஇறை, தட்டார்ப் பாட்டம் இன

20. வரி, ஈழம், புன்செய்,செக்கிறை, பொன்வரி, இலாஞ்சினைப் பேறு, அந்தராயம், அகர வினியோகம், அச்சுவரி, வெட் டிப் பாட்டம், இடைவரி மற்றும் எப்பேர்ப்பட்டனவும் உட்படப் பதினொன்றாவது

21. முதல் தேவதான இறையிலியாக இடப்பெற பெறு மென்று காலிங்கராயர் நமக்குச் சொன்னமையால் இத் திருநலக்குன்றமுடைய நாயனார் கோயில் திருமேலத் தளியுடைய மகா தேவர்க்கு இவூர்......

**குடுமிநாதர் கோயில் கோபுரவாசல் வலதுபுறச் சுவர்க் கல்வெட்டு** *(பு.கோ.க. 601).*

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 2-ஆவது கோனாடான கடலடையா திலங்கை கொண்ட சோளவளநாட்டு நாடுகள் நகரங்கள் கிராமங்களோம் உடையார் திருநலக் குன்றமுடைய நாயனார் கோயிற் காங்கேயராயன் திருமண்

2. டபத்து நிறைவற நிறைந்து குறைவறக் கூடி எங்களில் அமைந்த பிடிபாடு இப்படியாவது உடையார் திருநலக் குன்றமுடைய நாயனார் சீபண்டாரம் திருவாபரண மூலபண்டாரத்தை இக்கோயிற் சிவபிராமணர் களவிலே எடுத்துக்கொள்ள இது நாடாகக் கூட இருந்து இச்சிவ பிராம

3. ணரை அழைத்து இந்நடபடி யென்நென்று கேட்ட விடத்துக் குன்றன் செருந்திவனப் பெருமாள் ஆன எதிரிலி சோழபட்டன் சொன்னபடி இவ்வூர்க் கற்றச்

சனும் நானுமாக அறுபது பொன் எடுத்துக் கூறிட்டுக் கொண்டேன் என்று சொல்ல மற்றுள்ள சிவபிரா மணரை

4. அழைத்துக் கேட்டவிடத்து நாங்கள் இவை ஒன்றும் அறிந்திலோம் என்றார்கள். என்றபின் குன்றன் செருந்தி நான் எடுத்த அறுபது பொன்னும் ஒழிய நீக்கியுள்ள பொன் இவர்கள் எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்லுகையில்

5. அங்ஙனையாக நாங்கள் போய் வார்மனுகுறுச்சியிலே சாமந்தனார் திருமுன்பே தரிமாஜனத்து பட்டர்கள் பக்கலே கேட்டு அங்கு விதித்தபடி பிரத்தயம் பண்ணுங் கொள் என்று விட்டோம். இப்போ உடையார் திரு அகத்திசுர முடையார் திருக்கோ

6. யிலே சாமந்தனார் திருமுன்பாகவும் திருவேண்பல் திருக் கூட்டத்து இறங்கறமிட்டாரும் விராகிகளு முன்னிலை யாகவும் கொழுஉருவினவிடத்து குன்றன் பங்கனும் குன்றன் புற்றிடங் கொண்டானும் பெரியான் தேவனும் ஒன்றாயிரம் செருந்தியும் ஆக இவர்கள் கை வேகையில் குன்றன் செ

7. ருந்தி நானும் எடுத்தேன் பங்கனும் நானும் அறிவேன் என்ற படியாலேய் செருந்தி சத்தியம் செய்ய வேண்டிய தில்லை இப்படி இக்கோயில் சிவபிராமணரில் கள்ள ரானவர்களை மார்க்கத்துக்கு கடவார் சிவதுரோகிகளைச் செய்யு முறைகளிலே செய்யவு நிலையிட்டு மற்றுள்ள சிவ

8. ப்ராமணருங் காவல் சோர்வுக் குடல்படுகையால் இவர் கள் பற்றான இலுப்பைக் குடிக் குளங்கள் இரண்டும் வயலும் பெருநான் கெல்லை யுள்ளகப்பட்ட மேல்நோக் கிய மரமுங் கீழ்நோக்கின கிணறும் மற்றும் எப்பேர்ப் பட்டனவும் இந்நாயனார் திருநாமத்துக் காணியாய்க் கோயிலுழவு மு

9. ற்றூட்டாகத் திருச்சூலஸ்தாபனமும் பண்ணிக் குடுத்து இந்த இலுப்பைக்குடி வயலில் பிராமணர் பக்கல் விலை கொண்டவர்கள் தீயகளவுப் பட்டால் உள்ள பொருள்

பண்டாரத்தை பற்றி நிலம் விடக்கடவார்களாகவும் ஒற்றி கொண்டார் ஒற்றி இழக்கப் போவார்களாகவும் இந் நிலத்தா

10. ல் வந்த அந்தராயம் அதர விநியோகம் அச்சுவரி ஆட் தேவை சில்வரி பெருவரி வெட்டி முட்டாவாளென்று சொல்லக் கடவதல்லவாகவும் இவ்வயலில் சிவபிராமணர் கைகளால் விலை இன்றித் தன் காணியான நிலங்களுக்கு அச்சுவரி ஆட்தேவை மற்றும் ஊரீந்த விழுக்காட்டுப்படி நாயனாற்கே இருப்பார்களாக

11. வும் இட்டு இந்நிலம் இந்நாயனார்க்குச் சந்திராதித்த வல் செல்லக் கடவதாகவும் இதுக்கு ஒரு விலங்கல் சொன் னார் உண்டாகில் நாட்டுக்குப்பின் மூத்தார் பட்டதும் பட்டுச் சிவத்துரோகிகள் பட்டதும் பட்டு அன்றாழ்கோ மற்றவர்க்குத் தெண்டரும் இறுப்பதாகவும் இப்படி சம் மதித்து

12. சநதிராதித்தவல் செல்லக் கடவதாகக் கல்லிலும் செம்பி லும் வெட்டிக் குடுத்தொம் ஆதிசண்டேசுரதேவற்கு கோனாடான கடலடையாதிலங்கை கொண்ட சோழ வளநாட்டு இரண்டுகரை நாட்டு நாடுகள் நகரங்கள் கிராமங்களோம் இக்கோயிற்தாநத்

13. தோமும், இப்படிக்குப் புன்னங்குடி குன்றன் தேவநாந தென்னவதரையன் எழுத்து. இப்படிக்கு பரம்பையூர் நம்பு செய்வான் எழுத்து. இப்படிக்கு சிகாநல்லூர் வளவதரையன் எழுத்து. இப்படிக்கு காரையூர் செங்கதிற் சோழ மூவேந்த வேளார் எழுத்து

14. நெருஞ்சிக்குடி வீரராசேந்திர சோழ மூவேந்த வேளார் எழுத்து. கீழத் தணியத்து வீரசோழ சோழவேளார் எழுத்து. விசலூர் குலதீப வேளான் எழுத்து. அண்ண வாயில் வளவன் பல்லவ தரையன் எழுத்து. புதுவூர் பெரியதேவன் எமுத்து. சுந்தர சோழபுரத்து

15. த்தென் கோனாட்டு வேளான் எழுத்து. இப்படிக்கு கீழ்மணநல்லூர் இராசேந்தி வேளான் எழுத்து. வேம்ப னூர் ஈசான தேவன் எழுத்து. மேநெல்வேலிப் பொற் காரிய சூரியதேவன் எழுத்து. திருநலக் குன்றத்து அன்பாண்டான் எழுத்து நம்பி எழுத்து.

16. குலோத்துங்க பல்லவதரையன் எழுத்து. கச்சியராயன் எழுத்து. இவை விழிஞ்ஞத்தரையன் எழுத்து. இவை ஆளவந்தா நோக்கனான அற்புதக் கூத்தபட்டன் எழுத்து. இவை ஆளவந்தாந் திருவொத்த சாமமழகியான் எழுத்து, இது பெருமாள் உடையான் எழுத்து.

17. இப்படிக்கு வடுகன் பிள்ளானான ஆலால சுந்தரபட்டன் எழுத்து. இவை கோயிற் கணக்கு பெரியநாட்டுப் பிரியன் எழுத்து. குடுக்குந் தியாகி வேளான் எழுத்து. நாட்டாரும் தானத்தாரும் அருளிச்செய்ய இப்பிடிபாடு எழுதினென் இக்கோயிற் கணக்குக் குன்றன் திருநலக்குன்ற

18. முடையான் எழுத்து இது பன்மாஹேஸ்வரரக்ஷை.

**சிகாநாதர் கோயில் இரண்டாம் பிரகாரம் தென் சுவர்க் கல்வெட்டு** ***(பு. கோ. க. 603).***

*1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண் டிய தேவற்கு யாண்டு 7-வது கோனாடான கடலடையா திலங்கை கொண்ட சோழ வளநாட்டு வயலக நாட்டுப் புல்வயல் அரசு கண்டதேவன் அரசகளஞ்சப் பிறந்தானான அயிலையராயனென் என் காணியான கரந்தூர் வயலில் கரந்தூற்...ன்*

*2. சுந்தர சோழன் குளத்தாலும் புதுக்குளத்தாலும் சுடு காட்டுக் குளத்தாலும் நீர் பாய்ந்து நெல்விளையும் நீர் நில மான கரந்தூர் வயலில் . . . . . . ம் கிணறு மூன்றும் சுடு காட்டு வயலில் . . . . . ம் கிணறு இரண்டு ஆக . . . பம் கிணறு அஞ்சும் இவையிற்றில் மரங்களும் விலைக்*

*3. குறவிற்பேன் கொள்வீருளரோ வென்று ஒருகாலாவது மிருகாலாவது முக்காலாவது முற்கூற இம்மொழி கேட்டுக் குன்று சூணாட்டுத் திருநலக் குனறத்து உடையார் திருநலக் குன்றமுடைய நாயனார் கோயில் ஆதிசண் டேஸ்வர தேவகன்மி கோயிற் க*

*4. ணக்கர் கொள்வோமென்று பிற்கூற முற்கூறிய அயி லையராயானேன் நான் விற்கின்ற கரந்தூர் வயல் நிலம் நான் மாவரை கிணறு மூன்று இதில் வயக்கல் நிலம் இரண்டு மாவ ரைக்காணி முந்திரிகையும் இதன் தென்கீழ் மூலை பறிகால் நிலமுந்*

5. திரிகையும் ஆகநிலம் இரண்டு மாக்காணிக்குப் பெரு நான் கெல்லையாவது கீழ் பாற்கெல்லை...டிய வாய்க் காலுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை கிழக்கோடிய வாய்க் காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை சுந்தர சோழன் குளத்து இறக்

6. கிக் கட்டின கரைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை...

**இரண்டாம் கோபுர வாயிலின் வலதுபுறச் சுவர்***(பு.கோ.க.651)*

1. தென்னவன் செய்ய பெருமாள் திரு
2. மதுரை மன்னவன்றன் மால்களிற்
3. று வில்லிக்கும் பொன்னி நாட்டோலி
4. க்குந்தானை அபையன் குலமகளிர்
5. தாலிக்கு மொன்றே தலை.

**அதே இடத்தில்** *(பு. கோ. க. 652).*

1. பொன்னி வள ந
2. ாடு பாணன் பெறப்
3. புரந்தான் சென்
4. னி திருமார்பிற் செ
5. யல் திட்டினான் முன்
6. னே புரமெறிவார் ம
7. ண் சுமக்கப் பூ பாரங்
8. காத்தான் தரமறியான்
9. மீனவர் கோன்தான்.

**இரண்டாம் கோபுரவாயிலின் இடப்புறச்சுவர்***(பு.கோ.க.653).*

1. மால்விட்ட படை துரந்து வடு
2. கெறிந்த மகதேசன் வடிவேல்வா
3. ங்க கால்விட்ட கதிர்முடி மேலிந்தி
4. ரனைப் புடைத்தது முன்கடல் போய்
5. வற்ற வேல்விட்ட தொரு திறலுமுகலிட்
6. ட தனி விலங்கும் வெற்பிலேறச் சே[ல்]
7. விட்ட பெ[ரு] வலியுமாங்கே விட்...ட
8. ந்தான்(த்) தென்னர் கோவே.

**அதே இடத்தில்** *(பு. கோ. க.654).*

1. *வேற்றுற முன் வேற் செய்*
2. *ய கொற்கையர் கோமா*
3. *ன் பரிக்குந் தோற்றகழல் வ*
4 *ளவன் சோணாட்டிலேற்றும்*
5. *புகையாற் குவளையாம் பூங்கு*
6. *முதம் புண்ணீர் கயாற்றிற் சேர் க*
7. *முநீராம்.*

**அதே இடத்தில்** *(பு. கோ. க. 655).*

1. *கன்னி வளனாடன் காவேரி(னாடா)ள*
2. *ச் சென்னி விழுந்தோடுஞ் சேவடிகள்*
3. *பொன் இரையெரி காலுங்கான நட*
4. *ந்திச் சென்னியையுங் கரிகாலனாக்*
5. *கிட(வே)வா காண்.*

**குகைக் கோயிலிக்குத் தென்புறப் பாறையில்** *(பு.கோ.க.673).*

1. *பாரோங்கு கொற்றக்கொடை வாணன் பல்புவி*
2. *த்தேரோன் தி(ரு) வுத்திராட நாள் பெருவமைக்குன்*
3. *றடர் மாலியானைக் கோவெந்தர் வீற்றிருப்ப*
4. *ரின்றெடான் இன்செ(றட)ான் என்று.*

**சிகாநாதசுவாமி கோயில் இரண்டாம் கோபுரவாயில் வலது புறம்** *(பு. கோ. க. 674).*

1. *சென்னி புலிக்கொடியும் தெ*
2. *ன்னர் கயல் கொடியும்*
3. *மின்னும் கழல் பிறையோன்*
4. *விற்கொடியும் மன்னு*
5. *ம் வருகைக் கொடைத்*
6. *திருமால் மாவ(ா)லிவாணந்த*
7. *ன் கருடக் கொடி கொடியா*
8. *ம் காண்.*

**தம்பிக் கிணற்றுக்குச் செல்லும் பாதையில் உள்ள பாறையில் உள்ளபாடற் கல்வெட்டு.** *(பு.கோ.க. 676)*

1. *மன்னாடு பூங்கழலான் வாணற்கு இளங்கோமான்*
2. *அந்நாள் வடுகெறிந்த ஆர்வத்தால்-இன்னம்*
3. *மறம்கால்வேல் அண்ணல் வரும் வரும் என்றேங்கி*
4. *உறங்கா வடவேந்தர் ஊர்.*

**அய்யனார் கோயில் பின்புறப் பாறைக் கல்வெட்டு**
*(பு.கோ.க. 678).*

1. *ஸ்வஸ்தி ஸ்ரீ வீரமாகதன் ராராதேவன் பொள்பரப் பினான் ம*
2. *கதைப்பெருமாள் மகதைப் பெருவெள்ளம் வாராதாகில்*
3. *பெருவெள்ளப் பெருந்தூவி போகாதாகில் இட்ட திட்டுக் கு ஒ*
4. *ன்றுக் கொறணர் குடுக்கக் கடவது உ இழைத்தபடியிது வோவெங்*
5. *கணாவென்றழைத்த வழுகுரலே யான் தழைத்த குடைமன்*
6. *னவர் கோன் வாணன்வடிவேலால்தோற்றுடைந்ததென்ன*
7. *வர் கோன் போன திசை.*

**குடுமிநாதர் கோயில் இரண்டாம் கோபுரவாசல் இடப்புறம்** *(பு. கோ. க. - 679).*

1. *வன்படையார்*
2. *தேவியர்தம் மங்*
3. *கல னாண் தட்டா*
4. *ணிக்கன் பரிய*
5. *வோராணி யாகு*
6. *மே யின்பப் பரராசர்*
7. *கோபாலன் பல்லவ*
8. *ர் கோன் கோளிவீ*
9. *ர ராயன் சிங்கா*
10. *ர வாள் உ*

**சிகாநாதர் கோயில் தென்புறச் சுவர்.** *(பு.கோ.க. 906)*

1. *உ விக்கிறம ஷு வைசாக மீ 25 உ குடுமியார்மலை நயினார் ஸ்ரீ பண்டார*

2. திருவாசல் காரியத்துக்கு கடவர் தானத்தார்ரோம் மேற் படியூர்
3. வலைகுன்று சூழ்நாட்டு முத்திரையன் கோனாட்டு முத்திரையர்
4. உள்ளிட்டார்க்கு பிடிபாடு பண்ணிக் குடுத்தபடி பின்னுக் கு யி
5. ந்த ஊரிலே சாவு செத்தால் கட்டையுமிட்டு முக்காட்டு மிட்டுத் தீ
6. ச்சட்டியுங் கொண்டு சுளுந்துக் கொழுத்த போய் சவங் காத்து
7. நின்று சுட்டு நடக்கையில் யிக்காரியம் செய்ய யினி வகை யாது என்று
8. கும் போய்யிருக்கையில் யிந்தக் காரியமட்டும் வேண்டாம் என்றுங்
9. கட்டளை யிடுகையில் மற்றப்படிக்கு நன்மைக்கு பந்தல் சுளுந்து கழுங்க
10. யிலை தகறற்றுஞ் செய்யவும் குறைவறுப்பஞ்செய்யவும் நன்மைக்கு உண்
11. டான முறைமை எல்லாஞ் செய்யவும் கொ உளம் எரி கரும்பயிறையம்
12. யிராசகரமட்டம் எனப்பாடும் பண்ணி தானத்தாற்கும் ஊராற்கும்
13. உள்ள காட்சி பல சுவந்தரமுண்டான சுவந்தரமுந்
14. செய்து சுகத்திலே யிருக்கக் கடவாராகவும். யிற்படிக்கு
15. அதிகாரம் சிவந்தெழுந்தார் எழுத்து பரமேசு பட்டர் எழுத்து
16. சிவப்பிரகாச பட்டர் எழுத்து சிகாரியஞ் செய்வார் எழுத்து
17. கோயில் கணக்கு குடுமி கோ நாட்டு வேளான் எழுத்து உ

**அதே இடத்தில்** *(பு.கோ.க. 926).*

1. சுபமஸ்து மன்மத ஷு ஆனி மீ 8 உ நாயனார் குடுமியார் நாயினார் ஸ்ரீ பண்டாரக் காரியத்துக்குக் கடவார்
2. விசலூர் கோனாட்டு முத்திரையன் செலிந்திவன முத்திரை யன் உள்பட்டாற்கு கல்வெட்டிக் குடுத்த
3. படி இவர்கள் பட்டடை காத்தும் பிணத்தின் முன்னே முக் காடு இட்டும் நடந்தபடியினாலே இவர்களை
4. பிறவூர் வலையர் சாதிநீக்கி கீனம் பண்ணின படியினாலே இவர்கள் குடிபோயிருக்கையில் மல்லப்ப
5. னாயக்கர் பல்லவராயர் பண்டார உத்தாரமாக பட்டடை காவலும் முக்காடு இடவும் வேண்டாம் என்
6. று கட்டளையிட்டபடியினாலே இந்தப்படி சந்திராதித்த வரையும் நடத்தக் கடவோமாகவும் இது காரியத்துக்கு
7. யாதாம் ஒருத்தர் அகுதம் பண்ணினால் கெங்கைக் கரை யிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போக
8. கடவதாகவும் இப்படிக்கு தானத்தர் பரமேசுரபட்டர் எழுத்து சைவப் பிரகாச பட்டர் எழுத்து
9. சீகாரியஞ் செய்வார் எழுத்து கோயில் கணக்கு கோணாட்டு வேளார் எழுத்து மல்லப்ப
10. னாயக்க பல்லவரையர் காரியத்து கடவார் தையலா பிள்ளை எழுத்து விசலூர் வெள்ள எழுத்து
11. மருங்கூர் சேவக முத்தரையன் பிடாரன் எழுத்து.

**இரண்டாம் கோபுரவாயில் வலது புறம்** *(பு.கோ.க. 960)*

1. நள வருஷம் ஆவணி மீ 20 கோனாடான கடலடை யாதிலங்கை கொண்ட சோழவள
2. நாட்டு குன்று சூழ் நாட்டுப் பரம்பையூர் செருந்தா நம்பு செய்வாரும் பாண்டியனார் மகன் வன்னி
3. யர் உள்ளிட்டாரும் திருச்சிராப்பள்ளி உடையார் அங்கி ஷத்துக்குக் கடவ உதையப் பெருமாளும்
4. இன் மூவர் உள்ளிட்டாரோம் இன்னாட்டுப் பகைத் தலைப்பாடி காவலான கீழைக்குறுச்சி ஊராளிகளில்

5. வழித்துணையான மாவலி வாணாதராயன் உள்ளிட்டா ரும் சோழ கோன் பரையர் மகன் சூருண்டாற்கும் பகைதீ

6. ந்து காவமுறி குடுத்த பரிசாவது முன்னாளிலெ செய்யான் மாவலி வாணாதராயன் பள்ளர் பசகள் ஓடிப்போய் நெருஞ்சிக்

7. குடியிலே இருக்கையில் இவர்களூர் மாடும் அழித்து இந்தப் பள்ளரையும் பிடித்துக் கொண்டு வருகச்சிதே இந்த

8. நெருஞ்சிக்குடி ஊரார் பரம்பை ஊருலே கூப்பிட்டு வருகையில் கூப்பிட்டு படைக்கச் சென்று சிற்றண்ணல் வாசலில்

9. செங்குளத்திலே சென்று முட்டி செய்யான் மாவலி வாணாதராயன் உடனே படையாய் நம்பு செய்வார் பாண்டியனா

10. ர் படுகைஇல் இப்பழி கேட்பதாக சிற்றம்பலவரான நம்பு செய்வார் இரண்டு கரை நாட்டையுங் குவித்து ஒருமை முறியும் இட்

11. டு இவனை எழச் செய்வதாக இவன் வாசலிலே படையாய் பொருகச்சே சிற்றம்பலவரான நம்பு செய்வாரும் இவர் மகனார் திருச்சி

12. ராப்பள்ளி உடையாரும் பட்டு இது...ருதுமந்றான்... யிலிலே படையாகச் சென்று படைத்து செய்யான் மாவலி வாணாத ராயன்

13. மச்சுனன் சிலம்பனும் பட்டு மாடுகன்றும் அடித்து போன பின்பு இத்தாலும் பகை தீராதபடியாலே கம்பண உடை யார் ராச்சியம் ஆ

14. னபின்பு பிரதானிகளிலே இராமரசர்காரியம் ெ...ா...ப்பன் இன்னாட்டுக் கடவதாக வந்த கீழைக் குறுச்சியிலே இருக்கை இல்

15. இவரை ஆளாகப் பிடித்து இவற்கு வேண்டும் அத்தமுங் குடுத்து அவரைக் கொண்டு இச்செய்யான் மாவலி வாணாத

16. ராயனையுங் கொன்று எங்கள் பழியுந் தீந்து கொண் டோம் செருந்தரா நம்பு செய்வாரும் பாண்டியனார் மகன்

17. வன்னியர் உள்ளிட்டாரும் திருச்சிராப்பள்ளி உடையார் அங்கிசத்துக்குக் கடவ உதையப் பெருமாளும் செய்யான்
18. வழித்துணையான மாவலிவாணாதராயன் உள்ளிட்டாரும் சோழகோன் பரையசூருண்டான் உள்ளிட்டாரும் எங்களு
19. க்குக் கடவ பழியும் அழிவும் தழும்பு மற்றும் எப்பெயற் பட்டதுவும் நாங்கள் கடவபழியும் அழிவும் மற்றும் எ
20. ற்பெற்பட்டனவும் சந்திராதித்த வரைக்கு தீந்து குடுத் தோம் செருந்தாந் நம்பு செய்வாரும் பாண்டியனார் மகன் வன்
21. னியர் உள்ளிட்டாரும் திருச்சிராப் பள்ளியுடையார் அங்கி சத்துக்குக் கடவ உதையப் பெருமாளும் வழித்துணை
22. யான மாவலிவாணாதராயன் உள்ளிட்டாரும் சோழ கோன் பரையன் சூருண்டான் உள்ளிட்டாரும் உறவா
23. ய் சந்திராதித்த வரைக்கு இந்தப்(படி)க்கிமாவலி வாணாத ராயர் உள்ளிட்டாரும் சூருண்டார் உள்ளிட்டா
24. ரும் நாங்களும் இப்பகையை நோக்கி எற்றச்...கடவதல்ல வாகவும் சந்திராதித்த
25. வரைக்குத் தீந்து குடுத்தோம் நம்புசெய்வாரும் வன்னியர் உள்ளிட்டாரும் உதையப் பெருமாளும் மாவலிவ
26. ாணாதராயன் உள்ளிட்டாற்கு சூருண்டான் உள்ளிட் டார்க்கும் பகை திந்து திருமலையிலே கல்லு வெட்டிக்கு
27. டுத்தோம்
28. இப்படிக்கு நம்புசெ
29. ய்வார் எழுத்து
30. வன்னியர் உள்ளி
31. ட்டார் எழுத்து
32. உதையப் பெருமா
33. ள் எழுத்து
34. இடங்கொண்டார்
35. எழுத்து விழுப்பா
36. தராயர் எழுத்து
37. காங்கேயர் எழுத்து

38. செயங்கொண்ட வேளர் எழுத்து
39. பரம்பையூர் கணக்குவை
40. யந்தொழ நின்றான் எழுத்து
41. இப்படிக்கு அறிவென் புன்
42. னங்குடித்தென்னவதரையர்
43. எழுத்து புதுவூற் செம்பிய
44. ன் பல்லவரையர் எழுத்து.

**குகைக்கோயில் படிக்கட்டு** *(பு.கோ.க. 1089).*

1. ரெகுநாதராய தொ
2. ண்டமானார் உபையம்

**சிகாநாதசாமி கோயில் தென்புறச் சுவர்** *(பு.கோ.க. 1090).*

1. சுபமஸ்து ஸ்ரீ வென்று மாலையிட்ட
2. பல்லவராயர் குமாரர் சீரங்கனாத பல்லவராயர்
3. தாமே இருக்கத் திருமேனி வென்றுமாலை இட்டான்
4. பல்லவதரையன் தன்மம் சந்திரசேகரர் நாச்சியாரும் திரு
5. க்குடுமியிற் சாத்திற் கொள்க...யிவத் தன்மமாகை
6. யில் திருக்கை வழக்கம் திங்கத்திவசம் திருக்காத்திகை
7. 5 ணாள் சன்னதித் திருக்கை வழக்கம் பெ...
8. கு...

# பாமரரின் பக்திப்பாடல்கள்

**பிடாரியம்மன்**

அக்கச்சா வூரணி தெக்குக் கரையிலெ
    அரக்கு மஞ்சள் குளிக்கையிலே
தெக்காலே நின்று தெரிசனை பண்ணுவார்
    தேமயிலே முத்துவீராயி
ஒட்டறதட்டி ஒழுங்கலிட்டு
    ஓடுறதண்ணிய காவல் வச்சி
சட்டஞ்செலுத்திய பிடாரி ஆயி
    சவ்வாரி வாரத பாருங்களே
தெருவக் கூட்டி மணப் பரப்பித்
    தென்னம்பூக் கொண்டு தான்பூச்சூடி
தெருவிருக்கிற சிங்கா தனத்தத்தான்
    திரும்பிப் பாரடி மாரியம்மா
வாசலக் கூட்டி மணப் பரப்பி
    வாழப்பூக்கொண்டு பூச்சூடி
வலவிருக்கிற சிங்கா தனத்தத்தான்
    வந்து பாரடி மாரியம்மா
சொளு சொளுனு மழை பொழிய
    துப்பட்டி தண்ணி அலைமோத
சொகுசுக் காரியாம் நல்ல பிடாரி
    தோகை மயிலேறி வாராளாம்.

**லோகநாயகி**

செம்புலெ தண்ணி தெளிஞ்சிருக்காம்
    கொம்புலெ மாங்கா செவந்திருக்காம்
தெளிஞ்ச தண்ணிக்கும் உருண்ட முத்துக்கும்
    தெய்வலோகம் போல லோகநாயகி

**கருப்பண்ணன்**

கச்சையிறுக்கி கருங்கச்சை சுங்குவிட்டு
    கையிலே வாணத் தடியெடுத்து

விசித்திரமான சிலம்பங்க செய்யுற
விந்தயப் பாருங்கடி தோழியரே
முத்து குத்திய பாறையிலே நல்ல
முப்பதுபண்ணி யடைகாக்க
தப்புன பண்ணிய சரியாக் குத்துறநம்ம
சாமி கருப்பண்ண வாராரே
கலகலனு மழை பொழிய
கழிஞ்சித் தண்ணி அலைமோத
காரியக்காரரு நல்ல கருப்பையா
கடிக்க முன்னாலே பாருங்களே
காரையக்காரையப் பாருங்களே கரை
கட்டிப் படந்ததே பாருங்களே
காரைப் பழம்போல கருப்பையா
கடிக்க மின்னலெ பாருங்களே
நடுக்கடலிலெ ரெண்டு மரம்
நல்ல கருப்பையா வச்சமரம்
பூவும் புணருமா காய்க்குதடி
பொன்னு கருப்பையா வச்சமரம்.

**குடுமியான்மலை**

சாலையோரஞ் சந்தைப்பேட்டை
சமுக்கமுள்ள குடியாமலை
இன்பமான புதுக்கோட்டைய
எப்பப் போயி பாக்கப்போறோம்
மார்க்கட்டாம் மருங்காபுரி
மத்துசமம் தம்பிக்கேணி
கூரைக்கட்டாங் குடியாமலை
குயிலிருந்தே கூவுதடி
காச்ச முருங்கை யெல்லாம்
கல்பதிச்ச குடியாமலை
கல்பதிச்ச குடியாமலை
காலையிலெ லேடியாவாம்
பூத்த முருங்கை யெல்லாம்
பொன் பதிச்ச குடியாமலை
பொழுதோட ஆறுமணிக்குப்
போனுவச்சே பாடுத்டா.